
# செல்வவிநாயகர்



University of Jaffna
235.4
THU
250218(AR; Main)

...ணவி அரசடிப் பிள்ளையார் கோயில்
குடமுழுக்குப் பெருவிழாச் சிறப்பு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே "

தரம் 5 முதல் க. பொ. த. உயர்தர வகுப்புக்கள்
வரை தகுதியும் அனுபவமும் நிறைந்த
ஆசிரியர் குழாமினால்
கல்விச்சேவை வழங்கப்படும்

# சுப்ரா SUBRA கல்வி நிறுவனம்

சித்தன்கேணி

நிர்வாகி : S. ஐங்கரன்

---

" தஞ்சம் என்றுனைச் சார்ந்தனன் எந்தை நீ தானும்
இந்தச் செகத்தவர் போலவே
வஞ்சம் எண்ணி இருந்திடில் என் செய்வேன் வஞ்சம் அற்ற
மனத்துறை அண்ணலே
பஞ்ச பாதகம் தீர்த்தருளென்று நின் பாத பங்கயம்
பற்றினன் பாவியேன்
விஞ்ச நல்லருள் வேண்டித் தருதியோ விளங்கும்
சித்தி விநாயக வள்ளலே.

**பாலன் மில்ஸ்**
மாவடி, வட்டுக்கோட்டை.

**கஜலக்சுமி மில்ஸ்**
சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை.

## பாலன் தொலைபேசி சேவை
## BALAN TELECOMMUNICATION SERVICE

Prop: R. S. Thanapalan

தொலைபேசி இலக்கம்: உள்நாடு - 070-212624
வெளிநாடு - 0094-70-212624


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# செல்வ விநாயகர்



துணவி அரசடிப் பிள்ளையார் கோயில்

## குடமுழுக்குப் பெருவிழாச் சிறப்பு மலர்

வெளியீடு :

துணவி அரசடிப்பிள்ளையார் கோயில் வழிபடுவோர் சபை

19/2/92

University of Jaffna
250218
Library

250218

250218

UNIVERSITY OF JAFFNA LIBRARY

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

குடமுழுக்கு நாள் :

பிரமாதி வருடம் ஐப்பசி 7 ஆம் நாள் ( ரேவதி நட்சத்திரம் )

24 – 10 – 1999

மலர் வெளியீட்டு நாள் :

பிரமாதி வருடம் கார்த்திகை 22 ஆம் நாள் ( 08 - 12 - 1999 )

---

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | விநாயகரே சரணம் | — 01 |
| 2. | வாழ்த்துச் செய்திகள் | — 03 |
| 3. | விநாயகர் தோத்திரங்கள் | — 10 |
| 4. | காரிய சித்திமாலை | — 13 |
| 5. | திருப்பொன்னூஞ்சல் | — 15 |
| 6. | துணவி அரசடியில் கோயில் கொண்ட பிள்ளையார் | — 18 |
| 7. | பிள்ளையார் திருவுருவம் | — 23 |
| 8. | கணபதி வழிபாடு | — 26 |
| 9. | விநாயக பரத்துவம் | — 30 |
| 10. | விநாயகரின் திருவுருவங்கள் | 34 |
| 11. | முக்கண் அரசு மகிழ் அத்தி முகத்தான் | 46 |
| 12. | எளிதாய் வந்து இனிதாய் அருளும் விநாயகர் | 49 |
| 13. | விநாயகரும் அகத்தியரும் | 51 |
| 14. | அப்பர் தேவாரத்தில் விநாயகர் | 52 |
| 15. | ஓங்கார கணபதி | 56 |
| 16. | பிள்ளையாரின் ஆயுதங்கள் | 60 |
| 17. | கணபதி ஹோமம் | 62 |
| 18. | கணபதி பூஜை கைமேல் பலன் | 65 |
| 19. | வழிபாட்டு முதன்மை | 67 |
| 20. | விநாயகவடிவின் தத்துவக் கருத்து | 71 |
| 21. | காணாபத்யம் | 73 |
| 22. | ஆலய அமைப்பின் தத்துவம் | 75 |
| 23. | கிரியைகள் நிறைந்த கும்பாபிஷேகம் | 78 |
| 24. | பிள்ளையாருக்குத் தொண்டாற்றி | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

குடமுழுக்கால் குளிர்ந்து, அருள்
நிறைந்து, துணவிப் பதியில் மீண்டு
மிடங்கொண்டருள் புரியுமெங்கள்
கணநாதன் திருக் கழலிணையில்
குடமுழுக்குச் சிறப்பிதழாம் இச்
'செல்வவிநாயக' ரெனு(ம்) மலரை விருப்
புடனே சமர்ப்பணமாக்கிப் பெரும்
பேறெய்தினோம் மகிழ்ந்து நாமே;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணவி அரசடிப் பிள்ளையார் கோயில்

2355
THM
B/P



கர்ப்பக்கிருகத்தில் உறைந்து அருளாட்சி புரியும் மூலமூர்த்தியின் அருள்த் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

University of Jaffna
250218
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# விநாயகரே சரணம்



சுக்லாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்ப்புஜம்
ப்ரசன்ன வதநம் த்யாயேத்
சர்வ விக்னோப சாந்தயெ!!

காயத்ரி

தத்புருஷாய வித்மஹே
வக்ரதுண்டாய தீமஹி
தன்னோ தந்தி ப்ரசோதயாத்.

பிரார்த்தனை

கஜாநனம் பூதகணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பூ பலஸார பஷிதம்
உமாசுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்னேசுவர பாத பங்கஜம்

கனாநாம் த்வா கணபதிம் அவா மஹே
கவிம் கவீனாம் உபமஸ்ர வஸ்தவம்
ஜ்யேஷ்ட ராஜம் பிரும் மணாம் ப்ரும் மணஸ்பதே
ஆனச் ருணவன் ஊதிபி: சீதசாதனம்!!

மாதாச பார்வதிதேவி
பிதாதேவோ மகேஸ்வர
பாந்தவா சிவபக்தாக்ச்ச
ஸ்வதேசோ புவனத்யம்!!

❋ ❋ ❋

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னவனே யானை முகத்தவனே முத்திநலம்
சொன்னவனே தூய்மைச் சுகத்தவனே மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சோதரனே
தற்பரனே நின்தாள் சரண்.

※

வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுந்து வரும்
வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளி ஓடும் தொடர் வினைகளே.

※

பாஹி பாஹி கஜானனா பார்வதி புத்ரா கஜானனா
மூஷிக வாஹன கஜானனா மோதக ஹஸ்தா கஜானனா
சாமர கர்ணா கஜானனா விளம்பித ஸூத்ரா கஜானனா
வாமன ரூபா கஜானனா மஹேச்வர புத்ரா கஜானனா
விக்ன விநாயக கஜானனா பாத நமஸ்தே கஜானனா.

※

ஒற்றை அணிமருப்பும் ஓரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் - பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனத்தில் எப்பொழுதும்
கொண்டக்கால் வாராது கூற்று.

※

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகுமாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

※

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணி
கற்றிடுமடியவர் புத்தியிலுறைபவர்
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவோனே
முத்தமிழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவனுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துசமயப் பேரவைத் தலைவரின்

# வாழ்த்துச் செய்தி

### "அருட் கற்பகப் பயனைச் சுரந்து வாழி"

பொன்பெருகும் வட்டு நகர்த் துணைவியூரில்
போதிமரத் தடிமேவும் விநாயகர்க்கு
இன்பநலம் பெருகும்கும் பாபிஷேகம்
இனிதியற்றித் தெய்வீகம் குளிரச்செய்து
முன் பயிலும் கணேசரின் தொண்டர் கூட்டம்
முதன்மைதரும் அடியார்கள், பொருள் கொடுத்தோர்
அன்புவளர் பூசைபுரி அந்தணர்கள்
அருட் செல்வ சுகம் செழித்து வாழி வாழி.

திருநீறும் சிவமணியும் ஐந்தெழுத்தும்
தேசமெலாம் புகழ்செழிக்க தர்மம் நீதி
கருணைமனம் கதித்த இதி காசங்கள், நற்
கலைவளங்கள், புராணங்கள், வேதமாண்பு
குருவரம்பு, விதிமாறாப் பூசைவண்மை
குலவு சமுதாயத்தில் வளம்சிறக்க
அரசடிவாழ் பிள்ளையார் அபிஷேகம் சீர்
அருட்கற்ப கப்பயனைச் சுரந்து வாழி.

6 - 11 - 99

அருட்கவி. சீ. வினாசித்தம்பி
தலைவர்
இந்துசமயப் பேரவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேக பிரதம சிவாச்சாரியாரின்

# ஆசிச் செய்தி

### "ஆலயமும் ஆன்மீகமும்"

எத்தனை எத்தனை பிறவியுள் மானுடப் பிறவி எடுத்த ஆன்மாக்களுக்கு இறைவனுடைய அனுக்கிரகத்தை தரவல்லது ஆலயமாகும். ஆ- என்றால் ஆன்மா லயம்- என்றால் வசப்படுத்தல் எனவே ஆன்மா லயப்படும் இடம் ஆலயம் எனப்படும். எமது உடம்பைப் போலவே திருக்கோயிலும் அமைக்கப்பட்டுள்ளது. முதலில் கர்ப்பக் கிருகம் அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்நானமண்டபம், அலங்காரமண்டபம் சபாமண்டபம் என ஆறாக அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆறும் எமது உடம்பின் கண் உள்ள மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என ஆறு ஆதாரங்களையும் குறிக்கும்.

நாற்புறமும் மதில் கட்டி ஒரு பக்கம் பெரிய வாசல் அமைத்து அங்கே இருக்கும் கோபுரம் தூலலிங்கம் எனப்படும். நாம் ஆலயத்தைச் சமீபித்ததும் கோபுரமாகிய ஸ்தூலலிங்கம் எமக்குத் தென்படும். உடனே நம்மனதில் ஒருவித தெய்வசிந்தனை தோன்றும். "கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பது பெரியோர் வாக்கு" இதுவே இராசகோபுரம் என்றும் அழைக்கப்படுகின்றது. இறைவனின் திருவிளையாடல் களில் வருகின்ற உருவங்களும் தேவர்களின் உருவங்களும் பிறவும் இதன் கண் அமைக்கப்பட்டிருக்கும் இவைகளைப் பார்க்கும் போதெல்லாம் இறைவனின் எண்ணம் மேலிட்டு ஒருவித தெய்வீக உணர்ச்சி தோன்றும். கோபுரம் மூன்றுவாசல் ஐந்துவாசல் ஏழுவாசல் என்ற முறைப்படி அமைந்தும் உள்ளன. கோபுரத்தைத் தாண்டி உள்ளே சென்றதும் நாம் காண்பது பலிபீடம். பலி ஏற்கக் காத்திருக்கின்ற பலிபீடமாகிய பத்திரலிங்கத்தை வீழ்ந்து வணங்கும் பாவனையாக வணங்க வேண்டும். அப்படி வணங்கும் போது எமது உள்ளத்தில் உள்ள காமம், வெகுளி, மயக்கம் முதலிய எல்லாம் பலிகொடுத்து விட்டு இறைவனின் அன்பு ஒன்றையே மனதில் வைத்துக் கொள்கின்றோம் என்பதே கருத்தாகும். எனவே நம் கீழான இயல்புகள் யாவையும் பலிபீடத்தில் பலிகொடுத்து விட்டு அன்பு என்னும் தெய்வீக உணர்வோடு இறைவனைத் தரிசிக்கச் செல்கின்றோம் என்பதாகும்.

கோயிலின் கர்ப்பக்கிருகம் திரைச்சேலையினால் மறைக்கப்பட்டிருக்கிறது. மாயை யாகிய திரைச்சேலை இறைவனை அறியாதபடி ஆன்மாவின் அறிவை மறைத்துள்ளது. ஞான ஒளி வரும் வரையும் அடியவனாகிய ஆன்மா தவம் கிடத்தல் வேண்டும். நாம் கோவிலுக்குச் சென்று திரைச்சேலை நீங்கும் அளவும் காத்திருக்கின்றோம். மணியோசை கேட்கிறது திரை விலகுகிறது கற்பூர ஆராதனையாலும் விளக்குகளாலும் ஒளி உண்டாகி இறைவனின் திருவுருவக்காட்சி எமக்குக் கிடைக்கின்றது. இதில் எம்மனமே கர்ப்பக்கிருகம் எனவும் மனத்தின் கண் நிகழும் ஞானக் காட்சியே தீபாரா தனையினால் உண்டாகும் ஒளி எனவும் கருத வேண்டும்.

இப்படியான எமது ஆன்மாவின் பரிசுத்தமான வாழ்வுக்கும் பக்தியின் வளர்ச் சிக்கும் துணவிப் பிள்ளையார் ஆலயம் வளர்ந்துள்ளது பெருவாய்ப்பாகும். இப்பிறவியில் ஜன்மம் எடுத்த மானுடர்க்கு ஜெகஜ் ஜோதியாக விளங்கும் விநாயகப் பெருமான் தம்மை நினைந்துருகி வழிபடும் அடியார்கட்கு அல்லல் களைந்து ஆனந்தம் அருளு கிறார். துணவிப் பிள்ளையாரின் திருவருள் உங்கள் அனைவருக்கும் கிடைக்க ஆசிக்கிறேன்.

ஞானியார் தேவஸ்தானம்
அராலி

**பிரம்மஸ்ரீ. செ. க. சிவசுப்பிரமணியக் குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயிற் பிரதம பூசகரின்
# வாழ்த்து

*ஸதாபால ரூபாபி விக்நாத்ரீ ஹந்த்ரீ*
*மஹாதந்தி வக்த்ராபி பஞ்சாஸ்ய மாந்யா!*
*விதிந்த்ராதி ம்நக்யா கணேசாபி தாமே*
*விதத்தாம் சிரியம் காபி கல்யாண மூர்த்தி!!*

என்றுமே பிள்ளையாய் எண்ணினார் இடர் மலையை
எளிதிலழி வீரதிரன்
மன்றவரு மால்யானை மன்னுமுக னாயினும்
பஞ்சாஸ்ய வபிமா னியே
நின்றவரி பிரமரே நேடிவழி பாடுசெய்
நிறை பெயர்க் கணநா யக
கன்றலில் கணேசனே கல்யாண மூர்த்தியே
கழல் தொழக் கனிந்தரு ளுவாய்.

எப்பொழுதும் பிள்ளையார் என்ற திருப்பெயருடன் குழந்தை வடிவினராக விளங்குபவராயினும் தம்மை நினைப்பவர்களுக்கு மலை போலவரும் இடையூறுகளை இலகுவாக அழித்தருளும் வல்லபமுடையவரும்; பெரிய யானையின் திருமுகத்தை உடையவராயினும், விஷ்ணுபகவானும் பிரம்மதேவரும் தமக்குள் தாம்தாமே பெரிது என வாதிட்டபொழுது அவர்கள் மத்தியில் சோதிவடிவில் தோன்றி அருள் செய்த சிவபரம்பொருளே வழிபடும் கணநாய்க மங்கல மூர்த்தியாகியவரும், கணேசன் என்னும் திருப்பெயரை உடையவரும் ஆகிய பெருமானே! துணவி அரசடிப்பதியிலுறைந்து அருளும் நாயகனே! தேவரீருடைய வீரக்கழலணிந்த திருவடிகளை வணங்குகின்ற, திருப்பணிகள் செய்வித்த, செய்த அடியவர்களுக்குச் சிறந்த திருவருள் செய்வீராக!

— சுபம் —

துணவி

பிரம்மஸ்ரீ. ம. கேசவசர்மா

---

# துணவி இந்து வாலிபர் சங்கத்தினரின் செய்தி

விக்கினங்கள் களைந்து இனிய வாழ்வு நல்கும் விநாயகப்பெருமான் துணவி அரசடிப் பதியில் நீண்ட காலமாக எழுந்தருளி அருளாட்சி செய்து வருகின்றார். எம்பெருமானுக்கு மீண்டும் புதிதாயொரு கோயிலமைத்து கும்பாபிஷேகம் செய்யக் கிடைத்த பேறிற்காக மகிழ்கிறோம். இதனையொட்டி எமது கோயில் வரலாற்றைப் பேணவும். சிறப்பிக்கவும் வெளிவரும் மலரை வரவேற்கிறோம்.

— பிள்ளையார் ஆசீர்வதிக்கட்டும் —

இந்து வாலிபர் சங்கம்
துணவி

க. ரவீந்திரன்
தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கோயிற் பரிபாலனச் சபைத் தலைவரின்

# செய்தி

மனித வாழ்க்கை என்பது நம்பிக்கைகளின் அடித்தளத்தில் கட்டியெழுப்பப்படுவது இந்த நம்பிக்கைகளின் சிகரம் இறைநம்பிக்கை ஆகும். எமது வாழ்க்கை சமயத்தோடும் ஆன்மீகத்தோடும் பிரிக்கமுடியாதவாறு இரண்டறக் கலந்திருப்பது இந்த இறைநம்பிக்கையின் விளைவாகவே ஆகும். இந்த இறைநம்பிக்கையும் ஆன்மீக வாழ்வும் எம்மைப் பதப்படுத்தியிருக்கிறது; நெறிப்படுத்தியிருக்கிறது. இந்த நம்பிக்கையின் பலனை எம்வாழ்க்கையில் பல தடவை கைமேல் உணர்ந்திருக்கின்றோம். இது எமது இறைநம்பிக்கைக்கு மேலும் வலுவூட்டியிருக்கிறது. இது உண்மை.

இறை நம்பிக்கையினதும் ஆன்மீக வாழ்க்கையினதும் மத்தியஸ்தானமாக விளங்குபவை கோயில்கள் ஆகும். முற்காலத்தில் தமிழ்நாட்டிலே கோயில்களே கிராமங்களின் ஆட்சிப் பீடம் போல விளங்கின என்பதை நாம அறிவோம். நெற்களஞ்சியங்களையும் மருத்துவச்சாலைகளையும், அறிவூட்டும் பள்ளிகளையும் இன்னும் அவசியமான அம்சங்களையும் தன்னகத்தே அடக்கியதாகக் கோயில்கள் திகழ்ந்திருக்கின்றன. இதனால் தான் 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என நம்முன்னோர்கள் அறிவுறுத்தினார்கள். இன்று அவ்வாறில்லா விட்டாலும், நெறிதவறிப்போகின்ற எமது வாழ்க்கையைச் சீர்படுத்தி நல்வழிப்படுத்த வல்லவனாய் அமைவன கோயில்களே ஆகும். இன்றைய கஷ்டமான சூழ்நிலையில் கோயில்களின் அவசியம் பலராலும் உணரப்படுகின்றது.

அந்தவகையிலேயே முந்நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த எமது துணவி அரசடிப் பிள்ளையார் கோயில் மீண்டும புதிதாகக் கட்டப்பட்டு மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது. இருபத்தைந்து ஆண்டுகளாக கும்பாபிஷேகம் செய்யப்படாதிருந்த எமது கோயிலை மீளமைத்து கும்பாபிஷேகம் செய்யவேண்டிய அவசியத்தை உணர்ந்த உள்ளூரிலும் உலகின் பல பாகங்களிலும் வாழ்கின்ற துணவி மக்களின் பூரண ஒத்துழைப்போடு இத் திருப்பணி கைகூடியுள்ளது. இத்திருப்பணியை நிறைவேற்றத் திருவருள் பாலித்த விநாயகப்பெருமானுக்கு எமது நன்றிகளைக் காணிக்கையாக்குவதோடு இக்கைங்கரியத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எமது பரிபாலன சபையின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களனைவரோடும் துணவி அரசடிப் பிள்ளையாரின் திருவருள் நிலைத்திருப்பதாக.

— நன்றி —

பரிபாலனசபை
துணவி அரசடிப்பிள்ளையார் கோயில்
22 - 10 - 99

நி. அருணாசலம்
தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

கணபதி துணை

# பதிப்புரை

'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று உலகநீதி கூறுகின்றது. இறைவன் எல்லா இடமும் இருக்கின்றான். ஆனால் அந்த இறைவனை ஆலயத்திற்குச் சென்றுதான் வழிபட வேண்டும். பசுவின் உடல்முழுக்கப் பால் பரவியிருந்தாலும் மடியின் மூலமாகத்தான் பாலைப் பெறமுடியும். அதனால்தான் திருக்கோயிலில் வழிபடும் முறைகள், தத்துவங்கள், திருவிழாக்கள் மக்களின் நலன்கருதி நடைபெறுகிறது.

உருவமாக, அருவமாக அருவுருவமாக உள்ள இறைவனை கோயிலுக்குச் சென்று வழிபடுகிறோம். பக்தியுடன், இதயசுத்தியுடன் வழிபட்டால் இறைவனைக் காணலாம். சகல விக்கினங்களையும் போக்கி நல்லருள் புரிவார் விநாயகர். பிள்ளையார் வழிபாடு முதன்மையானது. பிள்ளையாரை வழிபட்டுத்தான் ஒரு காரியத்தைத் தொடங்குகிறோம். பிள்ளையாருக்கு விருப்பமானது அறுகம்புல். சதுர்த்தி தினத்தில் அறுகம்புல் மாலை சாத்தி வழிபடல் சிறந்தது.

இந்தக் கலியுகத்தில் மக்கள் அதிகம் உலக வாழ்வில் ஈடுபடுவதால், சமய அறிவு வழக்கங்கள் குன்றிப் போகின்றது. இந்து சமயச் சிறுவர்களுக்கு சமய அறிவு கற்பிக்கப்படவேண்டும். அவர்களை சமயத் தொண்டுகளில ஈடுபடுத்த வேண்டும். பெரியோர்கள் அதற்கு வழிகாட்ட வேண்டும்.

இந்தவகையில் பிள்ளையார் பற்றிய செய்திகளையும் எமது துணவி அரசடிப் பிள்ளையாரின் வரலாற்றையும் உள்ளடக்கி துணவி அரசடிப்பிள்ளையாரின் அடியார்களினால் இக் கும்பாபிஷேக மலர் வெளியிடப்படுகின்றது. இம்மலரைச் சிறப்பிக்க ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றிகள். துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதத்தை பூ அறுகம்புல் என்பவற்றைக் கொண்டு தினமும் மன, மொழி, மெய்களால் வழிபட்டு நாட்டில் அமைதியும் சமாதானமும் விளங்க வேண்டுமாக!

— நன்றி —

பொருளாளர்
கோயில் பரிபாலனசபை
துணவி.
20-10-99

செ. இராமநாதன்
பதிப்பாசிரியர்
(ஓய்வுபெற்ற நில அளவை உதவி அதிகாரி).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம்

# தொகுப்பாசிரியரின் குறிப்புக்கள்

''அவனருளாலே அவன்தாழ் வணங்கி'' என்றார் மணிவாசகர். உண்மைதான்; இறைவனைப் பணிவதற்கும், அவனது கைங்கரியங்களைச் செய்வதற்கும், கூட 'அவனருள்' அவசியமானதே. அவ்வகையில் எமக்குக் கிட்டியுள்ள பேரருளை நினைந்து பெருமைகொள்கின்றோம். துணவியரசடியானின் காரியங்கள் யாவும் நாம் நினைத்தது போன்று நடந்ததில்லை. நினைத்ததைவிட எத்தனையோ மடங்கு சிறப்பாகவே நடந்தேறியிருக்கிறது. இது எம்மவர்கள் அனுபவத்தில் கண்ட பேருண்மை. ''கும்பாபிஷேக மலர்'' விடயமும் இவ்வாறானது தான். எமது ஆலயத்தின் கும்பாபிஷேகத்தை ஒட்டியும் ஓர் மலர் வெளியிடவேண்டும் என்பது எமது நீண்ட கால ஆசை. ஆம், கடந்த சில ஆண்டுகளாக நான் எனக்குள் வளர்த்துக்கொண்ட ஆசையிது. ஆசைமட்டுந்தான்; நம்பிக்கையில்லை. எமது பொருளாதார நிலை இதற்கு இடந்தரும் என நான் கடைசி வரை நம்பவே இல்லை. கனவாய் கற்பனையாய் இவ்வாசையும் கலைந்துவிடுமென்றே எண்ணினேன். ஆனால் 'பிள்ளையார்' கைவிடவில்லை.

எமது கோயிற் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் நண்பனொருவனோடு ஆலயத்திற்குச் சென்றிருந்தேன். ஆலயச் சூழலை அவதானித்த அவன் 'கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம் என்று கூறப்பட்டிருக்கிறது. நீங்களோ குடிகள் இல்லாத ஊரில் கோயில் கட்டுகிறீர்களே, என வியந்தான். வியப்பு நியாயமானதே. ஆனால்; எமது ஊர் ஒரு காலத்தில் சீருஞ் சிறப்புமாக செழித்திருந்த ஊராகும். இன்று நாட்டில் நிலவும் பாதகமான சூழ்நிலைகளால் ஊர்மக்களில் பெரும்பாலானவர்கள் பல்வேறு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்துவிட்டமையால் சனநெருக்கம் குறைந்து சிறப்பிழந்து காட்சி தருகின்றது. ஆனாலும் இவ்வூர் மக்களை 'துணவி அரசடியான்' கைவிட்டுவிடவில்லை. அவர்களிற் பெரும் பான்மையானோர் இன்று உலகின் பலபாகங்களிலும் சீருஞ் சிறப்புமாக வாழ்ந்து வருகிறார்கள். தாம்பெற்ற சிறப்பான வாழ்க்கைக்கு ''துணவி அரசடிப்பிள்ளை யாரின்'' கருணையே காரணமென அவர்கள் பூரணமாக நம்புகிறார்கள். அவர்கள் பிள்ளையாரை மறவாது நன்றிக் காணிக்கையளிக்க விரும்புகிறார்கள். அதன் விளைவுதான் துணவியில் மீண்டும் புதிதாய் கோயில் எழக் காரணமாகும். அது மட்டுமன்றி கோயிலின் மலர்ச்சியானது எமது கிராமத்தை மீண்டும் பொலிய வைக்கும் என நம்புகின்றோம். பன்னிரெண்டாண்டுகளில் துணவி அரசடியானுக்கு மீண்டும் கும்பாபிஷேகம் நிகழ்கையில் துணவி மீண்டும் செழிப்புற்று எம்மவர்களால் நிறைந்து காட்சி தரும் என நம்புவோம். அது நிற்க; எமது கோயில் தொடர்பான வரலாற்றுச் செய்திகளைப் பேணவேண்டிய தேவையும், உலகெங்கும் பரந்து வாழும் துணவி மக்களுக்கு கும்பாபிஷேக ஞாபகார்த்தச் சின்னம் ஒன்றை வழங்கவேண்டிய அவசியமும், எதிர்காலச் சந்ததியினர்க்கு தகவல்களைக் கடத்த வேண்டிய கடமையும் எம்மைச் சார்ந்திருந்தது. இவற்றின் உந்தலும், எமக்குத் தோன்றிய இபல்பான ஆசையுமே இம்மலரின் பிறப்பாகும். அவனருளாலே இக்கைங்கரியமும் இன்று சிறப் பாக நிறைவேறுகின்றது. விரலுக்கு ஏற்றதுதானே வீக்கம். எம்மளவில் இது சிறந்த மலர்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சிறுமலரில் பயனுள்ள விடயங்களைச் செறிவாக உள்ளடக்க வேண்டும்; பிள்ளையாரைப் பற்றிய விடயங்களாகவே அவற்றைத் தெரிவுசெய்ய வேண்டும் என விரும்பினேன். சில புதிய கட்டுரைகளோடு ஏற்கனவே வெளிவந்த பெறுமதிமிக்க கட்டுரைகளையும் இணைத்து இம்மலரை வடிவமைப்பதே எனது நோக்கம். அவ்வகையில் இம்மலரை அலங்கரிக்கக் கட்டுரைகளை எழுதி உதவிய கட்டுரை ஆசிரியர்களுக்கும் தகுந்த ஆலோசனைகளை வழங்கியதோடு, மீள் பிரசுரத்திற்காகத் தனது சேமிப்பிலிருந்து பொருத்தமான கட்டுரைகளை வழங்கியுதவிய காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் பிரம்மஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களுக்கும் பெரிதும் நன்றிகள். அவ்வாறே இம்மலருக்கு ஆசிச்செய்திகளையும், வாழ்த்துக்களையும் வழங்கிச் சிறப்பித்த பெரியோர்கட்கும் மனமுவந்த நன்றிகளைக் காணிக்கையாக்குகின்றேன்.

மலர் தொகுக்கப்பட்டாயிற்று; அச்சிற்கும் சென்றாயிற்று. வெறுமனே 'கும்பாபிஷேக மலர்' என்றதோடு நிற்காமல, பொருத்தமானதொரு பெயரை மலருக்குச் சூட்டுவது மலரை மெருகூட்டுவதாய் அமையும் எனப்பட்டது. எந்தப் பெயரைச் சூட்டுவது? பல பெயர்கள் மனத்திரையில் வந்து போயின. இறுதியில் 'செல்வவிநாயகர்' என்னும் பெயர் ஏனோ என் மனத்திற்குப் பிடித்துப் போயிற்று. பிள்ளையாரைப் பற்றிய விடயங்களையே இம்மலர் முழுமையாக உள்ளடக்கியிருப்பதனால் இப் பெயர் பொருத்தமானதாய் அமையும் என நினைக்கிறேன். அத்தோடு 'செல்வவிநாயகர்' என்பது அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்களால் துணவி அரசடிப்பிள்ளையாரிற்கு சூட்டப்பெற்ற பெயராகும். பிள்ளையாரிற்கு அருட்கவி அவர்கள் சூட்டிய திருப்பெயரையே பிள்ளையாரின் பாதத்தில் காணிக்கையாகும் இம்மலருக்கும் சூட்டிப் பேருவகை எய்துகிறேன்.

துணவி அரசடிப் பிள்ளையாரின் கும்பாபிஷேகத்திற்கு மலரொன்றை வெளியிட வேண்டும் என சில ஆண்டுகளாகவே உறுதியாக நின்று, இவ் விடயத்தில என்னை ஆர்வத்தோடு ஈடுபடுத்தி, இம்மலரின் பதிப்பாசிரியராய் இருந்து இம்மலர் சிறப்பாக வெளிவர உதவியுள்ளவர் எமது பரிபாலனசபையின் பொருளாளர் திரு. செ. இராமநாதன் ஆவார். உண்மையில் இம்மலர் வெளிவருவதில் அவரின் பங்கு நிராகரிக்க முடியாதது. அவ்வாறே எமது பரிபாலனசபைத் தலைவர் திரு. ந. அருணாசலம், காரியதரிசி திரு. கா. சுப்பிரமணியம் ஆகியோர் தகுந்த ஆலோசனைகளை வழங்கி உற்சாகப்படுத்தியுள்ளார்கள். கோயில் வரலாற்றை எழுதுவதற்குத் தேவையான தகவல்களை உதவி கட்டுரையைப் பூரணப்படுத்திய திரு. கா. சுப்பிரமணியம், திரு. செ. இராமநாதன், ஆகியோரின் உதவியும் மறக்க முடியாதது. அனைவருக்குமென் உளப்பூர்வமான நன்றிகள். இம்மலர்வேலைகளில் நான் சோர்ந்தபொழுதெல்லாம் உற்சாகப்படுத்தி வேண்டிய ஒத்துழைப்பை நல்கிய நண்பர்கள் திரு. சி. சபாநாதன் திரு. சு. ரவீந்திரன் ஆகியோருரும நன்றிக்குரியவர்களே. மலரொன்று பிரசவமாகிறதெனின் அங்கு பொருளாதாரபலம் மிக அவசியமானது. இவ்வகையில் நிதியுதவி யளித்த அனைவருக்கும் விளம்பரதாரர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைக் காணிக்கையாக்குகிறேன்.

எனது ஆசைக்கும் கற்பனைக்கும் நிறைவைத் தருவதாக இல்லாவிடினும் "எம்மால் முடியும்" என நான் நம்பியதற்கு மேலாக சிறப்பாக இம்மலரை வெளியிட முடிந்திருக்கிறது என்பதே உண்மை. நிச்சயமாக நான் எதிர்பார்த்ததைவிட இது அதிகம்' பிள்ளையாரின் கருணையைக்கண்டு வியக்கிறேன். தொடர்ந்தும் நாம் நினைப்பதற்கும் மேலாக நல்ல காரியங்கள் சித்திபெறும் என நம்புவோம்.

துணவி அரசடிப் பிள்ளையாரின் நல்லருள் எம்மனைவருக்கும் கிடைப்பதாக

நன்றி

உதவி. காரியதரிசி
கோயில் பரிபாலனசபை
13 - 11 - 99.

துணவியூர்க் கேசவன்
தொகுப்பாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# விநாயகர் தோத்திரங்கள்

## திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

வியாழக்குறிஞ்சி

திருமுறை: 1

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

பியந்தைக் காந்தாரம்

திருமுறை 2

கரியின் மாமுகம் உடைய கணபதி தாதைபல் பூதம்
திரிய இல்பலிக் கேகுஞ் செழுஞ்சுடர் சேர்தரும் மூதூர்
சரியின் முன்கைநன் மாதர் சதிபட மாநட மாடி
உரிய நாமங்கள் ஏத்தும் ஒலிபுனற் காழிநன் னகரே.

## திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய

## தேவாரம்

திருமுறை 4

காந்தாரம்

பலபல காமத்தராகிப் பதைத்தெழு வார்மனத் துள்ளே
கலமலக் கிட்டுத் திரியுங் கணபதி யென்னுங் களிறும்
வலமேந் திரண்டு சுடரும் வான்கயி லாய மலையும்
நலமார் கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர் நாம்
அஞ்சுவ தியாதொன்றும் இல்லை. அஞ்ச வருவது மில்லை

திருமுறை 5

திருக்குறுந்தொகை

நார ணனொடு நான்முகன் இந்திரன்
வார ணன்கும ரன்வணங்குங் கழற்
பூர ணன்திருப் பூவனூர் மேவிய
கார ணன்னெனை ஆளுடைக் காளையே.

திருமுறை 6

திருத்தாண்டகம்

கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும்
கயாசுரனை அவனாற்கொல் வித்தார் போலும்
செய்வேள்வித் தக்கனைமுன் சிதைத்தார் போலும்
திசைமுகன்றன் சிரமொன்று சிதைத்தார் போலும்
மெய்வேள்வி மூர்த்திதலை யறுத்தார் போலும்
வியன்விழி மிழலையிடங் கொண்டார் போலும்
ஐவேள்வி ஆறங்கம் ஆனார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய
## தேவாரம்

திருமுறை 7 கொல்லிக் கௌவாணம்

மண்ணுலகும் விண்ணுலகும் உம்மதேயாட்சி
மலையரையன் பொற்பாவை சிறுவனையுந் தேறேன்
எண்ணிலியுண் பெருவயிறன் கணபதியொன் றறியான்
எம்பெருமான் இதுதகவோ இயம்பியருள் செய்யீர்
திண்ணெனஎன் உடல்விருத்தி தாரீரே யாகில்
திருமேனி வருந்தவே வளைக்கின்றே னாளைக்
கண்ணறையன் கொடும்பாடன் என்றுரைக்க வேண்டா
கடல் நாகைக் காரோணம் மேவியிருந்திரே.

## திருமாளிகைத் தேவர் அருளிய
## திருவிசைப்பா

திருமுறை 9 பஞ்சமம்

தனதனற்றோழா சங்கார சூல
பாணியே தாணுவே சிவனே
கனக நற்றாணே கற்பகக் கொழுந்தே
கண்கள் மூன்றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
அம்பலத் தமர சேகரனே
உனகழலிணை என்நெஞ்சினுள் இனிதாத்
தொண்டனேன் நுகருமா நுகரே.

## திருமூலதேவர் அருளிய
## திருமந்திரம்

திருமுறை 10

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தினிளம்பிறை போலு மெயிற்றனை
நந்திமகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## கபிலதேவ நாயனார் அருளிய
## மூத்தநாயனார் திருவிரட்டை மணி மாலை

திருமுறை 11

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரு மானை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தங் கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேக்கிழார் சுவாமிகள் அருளிய
## பெரியபுராணம்

திருமுறை 12

எடுக்கும் மாக்கதை யின்றமிழ்ச் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்துள் இருத்துவாம்.

## அருணகிரிநாதர் சுவாமிகள் அருளிய திருப்புகழ்

உம்பர்தருத்தேனு மணிக் கசிவாகி
ஒண்கடலில் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே

திருச்சிற்றம்பலம்

---

கணங்கொண்ட வல்வினைகள் கண்கொண்ட நெற்றிப்
பணங்கொண்ட பாந்தட் சடைமேல் — மணங்கொண்ட
தாதகத்த தேன்முரலுங் கொன்றையான் தந்த
போதகத்தின் தாள்பணியப் போம்.

ஏத்தியே என்னுள்ளம் நிற்குமால் எப்பொழுதும்
மாத்தனி வெண்கோட்டு மதமுகத்துத் — தூத்தழல்போற்
செக்கர்த் திருமேனிச் செம்பொற் கழல் அங்கை
முக்கட் கடாயானை முன்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரியசித்தி மாலை

நாம் இவ்வுலகிற் செய்யும் எல்லாக் காரியங்கட்கும் தெய்வத் திருவருளே துணையாக இருக்கின்றது. எல்லாக் காரியங்களும் இடையூறில்லாமல் இனிது நிறைவேறச் செய்பவர் ஆனைமுகக் கடவுளே. முற்காலத்தில் காசிப முனிவர் முதலியோர் தம் முன் அருள்செய்ய எழுந்தருளிய ஆனைமுகன் மீது எட்டுப் பாடல்கள் பாடினர். (இவை விநாயகர் அட்டகம் எனவும் அழைக்கப்படுகின்றது). அப்பொழுது அவர்களுக்கு அருள் செய்ய எழுந்தருளிய பிள்ளையார் 'அன்பரே நீங்கள் நம் மீது பாடிய இப்புகழ்ப் பாக்களை எவரேனும் காலை, நண்பகல், மாலை எனும் மூன்று வேளைகளிலும் எம்மை நினைத்துப் பாடுவார்களேயானால் அவர்களுடைய காரியங்கள் யாவும் வெற்றியடையும். எட்டு நாட்கள் பாடினால் மனம் மகிழுமாறு நன்மையடைவார்கள். சதுர்த்தி விரத நாளில் எட்டு முறை பாடினால் எண் வகைச் சித்திகளும் கைகூடும். இரண்டு மாதங்கள் நாள்தோறும் பத்து முறை பாடினால் பாடியவர்கட்கு அரச வசியம் உண்டாகும். இரண்டு மாதங்கள் நாள்தோறும் இருபத்தொரு முறை பாடுவோர் அரசாங்கம், மக்கள். சுற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை எனும் எண் வகைச் செல்வங்களை அடைவர் என்று கூறி அருள்செய்து மறைந்தார். இது பிற்காலத்தில் அடியார்களால் ஓதி கைமேற் பலன் பெறப்பட்ட தோத்திரமாகும். அடியார்கள் அனைவரும் ஓதிப் பயன்பெறவேண்டும் என்ற நோக்கோடு இது இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

## நூல்

பந்தம் அகற்றும் அநந்தகுணப் பரப்பும் எவன் பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில் ஈண்டி இருந்து கரக்குமோ
சந்த மறைஆ கமங்கலைகள் அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை அன்பு கூரத் தொழுகின்றாம்.

உலகம் முழுதும் நீக்கமற ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகிற் பிறங்கும் விவகாரங்கள் உறாத மேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை ஊட்டுங் களைகண் எவன் அந்த
உலக முதலைக் கணபதியை உவந்து சரணம் அடைகின்றாம்.

இடர்கள் முழுவதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றாம்.

மூர்த்தி யாகித் தலமாகி முந்நீர் கங்கை முதலான
தீர்த்த மாகி அறிந்தறியாத் திறத்தி னாலும் உயிர்க்குநலம்
ஆர்த்தி நாளும் அறியாமை அகற்றி அறிவிப்பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப் புகழ்ந்து சரணம் அடைகின்றாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் வினையில் முதல்யாவன்
செய்யப் படும்அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன்விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றாம்.

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம் நவிலும்
விமலன் யாவன் விளங்குபர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன்எண் குணன் எவன்அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றாம்.

மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன்தீயின்
மூன்றாய் நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றாம்.

பாச அறிவில் பசு அறிவில் பற்றற் கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும் பயிலப் பணிக்கும் அவன் யாவன்
பாச அறிவும் பசு அறிவும் பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைத் திகழச் சரணம் அடைகின்றாம்.

## நூற் பயன்

இந்த நமது தோத்திரத்தை யாவன் மூன்று தினம் மும்மைச்
சந்தி களில்தோத் திரஞ்செயினும் சகல கரும சித்திபெறும்
சிந்தை மகிழச் சுபமபெறும்எண் தினம்உச் சரிக்கின் சதுர்த்தியிடைப்
பந்தம் அகல ஓர்எண்கால் படிக்கில் அட்ட சித்தியுறும்.

திங்கள் இரண்டு தினந்தோறும்
திகழ ஒருபான் முறையோதில்
தங்கும் அரச வசியமாம்
தயங்க இருபத்தொரு முறைமை
பொங்கும் உழுவ லால்கிளப்பின்
பொருவின் மைந்தர் விழுக்கல்வி
தூங்க வெறுக்கை முதற்பலவும்
தோன்றும் எனச்செப் பினர் மறைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டுக்கோட்டை • துணவி

## ஸ்ரீ அரசடிப் பிள்ளையார்

# திருப்பொன்னூஞ்சல்

### காப்பு

திருவளரும் வட்டுநகர்த் துணவி யூரில்
சேணோங்கும் அரசடியில் வீற்றிருக்கும்
கருவளரும் ஓங்காரப் பிள்ளையாரே
கணபதியே, வேதமெலாம் மேருவெற்பில்
குருவளரும் வகையெழுதிச் சிவம் வளர்த்த
கொடையாளா, வல்லபையாள் கணவா நின்றன்
உருவளரும் சிற்பரப்பொன் னூஞ்சல் பாட
ஒளிவிளக்குக் கழலிணையே காப்பதாமே.

### நூல்

1. மான்தோன்று கரத்தானும் உமையும் தந்த
வாரணமா முகமகனே, மனமுடைந்து
வான் தோன்று தேவரெலாம் வந்துவேண்ட
வல்ல அன லாசுரனை விழுங்கி மாய்த்துத
தான் தோன்றி மூர்த்தியாய் வேண்டுமன்பர்
தவததுருவில் காடசிதரும் ஞானக்குன்றே
தேன்தோன்று பொழிற்றுணவி அரசஞ் சோலைச்
செல்வ விநா யகப் பெருமான் ஆடீரூஞ்சல்.

2. போதிமர நீழலிலே அடியாருக்குப்
பொலிநத சிவகுருவடிவில தோற்றம் காட்டி
நீதி நெறி அந்தணர்கள அறுகால் ஏத்த
நிலைதத வரம கொடுத்தவழித் துணைக் கணேசா
ஏதுகுறை வந்தாலும துதிககும தொண்டர்
இடரின்றி வாழ்வித்த வீரககொம்பா
சீதவயல் சூழ்துணவி அரசஞ் சோலைச்
செல்வவிநா யகப்பெருமான ஆடீரூஞ்சல்.

3. தங்குசதுர் மறைநான்கும் தூண்களாக
தழுவு சிவா கமஙகளெலாம நாண்களாக
சங்கை மிகு தத்துவஙகள விதானமாக
தாரகமாம பிரணவம்பொற றானமாக
மங்களமாம் திருமுறைகள் மாலையாக
வருகலைகள் கொலுமாடச் சோலையாக
செங்கமலச சுனைததுணவி அரசஞ் சோலைச்
செல்வவிநா யகப்பெருமான் ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சந்திரனும் தினபதியும் குடைகள் தாங்க
சலயுதியும் தனபதியும் விருது தாங்க
சுந்தரவான் அரம்பையர்கள் கவரி வீச
சுரர்முனிவர் தொழுதுமலர் மாரிவீச
நந்தியுடன் நான்முகனும் மறைமுழங்க
நாரதரும் தும்புருவும் இசைவழங்க
செந்தமிழ்வாழ் புகழ்த்துணவி அரசஞ்சோலைச்
செல்வவிநா யகப்பெருமான் ஆடீரூஞ்சல்.

5. அன்னைஉமை வாயில்காப் பானாய்த் தோன்றி
அங்ஙகயுறு முசலத்தால் அமரரோடு
மன்னியபோர் வென்றுசிவன வந்துநோக்கி
மருவிய இப் பிள்ளையார் எனவினாவித்
தன்னுடைய முதல் மைந்தன் இவனென் றேற்கச்
சராசரங்கள் தொழுநின்ற விகனராஜா
தென்னைபனை மலிதுணவி அரசஞ் சோலைச்
செல்வவிநா யகப்பெருமான ஆடீரூஞ்சல்.

6. காவிரியைப் பூவுலகில் பாய வைத்தாய்
கற்பகத்தை ஆந்தரலோ கத்தில் வைத்தாய்
பாவழகி ஔவையைக் கைலை செல்லப்
பரம துணை யாய்நின்றாய் கனியை வாங்கி
மேவுதநதை தாயைவலம வந்தாய், எங்கள்
வேகுமனக கவலைதனைத் தீர்க்கொணாதோ
தேவரெலாம் தொழுதுணவி அரசஞ்சோலை
செல்வவிநா யகப்பெருமான் ஆடீரூஞ்சல்.

7. தத்துவங்கள் ஆறுபதி னாறுமாகி
தாஙகிடுமா தாரத்து மூலமாகி
சத்துசித்தா னந்தமுது பொருளுமாகி
தவம்பூதத சகஸரதளச் சோதியாகி
முத்திககு வித்தாகிப் பூதமாகி
மோனசுழு முனைநின்ற சுடர்விளக்கே
சித்தரகம்கா யிற்றுணவி அரசஞ் சோலைச்
செல்வவிநா யகப்பெருமான் ஆடீரூஞ்சல்.

8. நாரையூர் நம்பிக்குக் கலை கொடுத்து
நம சிவயத் திருமுறைகள் மலரவைத்தாய்
வீரமிகு கஜமுகனை மருப்பால் தாக்கி
வெற்றிதரு மூஷிகவா கனமாய்க் கொண்டாய்
வாரமிகக் குட்டிக்கும் பிடுவாருக்கு
மறலியணு காப்பேறு தரும் பெம்மானே
தேரணிகள் வருதுணவி அரசஞ்சோலைச்
செல்வவிநா யகப்பெருமான் ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. தாரோங்கு முடியாடச் சுட்டியாட
தரளமணிக் குழையாட நெடுங்கையாட
பேரோங்கு மார்பிலணி பூணூலாட
பெருவயிற்றுப் பட்டாட முக்கண் ஆட
பாரோங்கு மலரடியும் சிலம்பு மாட
பழம் மோத கம் பாசம் தோட்டியாட
சீரோங்கு தவத் துணவி அரசஞ்சோலை
செல்வவிநா யகப்பெருமான் ஆடீரூஞ்சல்.

10. கவலையெலாம் தீர்ப்பவரே ஆடீரூஞ்சல்
கருணைவிழி பார்ப்பவரே ஆடீரூஞ்சல்
புவனமெலாம் நிறைந்தவரே ஆடீரூஞ்சல்
புனிதமறை சிறந்தவரே ஆடீரூஞ்சல்
அவலமிகு பவமறுப்பீர் ஆடீரூஞ்சல்
அடியவரின் பிழைபொறுப்பீர் ஆடீரூஞ்சல்
சிவதுணவி அரசடியீர் ஆடீரூஞ்சல்
செல்வ விநா யகப்பெருமான் ஆடீரூஞ்சல்.

## வாழி

குணமிகுந்த சைவநெறி வாழி அன்புக்
கொடைமிகுந்த தருமதவம் வாழி தெய்வப்
பணிமிகுந்த சமுதாயம் வாழி, தேவப்
பசு வாழி மறைவாழி நீதி நேர்மை
அணி மிகுந்த தமிழ்வாழி ஆலயங்கள்
அருட் பூசை வாழி நன் மாரிவாழி
துணவியரச டிப்பிள்ளை யார்தாள்வாழி
சுகம்பெருகி மக்களெலாம் வாழி வாழி.

## மங்களம்

அரசடிக் கணபதிக்கு மங்களம் மங்களம்
ஆறுமுக வேலவற்கு மங்களம் மங்களம்
பரமசிவன் பார்வதிக்கு மங்களம் மங்களம்
பாண்டு ரங்கன் இலட்சுமிக்கு மங்களம் மங்களம்
பரவுசதுர் வேதனுக்கு மங்களம் மங்களம்
பாரதி சரஸ்வதிக்கு மங்களம் மங்களம்
விரவுசடை வைரவர்க்கு மங்களம் மங்களம்
வேண்டுமடி யார்களுக்கு மங்களம் மங்களம்.

ஆக்கம் :

அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துணவி அரசடியில் கோயில் கொண்ட பிள்ளையார்

ஓம் எனும் பிரணவ சொருபனாகிய ஐங்கரன் கணங்களுக்கு அதிபனாகவும் எக்காரியத்திலும் முதன்மைபெறுபவனாகவும் விளங்குகின்றார். அத்தகையவர் துணவிப் பதியில் அரசடிப்பிள்ளையாராக எழுந்தருளித் தன்னைச் சரணடைந்தவர்களது இடர்களைந்து அருள்புரிந்து வருகிறார். 'துணவி' ஈழத்திருநாட்டின் வடபால் யாழ்ப்பாண நகருக்கு மேற்குத்திசையில் வலிகாமம்மேற்குப் பிரதேச சபை எல்லையுள் சங்கரத்தைக் கிராம அலுவலர் பிரிவிற்குள் அமைந்த ஒரு குக்கிராமமாகும்.

கற்பகதருவாம் பனை உள்ளிட்ட பயன்தரு விருட்சங்களும், செந்நெல்விளையும் விவசாயக்காணிகளும், நீர் நிலைகளும் இக்கிராமத்தை அழகூட்டின. ஒரு காலத்தில் இக்கிராமம் மிகப் பிரசித்தமானதாய் விளங்கியது. சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் வாழ்ந்தோரும், அவர்களோடு தொடர்புடையோரும், இக்கிராமத்தில் வாழ்ந்தனர். சைவ அறிஞர்களும் கல்வி மான்களும் இக்கிராமத்தை நிறைத்திருந்தனர் இதனால் இக்கிராமம் 'குட்டிச்சிங்கப்பூர்' எனப் பெருமையுடன் அழைக்கப்பட்டது. ஆனால் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகள் யாழ்ப்பாணத்தில் பல கிராமங்களையும் பாதித்தது போலவே 'துணவி' யையும் வெகுவாகப் பாதித்தது. இன்று துணவி வசதிகள் குறைந்த வளம் குன்றிய ஒரு கிராமமாக மாறிவிட்டது. என்றாலும் துணவியைச் சேர்ந்தோர் பிள்ளையாரின் அருளால் உலகெங்கும் பரந்து சிறப்புடன் வாழ்கிறார்கள்.

துணவி அரசடிப் பிள்ளையார் கோயில் பற்றிய சரியான வரலாறு எழுத்துப்பிரதியாகக் கிடைக்கப்பெறவில்லை. ஆயினும் இக்கிராமத்தில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த நம்முன்னோர்களின் வாய்ப்பிறப்புத் தகவல்களின்படி ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே இன்று ஆலயத் தலவிருட்சமாக விளங்கும் அரச மரத்தடியில் வழிபாடு ஆரம்பமாகியிருப்பது தெரிகின்றது. இந்தியாவிற்குத் தலயாத்திரை மேற்கொண்டு வந்த அடியார் ஒருவரே அரச மரத்தடியில் பிள்ளையாரை ஸ்தாபித்து வழிபாட்டை ஆரம்பித்ததாகக் கூறப்படுகிறது. தான் தோன்றி மூர்த்தியாகப் பிள்ளையார் தோன்றியதாகவும் கூறப்படுகிறது. பின்னர் விவசாயத்திலீடுபட்டிருந்த கமக்காரர்கள் இப்பிள்ளையாரை முன்வைத்து தேங்காய் உடைத்து கமத்தொழிலை ஆரம்பித்தால் அதிக விளைச்சல் கிடைக்குமென நம்பி அவ்வாறு செயற்பட்டனர். பயன் கிடைக்கவே, அதற்கு நன்றியாக புதுநெல்லில் பிள்ளையாருக்குப் பொங்கலிட்டனர். இவ்வாறு துணவி அரசடிவளவில் பிள்ளையார் வழிபாடு வளர்ந்து வந்தது ஓலைக் கொட்டிலில் ஆரம்பித்து பின்னர் களிமண்ணாலும், சுண்ணாம்புக் கலவையினாலும், பிள்ளையாருக்கு கோயில் எழுந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1892ம் ஆண்டிற்கிடையில் கல்லு மணல் சுண்ணாம்பு போன்ற மூலப் பொருட்களினால் கோயில் கட்டடப்பணி முக்கிய கட்டத்தை அடைந்திருக்கிறது. தூபியோடு கூடிய கர்ப்பக்கிருகம் அர்த்தமண்டபம், மகா மண்டபம், நிர்த்தமண்டபம், சனீஸ்வரராலயம், சிறிய காண்டாமணி, மணிக் கோபுரத்துடன் கூடிய பெரிய காண்டாமணி, மடப்பள்ளி, களஞ்சியம், வாகன சாலை, சுற்றுமதில் ஆகியவற்றை உள்ளடக்கியதாக கோயில் கட்டடம் மேற் கூறிய காலப்பகுதிக்குள் அமைக்கப்பட்டுள்ளது. கர்ப்பக்கிருக கட்டட அளவு 8' 9'' பிரமாணத்தில் ஆகம முறைப்படி கோயில் கட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. கோயிலின் ஸ்தம்ப மண்டப தீராந்தியில் 1889 என்றும் பெரிய காண்டாமணியில் 1885 என்றும் மணிக்கோபுரத்தில 1892 என்றும் ஆண்டுகள் பொறிக்கப்பட்டு இன்றும் காட்சியளிக்கின்றன. இவையே மேற்கண்ட எடுகோள்களுக்கு சான்றுகளாகும்.

இக்காலப்பகுதியில கோயில் முகாமையாளராக திரு. கா. விசுவநாதரும் அவருக்குப்பின் திரு. வி. செல்லத்துரையும் இருந்துள்ளனர். இக்காலப் பிற்பகுதியில் இந்தியா சீர்காழியில் இருந்து வந்த பிரம்மஸ்ரீ அப்பாத்துரைக் குருக்கள் கோயில் குருக்களாக பணியாற்றியுள்ளார், இவரது காலத்தில் சோதிடக் கருமங்களுக்காக பல ஊர்களிலுமிருந்து மக்கள் கோயிலை நாடி வந்துள்ளதாக அறியப்படுகின்றது. கோயிலன் நித்திய நைமித்திய பூசைகள், வருடாந்த பத்து நாள் அலங்கார உற்சவங்கள், என்பவற்றை ஆகம விதிப்படிநடாத்திக் கோயிலைச் சிறப்போடு அப்பாத்துரைக்குருக்கள் பராமரித்து வந்துள்ளார்கள் கோயிலுக்கு தேவையான விக்கிரகங்கள், பூசை உபகரணங்கள், வாகனங்கள், சகடை என்பன சேகரிக்கப்பட்டுள்ளன. 1934ம் ஆண்டு கோயிலுக்கு முன்வாசல்கோபுரம் கட்ட ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால உபயகாரர் இறந்துபோனதால் அடித்தள நிலையில் இத்திருப்பணி நிறுத்தப்பட்டுள்ளது. 1936ம் ஆண்டில் அப்பாத்துரைக் குருக்கள் சிவபதமடைந்து விட்டார், இவருக்குப்பின் அவரின் மருமகன் பிரம்மஸ்ரீ செல்லையா ஐயாவும் பின்பு சிலகாலம் அப்பாத்துரைக் குருக்களின் மூத்த மகன் பிரம்மஸ்ரீ அ. நடேசக்குருக்களும் பூசகர்களாக பணியாற்றியுள்ளனர். அப்பாத்துரைக் குருக்களின் இரண்டாவது மகன் பிரம்மஸ்ரீ ஆனந்த நடேசக்குருக்கள் (நடுவில் ஐயா) வேதாகமங்களில் சிறப்புற்று பிரசித்தி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரம்மஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள் தனது பன்னிரெண்டாம் வயதிலிருந்து தமது பேரனார் அப்பாத்துரைக் குருக்களுடனும், தகப்பனார் செல்லையா ஐயாவுடனும் உதவிப் பூசகராக கடமையாற்றி அவர்களுக்குப்பின் கோயில் பூசகராக பல ஆண்டுகள் விசுவாசத்தோடு பிள்ளையாருக்குத் தொண்டாற்றி உள்ளார். துணவி மக்களின் மரியாதைக் குரியவராக விளங்கிய மகேஸ்வரக் குருக்களின் (மகேஸ் ஐயா) அறுபது ஆண்டு சேவையின் நிறைவாக 20-09-1991 இல் மணிவிழா கொண்டாடப்பட்டது. இப்பேறு அபூர்வமானது. அவ்வாறிருக்க; தனக்கு ஏற்பட்ட சுகயீனங்கள் காரணமாக வாழையடி வாழையென தனது சந்ததிப் பணியைத் தளரவிடாது தனது மகன் பிரம்மஸ்ரீ ம. கேசவசர்மா அவர்களை 16-11-1981 இல் இருந்தே கோயில் பூசகராக சேவைக்கமர்த்தியுள்ளார்கள். அன்றிலிருந்து பிரம்மஸ்ரீ ம. கேசவசர்மா தனது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றி வருகிறார்கள். பிரம்மஸ்ரீ செ. மகேஸ்வரக் குருக்கள் 08-05-1996 இல் சிவபதமடைந்தார்கள்.

இதேவேளை கோயில் முகாமையாளர் திரு. வி. செல்லத்துரை அவர்கள் சிவபதமடைந்தபின் அவரின் பிள்ளைகள் திருமதி ஞானரத்தினம் கந்தையாவும் திரு. செ. நடராசாவும் முகாமையாளர்களாகச் செயற்பட்டனர். திருமதி ஞானரத்தினம் கந்தையா காலமாகிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்போக்கில் திரு. செ. நடராசாவும் தொழில் நிமித்தமாய் துணவியில் வசிக்கமுடியாமற் போனதினால் திரு. க. சுப்பிரமணியம் அவர்களிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அவரது மரணத்திற்குப் பின் 1969 இல் ஆலயத் திற்குப் பரிபாலன சபையொன்று அமைக் கப்பட்டது. சபையின் தலைவராக திரு. பொ. பாலகிருஷ்ணனும் உப தலை வராக திரு. த. விஜயகோபாலும் காரிய தரிசி தனாதிகாரியாக திரு. க. சோதி நாதனும் உறுப்பினர்களாக திருமதி பரமேஸ்வரி சபாரெத்தினம், திருமதி சரோஜினி சின்னராசா திரு. தா. அர சடியான் ஆகியோரும் செயற்பட்டனர். 1980 இல் திரு. க. சோதிநாதனுக்குப் பதிலாக திரு. செ. இராமநாதன் காரிய தரிசி, தனாதிகாரிப் பொறுப்பை ஏற்க தொடர்ந்தும் மேற்கண்டோர் பரிபாலன சபையில் இடம்பெற்றனர். 01-09-1980 முதல் வழிபடுவோர் சபையும் செயற் பட்டு வருகின்றமையும் குறிப்பிடத் தக்கது.

இதற்கிடையில் 1944 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட துணவி இந்து வாலிபர் சங்கம் எமது ஆலயத்தை மையப்படுத்தி பல சமயப் பணிகளில் ஈடுபட்டுவந்தது. ஆலயத்தைச் சிறப்புற நடாத்துவதில் ஒத்துழைப்பதோடு வருடாந்த உற்சவத் தில் 9 ஆம் நாள் உற்சவத்தைச் சிறப்பாக நடாத்தி வருகின்றது.

மேற்படி பரிபாலனசபை மிகுந்த அக்கறையுடன் துரிதமாகச் செயற்பட்டு நிதி சேகரித்து வங்கிகளில் வைப்பிலிட்டு கோயிலுக்கு ஒரு திடமான மூலதனத்தை உருவாக்கியது. இதில் துணவியைச் சேர்ந்த மலேசியாவில் வசிக்கும் திரு. A. C. கனகசபை அவர்கள் பெருந் தொகைப் பணத்தை அனுப்பி இக் கோயில் பொருளாதாரத்தை மேம் படுத்தியுள்ளார். இவருக்கும் மற்றும் நிதியுதவி செய்த அனைவருக்கும் நன்றி கூற கோயில் பரிபாலன சபையினரும் துணவி அரசடிப்பிள்ளையாரின் அடி யார்களும் கடமையுள்ளவர்களாவோம். இவர்கள் அனைருக்கும் துணவி அரசடிப் பிள்ளையார் நிச்சயம் அருள்பாலிப் பார் கோயில் பணிகளில் உதவுவதற் காக கோயில் மூலதனத்தின் வட்டிக் காசில் சிக்கனமாக செலவுசெய்து பூசகர் சம்பளம் மற்றும் செலவுகள் செய்யப் படுகின்றது. அத்தோடு நித்திய நைமித்திய பூசைகள் வருடாந்த அலங் காரத் திருவிழாக்கள் ஒழுங்காக நடை பெறுவதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்படுகின்றது.


குறைந்தபட்சம் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையாவது ஆலயங் களில் கும்பாபிஷேகம் நடாத்தப்பட வேண்டும் என்பது விதிமுறையாகும். துரதிஷ்ட வசமாக பல்வேறு பிரச் சினைகள் காரணமாக 08-11-1973 இற்குப் பின்னர் சுமார் இருபத்தாறு ஆண்டுகளாக இக்கோயிலில் கும்பாபி ஷேகம் நடைபெறவில்லை. இது துணவியைச் சேர்ந்த பலரின் மனங் களிலும் பெருங்குறையாக இருந்தது. இவர்களனைவரினதும் இடைவிடாத பிரார்த்தனையின் பேறாக இப்பெரும் பணியைச் செய்யத் திருவருள் கை கூடியது. உள்ளூரிலும், வெளியூரிலும் இருக்கும் விநாயக அடியார்கள் பலரின் நிதியுதவியுடன் 20 - 10 - 1997 இல் பாலஸ்தாபனத்துடன் பழுதடைந்த பழைய கோயிலை இடித்து புதிய கோயில் கட்டும்பணி ஆரம்பிக்கப் பட்டது. கர்ப்பக் கிருகம், அர்த்த மண்டபம் என்பன வைரக் கல்லாலும், மகா மண்டபம், நிமிர்த்த மண்டபம், ஸ்தம்ப மண்டபம், வசந்த மண்டபம், வைரவராலயம், சனீஸ்வரராலயம், யாக சாலை, களஞ்சிய அறை, மணிக்கோபுரம் ஆகியவை சீமெந்து கொங்கிறீற் கற் களாலும் புதிதாகக் கட்டப்பட்டுள்ளன. மடப்பள்ளி வாகனசாலை ஆகியன திருத்தம் செய்யப்பட்டுள்ளன எனினும் இவற்றையும் புதிதாக கட்டவேண்டிய தேவையுள்ளது. ஆலய வடக்கு வீதியில் (உள்வீதி) அபிஷேகக் கிணறு ஒன்றும் அமைக்க வேண்டியுள்ளது. இவையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



08 – 11 – 1973 இல் நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தின் பின்னர் தூபியோடு பிரம்மஸ்ரீ செ. மகேஸ்வரக்குருக்கள்.



ஆலயத் திருப்பணிகளுக்கு கணிசமான நிதியுதவியளித்த துணவியைச் சேர்ந்த திரு. ஏ. சீ. கனகசபை (மலேசியா) அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார் அருளால் காலக்கிரமத்தில் கைகூடுமென எதிர்பார்க்கின்றோம். G.T Z நிறுவனத்தின் உதவியுடன் ஆலயத்திற்கு குழாய் மூலம் நன்நீர் விநியோகம் பெறப்பட்டுள்ளது. கோயிலுக்குஉள்ளகமின்னிணைப்புக்கள் செய்யப்பட்டுள்ளன. விரைவில் மின்சாரசபை மின்னிணைப்பை வழங்குமென எதிர்பார்க்கின்றோம்.

துணவி அரசடிப் பிள்ளையாரின் பேரருளால் கட்டட வேலைகள் பூர்த்தியாகி மஹாகும்பாபிஷேகம் எனும் பெருஞ்சாந்திவிழா 24 - 10 - 1999 இல் நடைபெற்று தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று, 8-12-99இல் சங்காபிஷேகத்தோடு கிரியைகள் நிறைவடைந்ததையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதுடன் தொடர்ந்து எல்லாம்வல்ல அரசடிப் பிள்ளையாரின் கருணையையும் அருளாட்சியையும் வேண்டி நிற்கின்றோம்.

★

குறிப்பு :

இவ்வரலாறு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் எழுதப்பெற்றதாகும். தகவல்கள் ஏதாவது விடுபட்டிருப்பின், அல்லது மாற்றமிருப்பின் தயவுசெய்து எம்மோடு தொடர்பு கொண்டு எதிர்காலத்தில் பூரணமானதொரு வரலாற்றை எழுத ஒத்துழைப்பீர்கள் என நம்புகிறோம்.

நன்றி

---

## நவக்கிரக கணநாத விநாயகர்

மனிதர்களுடைய வாழ்க்கையில் கஷ்டங்களும், துன்பங்களும் அவரவர்களுடைய கிரக சஞ்சாரப்படிதான் நடைபெறுகிறதென்று ஆன்மீக வல்லுனர்கள் கூறுகிறார்கள். அப்படி கிரக சஞ்சாரப்படி நடக்கும் செயல்கள் நமக்கு மொத்தமாகப் பாதிப்பு ஏற்படுத்தாமல் விக்கினங்களைக் கட்டுப்படுத்தி நம்மைக் காத்து அருள் புரிபவராக கணநாதனாகிய விக்கினேசுவரர் இருக்கிறார் என்பது உண்மைத் தத்துவம். அப்படி கணநாதர் கிரகங்களைத் தன்னுள் எப்படி அடக்கி அருள்பாலிக்கிறார் என்பதைத் தன்னுடைய எட்டுக்கோடி அவதாரங்களில் ஒன்றின் மூலம் காட்சியளிக்கிறார்.

அதுதான் நவக்கிரக விநாயகர் தோற்றம் அதன்படி கணநாதர் :

சூரியனை தன் நெற்றியிலும்
சந்திரனை தன் நாபிக்கமலத்திலும்
செவ்வாயை தன் வலது தொடையிலும்
புதனை தன் வலது கீழ்க் கையிலும்
வியாழனை தன் சிரசிலும்
வெள்ளியை தன் இடது கீழ்க்கையிலும்
சனியை தன் வலதுமேல் கையிலும்
ராகுவை தன் இடது மேல் கையிலும்
கேதுவை தன் இடது தொடையிலும்
அடக்கிக்கொண்டு காட்சியளிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவனருளாலே அவன் பணி செய்தோர்

## அவனருளாலே அவன் பணி செய்தோர் விபரங்கள்

## 1980 முதல் பரிபாலனசபை அங்கத்தவர்களின் விபரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. பொன்னையா பாலகிருஷ்ணன் | தலைவர் | 01-09-1980—06-11-1993 |
| 2. | திரு. தம்பிராசா விஜயகோபால் | உபதலைவர் | 01-09-1980—08-11-1993 |
| 3. | திரு. செல்லத்துரை இராமநாதன் | காரியதரிசி தனாதிகாரி | 01-09-1980 – 28-03-1993 |
| | | சபை உறுப்பினர் | 22-12-1991—05-06-1983 |
| | | தனாதிகாரி | 05-06-1993—இன்றுவரை |
| 4. | திரு. தாமோதரம்பிள்ளை அரசடியான் | சபை உறுப்பினர் | 01-09-1980—03-09-1982 |
| 5. | திருமதி பரமேஸ்வரி சபாரெத்தினம் ,, | ,, | 01-09-1980—03-09-1982 |
| 6. | திரு. சின்னத்தம்பி சின்னராசா ,, | ,, | 03-09-1982—12-06-1988 |
| 7. | திரு. கார்த்திகேசு சுப்பிரமணியம் ,, | ,, | 03-09-1982 – 28-03-1983 |
| | | காரியதரிசி தனாதிகாரி | 28-03-1983—12-06-1988 |
| | | காரியதரிசி | 12-06-1988—இன்றுவரை |
| 8. | திரு. தம்பிராசா இராசகோபால் | உப காரியதரிசி | 12-06-1988—17-11-1993 |
| | | உப தலைவர் | 17-11-1993—இன்றுவரை |
| 9. | திரு. செல்லத்துரை இராசலிங்கம் | தனாதிகாரி | 12-06-1988—05-06-1993 |
| 10. | திருமதி சரோஜினிதேவி சின்னராசா | உப தனாதிகாரி | 12-06-1988—15-01-1994 |
| 11. | திரு. பொன்னம்பலம் நாகலிங்கம் | சபை உறுப்பினர் | 12-06-1988—15-06-1991 |
| 12. | திரு. நாகலிங்கம் செல்வச்சந்திரன் ,, | ,, | 12-06-1988—05-06-1993 |
| 13. | திரு. முத்தையா இராமநாதன் ,, | ,, | 12-06-1988—05-06-1993 |
| 14. | திரு. சின்னத்துரை திருநாவுக்கரசு ,, | ,, | 05-06-1993—இன்றுவரை |
| 15. | திரு. அருளம்பலம் அருளானந்தம் ,, | ,, | 05-06-1993— ,, |
| 16. | திரு. நரசிங்கம் அருணாசலம் ,, | ,, | 05-06-1993 – 07-11-1993 |
| | | தலைவர் | 07-11-1993—இன்றுவரை |
| 17. | திரு. நாகலிங்கம் பாலசுந்தரம் | சபை உறுப்பினர் | 07-11-1993— ,, |
| 18. | திரு. சிவகுருநாதன் கேசவன் | உப காரியதரிசி | 17-11-1993— ,, |
| 19. | திரு. சின்னராசா ஜெயராசா | உப தனாதிகாரி | 15-01-1994— ,, |

## இன்றைய பரிபாலன சபை

*தலைவர்*
திரு. ந. அருணாசலம்

*காரியதரிசி*
திரு. கா. சுப்பிரமணியம்

*தனாதிகாரி*
திரு. செ. இராமநாதன்

*உப தலைவர்*
திரு. த. இராசகோபால்

*உப காரியதரிசி*
திரு. சி கேசவன்

*உப தனாதிகாரி*
திரு. சி. ஜெயராஜா

*உறுப்பினர்கள்*
திரு. சி. திருநாவுக்கரசு திரு. அ. அருளானந்தம் திரு. நா. பாலசுந்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



20—09—1991 இல் நடைபெற்ற பிரம்மஸ்ரீ. செ. மகேஸ்வரக் குருக்களின் மணிவிழாவின் போது மேடையில் குருக்களும் பிரமுகரகளும்.



மீளப் புதிதாகக் கட்டப்பட்ட கோயிற் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டும் கிரிகைகள் 18—03—1998 இல் நடைபெற்றபோது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையாருக்குத் தொண்டாற்றியெம் நன்றிக்குரியவரானோரர்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

வட்டுக்கோட்டையின் பால் அமைந்த வளமிக்க கிராமங்களில் ஒன்றான துணவிப் பதியில் உறைந்து அருளாட்சி செய்பவர் அரசடிப் பிள்ளையார். அப்பிள்ளையார் கோயில் 1973ம் ஆண்டிற்குப் பின்னர் கும்பாபிஷேகம் நடைபெறாது இருந்துள்ளது. இந்நிலை அடியார்களாகிய எங்களுக்கு மிகுந்த மனவருத்தத்தை ஏற்படுத்தியிருந்தது. அண்மையில் இக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்ய திருவருள் பாலித்த நிலை கண்டு மிகவும் மனமகிழ்வுறுகிறோம். ஐப்பசி 24ம் திகதி நடைபெற்ற கும்பாபிஷேக தினத்திலிருந்து 45 நாள் மண்டலாபிஷேகம் நடைபெற்று இன்று சங்காபிஷேகம் பூர்த்தியடையும் நாளன்றும அடியார்களாகிய நாங்கள் பெருமகிழ்ச்சியடையும் விதத்தில் இக்கோயிலைப் புனரமைத்து மெருகூட்டியதற்கு தங்களால் இயன்ற தன்னலமற்ற சேவையை வழங்கிய திரு. கா. சுப்பிரமணியம், திரு. ந. அருணாசலம் ஆகியோருக்கு நன்றிக்கடன் பட்டுள்ளோம்.

குறிப்பாக 1983ம் ஆண்டிலிருந்து இன்றும் தொடர்ச்சியாக 16 ஆண்டுகள் கோயிற் பரிபாலனசபை காரியதரிசியாக இருந்து கோயிற்ச் செயற்பாடுகளை வழிநடாத்தி வருகின்ற திரு. கா. சுப்பிரமணியம் அவர்கள் மிகுந்த பொறுமையுடனும், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்குடனும் சிறப்பாகச் செயற்பட்டு வருவது யாவரும் அறிந்தது.

இவ்வகையில் இவ்விருவரினதும் பணி எமக்குக் கிடைக்க நல்லருள் புரிந்த துணவி அரசடிப் பிள்ளையாரின் கருணையை எண்ணி மகிழ்வெய்தும் அதேவேளையில் இவ்விருவரினதும் சேவை தொடர்ந்தும் கிடைக்கும் வண்ணம் அவர்களை ஆரோக்கியத்துடன் பல்லாண்டுகாலம் வாழவைக்கும் வண்ணம் அரசடியானை இறைஞ்சுகின்றோம்.

அடியார்கள் சார்பில்
நா. செல்வச்சந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல லோகமும் படைத்தளித் தழிக்குந் தற்பரமாய்
அகில லோகத்தும் புகலிடம் தனக்கிலா அமைவாய்ப்
புகலு லோகங்கள் அனைத்திற்கும் புகலிடம் தானாய்ப்
பகவனாகிய கணேசநின் பாதமலர் தொழுவாம்]

— விநாயகர் புராணம்.

★

# ந. காசிப்பிள்ளை
# பலசரக்கு வியாபாரம்

சந்தைச் சதுக்கம், : : சங்கானை.

"ஒற்றை அணிமருப்பும் ஓரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழி மூன்றும் — பெற்றதொரு
தண்டைக்கயல் வாரணத்தைத் தன்மனத்தி லெப்பொழுதும்
கொண்டக்கால் வாராது கூற்று"

# சன்லைற் றைக்கிளீனர்ஸ்

யாழ்ப்பாணம்.

கிளைகள் :

## சன்லைற் மல்ரி சேவிஸ்
## சன்லைற் கொமினிக்கேசன்

கச்சேரியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பிள்ளையார் திருவுருவம்

இறைவனுக்கு உருவம் இல்லை. இறைவனோ எல்லா உருவங்களிலும் உள்ளார்.

உருவமற்றவர் இறைவன், உருவமுள்ளவரும் இறைவனே. பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவர் இறைவன்.

ஒலிகளில் ஓங்காரமாகி உள்ளவர் பிள்ளையார். வரிவடிவங்களில் பிள்ளையார் சுழியாக உள்ளவர். பிரணவமாயும் பிரணவப் பொருளாகவும் உள்ளவர். வேதங்களின் முதலாக உள்ளவர். வேதங்களாகவும் உள்ளவர் பிள்ளையார்.

தன்னை நினைப்பவர், தன்னை வழிபடுபவர், தன்னைத் தியானிப்பவர், இவர்களின் உள்ளத்தில் பிள்ளையார் எப்படித் தோன்றுகிறார்? தத்துவார்த்த மூர்த்தியாகத் தோன்றுகிறார். பொருள் பொதிந்த உருவமாகத் தோன்றுகிறார்.

விலங்கு வடிவமாகத் தோன்றுகிறார்.
மனித வடிவமாகத் தோன்றுகிறார்?
பூத வடிவமாகத் தோன்றுகிறார்.
தேவர்கள் வடிவமாகத் தோன்றுகிறார்.

விலங்காய், மனிதராய்ப், பூதமாய்த், தேவராய் இந்நான்கு படைப்புகளின் இணைந்த உருவமாய்ப் பிள்ளையார் தோன்றுகிறார்.

யானைத் தலையும், சுளகுச் செவியும், தும்பிக்கையும் யானையாகிய விலங்கிடம் இருந்துபெற்றார்.

புருவ வடிவத்தையும் கண்களையும் மனிதரிடம் இருந்து பெற்றார்.
பேழை வயிற்றையும் குறுகிய கால்களையும் பூதகணத்தில் இருந்து பெற்றார்.
நான்கு கைகளையும் தேவர்களிடம் இருந்து பெற்றார்.

''ஐந்து கரத்தனை, யானை முகத்தனை இந்து இளம் பிறை போலும் எயிற்றனை, எனத் திருமூலர் பிள்ளையாரின் வடிவத்தைத் திருமந்திரத்தில் எடுத்துக் கூறி உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருவடிகள்

இறைவனின் திருவடிகளை அடைந்து பேரின்பப் பெருவாழ்வு பெறுவதே உயிர்களின் நோக்கம். பிள்ளையாரின் திருவடிகள் உயிர்கட்கு அபயம் கொடுக்கும் திருவடிகள்.

உண்மையான அறிவு எதுவோ அதுவே ஞானம். உயிர்கள் பாசங்களால் கட்டப்பெற்றுத் துன்பப்படாமல், இறைவன்பால் உயிர்களை வழிப்படுத்துவதே ஞானம்.

ஊழ்வழி வினைகள் அறவேண்டும். வருவினையும் செய்வினையும் நீங்கவேண்டும். ஞானம் பொருந்தினால் வினைகள் தாமாக நீங்கும். துன்பம் போகும். இன்பம் பெருகும்.

பிள்ளையாரின் திருவடிகள் ஞானமாக உள்ளன. உயிர்களின் துன்பத்தைப் போக்குகின்றன. இன்பம் பெருக்குகின்றன.

### வயிறு

பிள்ளையாரின் வயிறு பெரு வயிறு. பேழை வயிறு. அந்த வயிற்றினுள் யாவுமே அடக்கமாகிஉள, பரவெளியாக உள்ள அனைத்தும் அடங்கி உள. அண்டங்கள் யாவும் அடங்கி உள. அனைத்து உலகமும் அடங்கி உள. அனைத்து உயிர்களும் அடங்கி உள.

பிள்ளையாரின் திருவுருவம் அனைத்தையும் அடக்கிய திருவுருவம். பிள்ளையார் எங்கும் எதிலும் உள்ளார். அங்கு இங்கு எனாதபடி எங்கும் பரந்து வியாபித்து நிற்கிறார். இந்தத் தத்துவத்தையே பேழை வயிறு குறிக்கும்

### ஐந்து கைகள்

பிள்ளையாருக்கு நான்கு கைகளுடன் தும்பிக்கையும் சேர்த்தால் ஐந்து கைகள். தொடர்ச்சியாக, இடையீடு இன்றி நடைபெறும் ஐந்து தொழில்களையே ஐந்து கைகளும் குறிக்கின்றன.

> ஐந்து கைகளுள் ஒரு கையில் பாசம் உள்ளது.
> ஒரு கையில் அங்குசம் உள்ளது.
> ஒரு கை அஞ்சேல் என அபயம் காட்டி நிற்கிறது.
> ஒரு கையில் மோதகம் உள்ளது.
> மற்றது தும்பிக் கையாகும்.

பற்றுள்ளதைப் பிறப்பிப்பதும் பாசம். பிணித்து நிற்பதும் பாசம். படைத்தலைக் குறிப்பது பாசத்தைத் தாங்கிய கை. ஐந்தொழில்களுள் முதலாவது படைத்தல் தொழில்.

பிறவி எடுத்தாலே வினை சூழ்ந்து கொள்கிறது. துன்பங்களும் இன்பங்களும் மாறி மாறி வருகின்றன. இன்ப துன்பங்களில் இருந்து விடுபட்டு ஓடி, பிறவியில் இருந்து விடுபட வரும் உயிர்கட்கு அஞ்சேல் எனப் பாதுகாப்பு அளிக்கும் கை அபயக் கை. காத்தல் தொழில் ஐந்தொழில்களுள் இரண்டாவது.

அங்குசம் அழித்தலைக் குறிக்கும். பிள்ளையாரின் ஒரு கையில் அங்குசம் உண்டு. ஐந்தொழில்களுள் மூன்றாவதாகிய அழித்தல் தொழிலை அங்குசம் தாங்கிய கை செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சேல் எனப் பாதுகாப்பு அளித்த, அபயம் பெற்ற உயிர்கட்கு அருளலைச் செய்வது மோதகம் ஏந்திய கையாகும். இந்தக் கை கீழ் நோக்கி இருப்பதன் காரணம் பிறவிக்கு அஞ்சி வரும் உயிர்கள், அடையுமிடம் திருவடியாகிய முத்திப் பேறு என்பதை உணர்த்தவேயாம். ஐந்தொழில்களுள் நான்காவது அருளல் தொழில்.

ஐந்தொழில்களுள் ஐந்தாவது மறைத்தல் தொழில் திரோதானமாகிய இந்தத் தொழிலைச் செய்வது தும்பிக்கையே.

பிள்ளையாரின் முகத்தில் இரு கொம்புகள் உள. இடது பக்கத்தில் உள்ள கொம்பு முழுமையான அழகான கொம்பாகும்.

வலது பக்கத்தில் உள்ள கொம்பு ஒடிந்த கொம்பாகும். வலது பக்கத்தில் முழுமையான நீட்டுக் கொம்பு இருந்தது. பிள்ளையார் பாரதக் கதையை எழுதியவர் வியாச பகவான் சொல்ல எழுதியவர். அப்பொழுது, வலது கொம்பை உடைத்து எழுத் தாணியாகப் பயன்படுத்தி எழுதினார்'' இதனால் வலது கொம்பு உடைந்த கொம் பாகவே உள்ளது.

இடது கொம்பு பதிஞானத்திற்கு உரியது. ஒடிந்த வலது கொம்பு பாசஞானத் திற்குரியது.

சுளகு போன்ற இரு செவிகள் பிள்ளைாருக்கு உண்டு. அகன்று விரிந்த இச் செவிகள் யானையின் செவிகளைப் போன்றவை.

உயிர்கள் மலங்களின் பிணிப்பால் துன்பப்படாமல் இச்செவிகள் காக்கின்றன. வினைகளினால் வரும் துன்பங்களில் இருந்து போக்கி அருள்கின்றன.

பிள்ளையாருக்கு மூன்று கண்கள் உள. வழமையான இரு கண்களுடன் நெற்றிக் கண்ணும் சேர்ந்து மூன்று கண்களாக உள.

பிறைச் சந்திரனைத் தனது முடியில் பிள்ளையார் அணிந்துள்ளார். குற்றங்கள் தேய்ந்து உடல் சிறுத்து, வட்டமான சந்திரன் பிறைவடிவம் கொண்டது.

அறியாமை என்னும் இருள் தேய. ஞானம் பெற்ற உயிர்களை உயர்ச்சி அடையச் செய்து தலைமேல் வைப்பார் பிள்ளையார் என்பதையே முடியில் உள்ள பிறை எடுத்துக்காட்டுகிறது.

பிள்ளையார் பாம்பை ஆபரணமாக அணிந்துள்ளார். பாம்பு குண்டலினி சக்தியின் வடிவம். மூலாதாரத்திலுள்ள குண்டலினி சக்தி பாம்பு படம் விரித்தது போல எழுந்து பரந்து நின்று, உயிர்களைச் சிவ மயமாக்கு கின்றது.

இப்படியாக, பிள்ளையார் அடியவர்களுக்கு அருள்புரிவதற்காக எடுத்த திருமேனியின் திருவுருவத்தில் சிவதத்துவங்கள் அடங்கி உள்ளன.

நாம் பிள்ளையாரின் திருவுருவத்தை நினைத்து, வழிபட்டு, தியானிக்கும்பொழுது நமக்கு ஈடேற்றம் உண்டு. ஆன்ம ஈடேற்றம் உண்டு. உயிர் உயர்ச்சி உண்டு.

ஓங்கார ஒலியானவன்
பிள்ளையார் சுழி வரி வடிவானவன்
விலங்கு, மனிதன் பூதர், தேவர் இவர்கள்

இணைந்த திருவுருவத்தைக் கொண்டவர் அவரே பிள்ளையார்.

* கஜமுகாசுரனுடன் நடந்த போரின்போதே பிள்ளையார் தனது வலது கொம்பை ஒடித்தார் என்றும் கூறப்படுகின்றது.

நன்றி: ''பிள்ளையார் வழிபாடு''
கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் கோயில் (1992)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# கணபதி வழிபாடு

— செ. வைத்தியலிங்கன் எம். ஏ., எம், லிட்.
தமிழ் விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.
— திருமூலர் திருமந்திரம்.

இந்து சமயத்துள் காணபத்தியம், கௌமாரம், சாக்தம், சௌரம், சைவம், வைணவம் ஆகிய ஆறும் சண்மதம் எனப் பெறுவன. இவற்றுள் காணபத்தியம் அல்லது காணபதமென்பது கணபதியே முழுமுதற் கடவுளென நப்பி வழிபடுஞ் சிறப்பினையுடையது. 'க' என்பது அறிவாகவும், 'ண' என்பது வீடாகவும் பொருள்கொண்டு, அறிவிற்கும் வீட்டுப் பேற்றிற்கும் தலைவராகவே கணபதி விளங்குகிறார் என்பர்.

பொதுவாகத் தத்துவம், புராணம், சடங்கு என்ற மூன்று திறத்தாலும் கணபதிக்குச் சிறப்பிடமுண்டு. பெரும்பாலான மக்களிடையே திருவிழாக்களும் சடங்குகளுமே ஈடுபாட்டினைப் பெறுகின்றன. சிவன்கோயில் திருவிழாக்களில் 'பஞ்சமூர்த்தி புறப்பாடு' அடியவர்களின் நாட்டத்தைக்கவரும்; அந்தப் பஞ்சமூர்த்தி வரிசையில் சிவன் சக்தி முருகர் சண்டேசுவரர் ஆகியோருடன் கணபதிக்குச் சிறப்பிடம் கிடைப்பதை எல்லோரும் அறிவர்.

கணபதியை விநாயகர், ஆனைமுகன், பிள்ளையார், மூத்தநாயனார், கணேசர், விக்கினேஸ்வரர் போன்ற பலபெயரிட்டு அழைத்து வழிபடுவர். இந்து சமயத்தில் பல பிரிவினரும் கொள்கையினரும் ஆர்வமுடன் வணங்கத்தக்க பொதுத் தெய்வமாகக் கணபதி விளங்கி வருகிறார். அல்லாமலும் புறமதத்தினராகிய சமணர் பௌத்தர் முதலிய பிறருங் கூட ,வணங்கும் நிலையில் ஏற்றம் பெற்றுள்ளார் கணபதி.

கணபதி வழிபாடு இந்திய நாடு மட்டுமேயன்றி நேபாளம், திபேத்து, இலங்கை, பர்மா, மலேசியா, சயாம், சீனா, இந்தோசீனா, ஜாவா, ஜப்பான், கொரியா முதலிய பல நாடுகளிலும் சிறப்பாகத் திகழ்ந்து வருகிறது.

கி. பி.ஏழாம் நூற்றாண்டில் நரசிம்ம வர்மனின் தானைத் தலைவராகச் சென்ற பரஞ்சோதியாம் சிறுத்தொண்டரால் சாளுக்கிய நாட்டு வாதாபி நகரத்திலிருந்து கணபதிசிலை கொண்டுவரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. அக்காலந்தொட்டே தமிழகத்தில் கணபதி வழிபாடு ஏற்பட்டதென்பர். என்றாலும், இந்தியாவின் பிறபகுதிகளில் கணபதி வழிபாடு முன்னரேயிருந்தமை பற்றிச் சான்றுகள் உள்ளன. எடுத்துக் காட்டாகக் கி.மு. 2ஆம் நூற்றாண்டைச் சார்தனவாக மதிக்கப்பெறும் அமராவதிச் சிற்பங்களுள் கணபதியுருவமுள்ளதென்பர். இந்தியாவைப் பொறுத்த வரையில் மகாராஷ்டிர மாநிலத்தில் கணபதி வழிபாடு பண்டுதொட்டு நிரம்பவுள்ளதென்பர்:

கணபதி தத்துவம்: கணபதியின் திருவுருவம் ஓசை ஒலிகளுக்கெல்லாம் மூலாதாரமாகத் திகழும் பிரணவத்தின் அடையாள வடிவமாகும்; அதுவே மூலாதார சக்தியின் முழுமைத் திருக்கோலமாகும். நாத தத்துவமாக விளங்கும் கணபதியும் விந்து தத்துவமாக விளங்கும் முருகனுமே அனைத்தையும் இயக்கி அனைத்துமாய் விளங்கி உலகிற்கு நலம்பயக்கின்றனர் எனச் சமயஞானிகள் அலையலையாகத் தத்துவ நுட்பங்களை வெளிப்படுத்தி வருகின்றனர். அவ்வாற்றான சில கருத்துக்களைச் சிந்திப்பாம்.

கணபதியின் திருமேனியானது இடைக்கு கீழே பூத உடம்புடனும், இடைக்கு மேல் கழுத்து வரையில் தேவ அல்லது மானுட உடலுடனும் அமைந்துள்ளது. கணபதிக்கமைந்த ஆனைமுகமும் அஃறிணையையும், தேவ அல்லது மானுடவுடல் உயர்திணையையும் சுட்டும். ஒற்றைக் கொம்பு ஆண் தன்மையையும், கொம்பில்லாப் பகுதி பெண் தன்மையையும் சுட்டி நிற்கும். எனவே, பூதமாய், தேவனாய், மானுடனாய், விலங்காய், ஆணாய் பெண்ணாய், உயர்திணையாய், அஃறிணையாய், இவையுள்ளிட்ட எல்லாமுமாய் விளங்குபவர் கணபதி என்பது உய்த்துணரத்தகும்.

கணபதியின் திருவுருவத்தில் நாபிக் கமலம் நான்முகனையும், முகம் திருமாலையும், முக்கண் சிவனையும், இடப் பக்கம் சக்தியையும், வலப்பக்கம் சூரியனையும் குறிப்பதாகக் கொள்வர்.

கணபதியின் ஐந்து திருக்கைகளிலும் உள்ள பொருள்களுள் பாசம் படைத்தலையும், அங்குசம் அழித்தலையும் ஒற்றைக் கொம்பு காத்தலையும், துதிக்கை மறைத்தலையும், மோதகம் அருளுதலையும் உணர்த்துமென்பர்; எனவே, சிவனை ஒருவாறு ஒத்த உலகத்தின் ஐந்தொழிலுக்கும் நாயகராகக் கணபதி விளங்குகிறாரெனலாம்.

யானையையடக்கும் பாச அங்குசங்களை யானைமுகத்தினராகிய அவர் கைக்கொண்டிருப்பது அவரை அடக்கி ஆதிக்கஞ் செலுத்த வேறொருவரில்லை என்பதன் அடையாளமாகும்.

பொதுவாகக் கணபதியின் துதிக்கை மறைத்தலை உணர்த்தினாலும், சிறப்பாக அது தன்னடியவர்க்கு வாரி வழங்கும் வள்ளன்மையையும் குறிக்கும்.

கணபதி தம் வலக்கண்ணாலும் இடக்கண்ணாலும் இகத்தையுணர்கிறாரென்றும், நெற்றிக் கண்ணால் பரஞானக் காட்சி தந்தருளுகிறாரென்றும் கூறுவர். பொதுவாகத் தம் கண்களால் இகபர ஞானங் கொண்டிலங்குதலால் அவர் தம்மை வழிபடும் அடியார்க்கு இகபர ஞானமளிக்கச் சித்தமாயுள்ளார் என்பது தத்துவ உட்கிடை.

கணபதியின் பெருத்து விரிந்த காதுகள் அடியவர்களின் குறைகளை எப்போதும் ஓர்ந்து கேட்டு அருள்புரியும் நோக்கங் கொண்டவை.

அனைத்துலகங்களும் அவருடைய அழகுப் பெருவயிற்றில் அடங்கிக்கிடப்பன என்ற அடையாளமாகவே மத்தளவயிறு அமைந்துள்ளது.

கணபதி பொழியும் மும்மதங்களும் இச்சை கிரியை ஞானமென்ற மூன்று சக்திகளின் பொழிவை உணர்த்துமென்பர்.



250218
ARCHIVES
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருச்சாளி இருள்நாடிக் கீழறுத்துச் செல்லும் இயல்பினது. எனவே, ஆணவத்தையடக்கும் அறிகுறியாகப் பெருச்சாளியை ஊர்தியாகக் கொண்டுள்ளார் கணபதி.

தம்மை வழிபடும் அடியார்களின் செயல் சித்தியையும் அதற்குரிய புத்தியையும் அருளுபவர் கணபதி; ஆதலின், சித்தி புத்தி என்ற இரு பண்புகளையே இரு மனைவியராக உருவகப்படுத்தி மணந்துள்ளார் என்பர்; புராண அடிப்படையிலே சித்தியும் புத்தியும் நான்முகனின் புதல்வியராகவும் கூறப்படுவர். அவர்களை மணந்து நல்வாழ்வு ஊதியம் என்ற இரு குழந்தைகளைப் பெற்றுள்ளார் கணபதி எனவும் விரித்துரைப்பர். 'கணபதி பூசை கைமேற் பலன்' என்பது தமிழக அனுபவப் பழமொழி.

**கணபதி வழிபாடு:**

அடியவர்களுக்கு எளிதில் கிட்டுந் தெய்வமாக விளங்குவது கணபதியே. கையில் கிடைக்கும் சந்தனத்தையோ மஞ்சளையோ களிமண்ணையோ சாணத்தையோ பிடித்துவைத்தால் பிள்ளையார் உருவாகிவிடும். வடிவச் சிறப்புடன் மரத்தையோ கல்லையோ உலோகத்தையோ கொண்டும் கணபதியை உருவாக்கலாம். எல்லாம் அவரவர் உள்ளத்தையும் தேவையையும் சூழ்நிலையையும் பொறுத்ததாகும். என்றாலும், வெள்ளெருக்கின் முற்றிய வைரத்தால் உருவாக்கும் கணபதிக்குத் தனிச்சிறப்புண்டென்பர்.

கணபதியாகிய யானையை அடிமைகளாகிய நாம் நம் உள்ளமாம் கூடத்திலே ஊக்கமெனும் பெரிய கட்டுத் தறியினைப் பிணைத்து நிற்கச் செய்யவேண்டும். உறுதி மிக்கதும் இடையறாததுமாகிய அன்பெனும் இரும்புச் சங்கிலியைக் கொண்டு கட்டிவைத்து, நம் தீவினையையும் அறியாமையையும் யானையுண்ணும் கவளமாக உண்பித்து, ஆர்வமுடன் பணிந்து வழிபட வேண்டும். அந்நிலையில் அவர்தம் கருணை ததும்பும் மதவெள்ளத்தினைப் பொழியச் செய்து நமக்குப் பல நலங்களுண்டாகுமாறு செய்வார்; அதனால், நம் தீவினைகள் நீங்கி உய்தி பெறலாம். இக்கருத்தினைப் பரஞ்சோதி முனிவர் தம் திருவிளையாடற் புராணத்துள்.

உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனுந்
தறிநிறுவி உறுதி யாகத்
தள்ளரிய அன்பென்னும் தொடர்பூட்டி
இடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைத்துவரு வினைகள் தீர்ப்பாம்

என வழிபட்டு நிற்றலால் உணரலாம்.

கணபதியை வழிபாடு புரியும் அடியவர்கள் வன்னியிலையையும் அறுகம்புல்லையும் சிறப்பாக வைத்துத் தொழுகின்றனர். அறுகம் புல்லானது ஓரிடத்தில் முளைத்துக் கொடியாய்த் தழைத்து ஆறு இடங்களில் பொதுவாக வேரூன்றிக் கிளைக்குந்தன்மையது. அந்த அறுகினால் அருகிருந்து அருச்சித்தால் மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களிலும் நம்மைப் பொருந்தச் செய்து ஈடேற்றி அருள்புரிவார் என்பது மக்களின் யோக நம்பிக்கை.

கணபதியைக் கண்கண்ட தெய்வமாக வழிபடும் ஔவையார் தமக்குச் சங்கத்து முத்தமிழையும் தந்தருளுமாறு ஆர்வமுடன் வேண்டுகிறார்; அதற்குப் படையற் பொருளாகப் பாலையும் தெளிந்த தேனையும் வெல்லப் பாகினையும் தேங்காய் உள்ளீடாகிய பருப்பினையும் கலந்து பக்குவப்படுத்தித் தரச் சித்தமாக இருப்பதாகவும் புலப்படுத்துகிறார். இதனை நல்வழியில்,

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன்
— கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா'

எனவரும் வெண்பாவால் உணரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனுள், பாலாகிய முல்லைத்திணைக் கருப்பொருளும், தேனாகிய குறிஞ்சித் திணைக் கருப்பொருளும், வெல்லப் பாகாகிய மருதத்திணைக் கருப்பொருளும் தேங்காய்ப் பருப்பாகிய நெய்தல்திணைக் கருப்பொருளும் நானிலப் பொருள்களும் தந்து வழிபட்டு நின்றால் சங்கத்தமிழ் மூன்றும் பெற வாய்ப்பாகலாம் என்ற குறிப்புப் பொருளுண்டாதலைக் கண்டு மகிழலாம்.

வாழைப்பழம் பலாச்சுளை மாங்கனி அப்பம் எள்ளுருண்டையெல்லாம் வேண்டு மட்டும் உண்டு வயிறு பெருத்திருந்தும் கணபதி, கபிலதேவநாயனார் தம் உள்ளத்தில் நீங்காதிருப்பதாக நினைத்துப் போற்றுகிறார். இதனை மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலையுள்,

'வாழைக் கனிபல வின்கனி
மாங்கனி தாஞ்சிறந்த
கூழைச் சுருள்குழை யப்பமெள்
ளுண்டையெல் லாந்துறுத்தும்
பேழைப் பெருவயிற் றோடும்
புகுந்தென் னுளம்பிரியான்
வேழத் திருமுகத் துச்செக்கர்
மேனி விநாயகனே'

எனவரும் கட்டளைக் கலித்துறைப் பாவால் உணர்ந்து மகிழலாம்.

ஒடித்த மருப்பினைக் கையில் கொண்டு திருநாரையூரில் வீற்றிருந்தருளும் பொல்லாப் பிள்ளையாரின் அடிவணங்கிநின்றால் ஆணவம் கன்மம் மாயை என்ற மலங்களால் அடியவருக்கு ஒரு தீங்கும் உண்டாகாதாம். நெருப்பை எறும்பு உண்ண முடியுமா? அது போல அடியவர்களையும் மலங்கள் வருத்த முடியா என்பதை நம்பியாண்டார் நம்பிகள்,

'மருப்பையொரு கைக்கொண்டு
நாரையூர் மன்னும்
பொருப்பையடி போற்றத் துணிந்தால்
— நெருப்பை
அருந்தஎண்ணு கின்றஎறும்
பன்றே அவரை
வருந்தஎண்ணு கின்ற மலம்'

எனத் திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலையுள் கூறுகிறார்.

அடியார்களின் துன்பங்களையும் துயர்களையும் நீக்கியருளுதற்கு நிரம்பவும் வல்லபம் வேண்டும்; அதற்கேற்ப வல்லபை என்ற சக்தியை—மரீசி முனிவரது மகளை மணந்து விளங்குவதாய்ப் புராணங் கூறும்.

கணபதியை அமைதியுடன் தூய்மையாய் வழிபட்டு நின்றால்— சிறப்பாகத் தலையில் குட்டிக்கொண்டும் தோப்புக் கரணம் போட்டும் பணிவுடன் நின்றால் ஒவ்வொருவரின் உள்ளன்பிற் கேற்ப நிறைந்த செல்வம், நன்மக்கட்பேறு, நோயற்ற வாழ்வு, மனநிறைவு, ஆயுள் முதலிய நற்பேறுகள் தந்தருளுவார்.

'அல்லல்போம் வல்வினைபோம்
அன்னைவயிற் றிற்பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்போம்
— நல்ல
குணமதிக மாம் அருணைக்
கோபுரத்துள் மேவும்
கணபதியைக் கைதொழுதக் கால்.'
- விவேக சிந்தாமணி

---

சரணுடை யேன் என்று தலைதொட் டிருக்க
முரணுடை யேன் அல்லேனான் முன்னம் — திரள்நெடுங்காட்
டண்டத்தான் அப்புறத்தான் ஆனை முகத்தான் அமரர்
பண்டத்தான் தாள் பணியாப் பண்டு.

வேட்கை வினை முடித்து மெய்யடியார்க் கின்பஞ்செய்
தாட்கொண் டருளும் அரன்சேயை — வாட்கதிர்கொள்
காந்தார மார்பிற் கமழ்தார்க் கணபதியே
வேந்தா உடைத்தமரர் விண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயக பரத்துவம்

— சிவத்தமிழ்ச்செல்வி, கலாநிதி
தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

" நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்."

ஞானத்தை வழங்குகின்ற பெருமான் விநாயகர். யோகிகள் இவரை மூலாதாரத்துத் தெய்வமாகப் போற்றுவர். அருணகிரிநாதர் அநுபூதியின் தொடக்கத்தில் இரண்டு இடங்களில் விநாயகரை வழிபடுகிறார். கோயிலுக்கு நாம் சென்றடைந்தவுடன் முதலிற் காட்சியளிப்பவர் திருக்கோயில் வாசலில் இருக்கின்ற துவாரகணபதியாவார். அடுத்துக் கோயிலுக்குள்ளே புகுந்தால் அங்கேயும் விநாயகர் எழுந்தருளியிருப்பார். அநுபூதியில் 'பஞ்சக்கர ஆனை' என்று முதலிலே பாடித் துதித்து அடுத்த பாடலில் " தேடுங் கயமாமுகனைச்செருவில்சாடும் தனியானை" என்று பாடுகின்றார். விநாயகருக்கு முதல் வணக்கம் செலுத்துவதன் நோக்கம் உள்ளத்தில் இடம்பெற்ற ஆங்காரம் நீங்கி ஓங்காரத்தின் மூலம் ஞானம் உதயமாக வேண்டும் என்பதற்காகவேயாகும். இதனாலேயே 'ஞானக்கொழுந்து' என்று விநாயகப் பெருமானுக்குச் சிறப்பு நாமமும் உண்டு. கன்று, கொழுந்து, பிள்ளையார் என்னும் நாமங்கள் அவருடைய இளமைத்தன்மையை விளக்குவனவாகும். வழிபடுவோருக்கு இளமையும் இனிமையும் நல்கி உள்ளத்தைக் குழந்தை உள்ளமாக்கி ஞானச்சுடரை ஏற்றிவைக்கும் சக்தி விநாயக வழிபாட்டுக்குண்டு.

## பஞ்சக்கர ஆனை

" செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக்கர ஆனை பதம்பணிவாம் "

என்பது அநுபூதி. பஞ்சக்கர ஆனை என்றால் ஐந்து கரங்களை உடைய ஆனை என்றும், ஐந்து அட்சரங்களை உடைய ஆனை என்றும் பொருள்படும். பஞ்ச கிருத்தியங்களையும் செய்யும் பரம்பொருளும் அவனும் ஒன்றே. இறைவன் வேறு விநாயகன் வேறன்று. ஐந்து கரங்களிலும் ஏந்தி இருக்கின்ற பொருட்களை எடுத்துக் கொண்டால் மோதகம் படைத்தலையும், தந்தம் காத்தலையும், அங்குசம் அழித்தலையும், பாசம் மறைத்தலையும், கமண்டலம் அருளலையும்விளக்குகின்றன. இதனைவிட ஐந்து அட்சரங்களையுடைய யானை என்பதை உணரும்பொழுது அவருடைய திருமுகமே திருவைந்தெழுத்தின் அடக்கம் என்பதை அறியலாம். யானை முகம் பிரணவத்தின் அடையாளம். பிரணவம் திருவைந்தெழுத்தின் அடக்கம்.

" இறைசக்தி பாசம் எழில்மாயை ஆவி
உறநிற்கும் ஓங்காரத்துள் "

ஓங்காரமாகிய பிரணவத்துள் அடங்காதது எதுவும் இல்லை. அதனையே விநாயக வடிவம் காட்டுகிறது.

## தனியானை

கயாசுரன் யானை வடிவமுடையவன் ஆனால் அது ஆணவத்திற்குரிய அடையாளமான வடிவம். ஆணவத்தை யானையாக வருணிப்பார்கள் அறிஞர்கள். யானைக்கு மதத்தினால் மயக்கம ஏற்படுவது போல ஆணவத்துக்கு மயக்கும் சக்தி உண்டு. இந்த அசுரன் தேவர்களுக்கும், நல்லவர்களுக்கும் தீங்கு செய்வதிலின்பம் கண்டவன். நல்லவர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்று தேடித்தேடித் தீங்கு செய்தவன். அதனாற்றான் 'தேடுங் கயமாமுகன்' என்று பாடினார். அசுரர்கள் பழிவாங்கும் தன்மை வாய்ந்தவர்கள். ஆனால், ஆண்டவன் அவர்கள் செய்த பழிகளை மன்னித்து அவர்களுக்கே நன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் பேரருள் வாய்ந்தவர். ஆனை முக அசுரனுக்கு முன்னே எதிர்ப்பட்ட விநாயகர் ஆனைமுகத்தோடேயே காட்சி அளித்தார். ஆனால் அந்த ஆனையும் இந்த ஆனையும் ஒரே தன்மை வாய்ந்தவையன்று. அசுரனாகிய யானை பிறருக்குத் துன்பஞ் செய்வதில் மகிழ்ச்சி காண இந்தத் தனியானை இன்பம் செய்வதில் மகிழ்ச்சியடைந்தது. அதுவுமன்றிக் காட்டிலே உள்ள யானைகள்போன்று மயக்கமாகிய மதத்தைப் பொழியாமற் கருணை என்கின்ற மதத்தைப்பொழிவது; ஏனைய யானைகள் காட்டிலே திரிவதுபோல இது உள்ளமெனும் கூடத்தில் உலாவுவது; மற்றையவை அங்குசத்தால் அடக்கப்படுவன; இந்த யானை தன் கரத்திலுள்ள அங்குசத்தால் அகந்தையை அடக்கிவிடுவது.

"அஞ்சுள ஆனை அடவியுள் வாழ்வன
அஞ்சுக்கும் அஞ்செழுத்து அங்குச மாவன
அஞ்சையும் கூடத் தடுக்கவல் லார்கட்கே
அஞ்சாதி யாதி அகம்புக லாமே."

## விநாயக வடிவம்

நாம் காணும் புறக்காட்சியின் நோக்கம் அகக் காட்சி சிறக்கவேண்டும் என்பதற்காகவே. இந்தக் குறிக்கோளுடனே தான் இறைவனுக்கு உருவத் திருமேனி அமைத்து அழகு செய்கின்றோம். விநாயகரை நோக்கினால் எமக்குத் தெரிவது குழந்தை வடிவம். பருத்த உடம்பு குழந்தைகளுக்கு அழகுதருவன. அதேபோன்று மெலிந்த உடம்பு வயோதிபருக்கு அழகு தருவன. குழந்தை மெலிந்தால் வைத்தியருக்குக் காட்டி ஆலோசனை பெறுவது போல் வயோதிபர் பருத்தால் அந்த நிலைக்கு ஆளாகலாம். எனவே, கொழுத்த உடலும் தொந்தி வயிறும், குட்டைக் காலும் குழந்தை நிலையை எடுத்துக் காட்டுகின்றது. அதனை மெய்ப்பிக்கவே இனிமையான படையல்களையும் படைக்கின்றோம். முகம் பிரணவத்தையும், செவிகள் மலவெப்பத்தை மாற்றுவதையும், முக்கண்கள் முச்சுடரையும் உணர்த்துவன. பருத்த வயிறு அண்டங்கள் தோன்றுவதற்குரிய இடமென்பதைக் காட்டுகிறது. அபரஞானம், பரஞானம் என்கின்ற திருவடிகள் எமது அடைக்கலத்துக்குரிய இடம் அவையென்பதைத் தெரிவிக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக நல்லுணர்வை எழுப்புவது அவருடைய வாகனம். ஆன்மாக்கள் எல்லாம் எலிகளாக நின்று எம்பெருமானைத் தாங்கவேண்டும் என்ற கருத்தும் ஞான சொரூபியை தாங்குவதால் எந்தவித பாரமும் நமக்கு ஏற்படாது என்பதும் முன்பிருந்த பாரம் நீங்கிவிடுவதற்கு அதுவே வழி என்பதும் புலப்படுகிறது.

## பிரணவரூபி

பிரணவம் என்பது 'ஓம்' என்னும் மூல மந்திரத்தை ஆதாரமாகக்கொண்டது. அகர, இகர, உகரம் என்னும் மூன்றெழுத்தோசைகளாலும் அமைந்தது. "அ" என்னும் ஒலி பிரம்மாவையும், "இ" என்னும் ஒலி விஷ்ணுவையும், "உ" என்னும் ஒலி உருத்திரனையும் குறித்து மும்மூர்த்திகளும் பிரணவத்துள் அடங்கியுள்ளார்கள் என்பதைப் புராணங்கள் காட்டுகின்றன, வாக்கின் முதனிலையே பிரணவமென்பது உபநிடதக் கொள்கையாகும். காயத்திரி மந்திரத்திலும் ஓங்காரத்தின் சிறப்புக் கூறப்படுகின்றது. வேதங்களின் தோற்றமே ஓங்காரத்தை உட்பொருளாகக் கொண்டதென்பர். காயத்திரி மந்திரத்தின் முதலெழுத்துப் பிரணவ எழுத்தாக அமைந்து நாதவிந்துக்களின் சேர்க்கையால் உருவாகியதென்பர். விநாயகப் பெருமானின் துதிக்கை நாதவிந்து வடிவமாக அமைந்துள்ளது. நாம் ஒன்றை எழுதத் தொடங்கும்போது பிள்ளையார் சுழி போடுகிறோம். இது நாதவிந்து தத்துவத்தையே புலப்படுத்துகிறது. இதனை மௌனாக்கரம் என்று சொல்வர். நாதவிந்து தத்துவம் சிவத்தையும் சக்தியையும் உணர்த்துவன. எனவே சிவமும் சக்தியும் ஒன்றாகிய தன்மையே விநாயகரில் திருவருட் தோற்றமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பிரணவப் பொருளாம் பெருந்தகை
ஐங்கரன்
சரணஅற் புதமலர் தலைக்கணி
வோமே.''

## முதற் பூசைக்குரியவர்

தன்னை வழிபடுவோர்களுடைய விக்கினங்களைத் தீர்ப்பதும் அவரவர் வழிபாட்டை ஏற்றுச் சித்தியையும் புத்தியையும் வழங்குவதும் விநாயகப் பெருமானின் திருவருட்சிறப்பாகும். இம்மூர்த்தத்தின் பெருமையை உணர்ந்த பெரியோர் தனியாலயங்கள் பலவற்றை அமைத்து வழிபட்டனர். அதுமாத்திரமல்லாமல் வேறு எந்த ஆலயங்களிலும் விநாயகரை எழுந்தருளச் செய்து முதற் பூசையும் நடத்திவருகின்றனர். சிவனுனுடைய கோயில்களிலுங்கூட விநாயருக்கே முதற்பூசை நடைபெறுகிறது. சிவபெருமான் முன்னொருகாலத்தில் முப்புரங்களை அழித்தற்காகச் சென்றபோது விநாயகரை நினையாது தேரில் இவர்ந்து சென்றார். அப்பொழுது அத்தேரின் அச்சு முறிந்ததாகவும் பின்னர் விநாயகப் பெருமானை நினைந்துவழுத்தியபொழுது முறிந்த அச்சுப் பொருந்தியதாகவும் புராணங்கள் கூறுகின்றன. இவ்வாறு தேர் முறிந்த இடம் அச்சிறுபாக்கம் என இன்றும் அழைக்கப்படுகிறது, பூமியையே தேராகவும் மகாமேருமலையை வில்லாகவும் கொண்டுசென்றார். நாம் உணரும் போது விநாயகப்பெருமானை நினையாமற் பூமியின் அச்சே இற்றதென அறியக் கிடக்கிறது. சுருங்கக் கூறினால் விநாயகனை மறந்தால் எமது வாழ்க்கையாகிய அச்சே முறிந்து தள்ளாடும் நிலை வந்து விடும் என்பது தெரிகிறது. எனவே, யாவராயினும் என்ன கருமத்தைத் தொடங்கினாலும் பெருமானையே முதலில் வழிபட்டு அவ்வக் கருமங்களையாற்றினால் அவையனைத்தையும் நிறைவுறச் செய்வான் விநாயகன்.

## விநாயக புராணம்

விநாயகராலயங்களிலே கார்த்திகை மாத அபரபக்கப் பிரதமை முதல் மார்கழி மாதப் பூர்வபக்கச் சஷ்டி வரையுள்ள இருபத்தொரு நாட்களும் விநாயக புராணம் படிப்பது வழக்கம். இந்த நாட்கள் விநாயக நோன்புக்குரிய நாட்களாகும். திருமால் குருட்டுப் பாம்பாகச் சாபம்பெற்று விமோசனமடைந்த தினமே விநாயகசஷ்டி தினமென்றுங் கூறுவர். தீர்க்காயுள், இலட்சுமிகரம், நோயின்மை முதலிய சிறப்புக்கள் விநாயக விரதமனுட்டிப்பதாலும் விநாயக புராணம் கேட்பதாலும் உண்டாகின்றன என்பர். திரிபுரனை அழித்தற்காகச் சோதியுட் சோதியாகிய சிவபெருமான், விநாயகரை மனதில் தியானித்து ஏகாட்சர மந்திரத்தை ஜெபித்து யோகத்திலிருந்தார். அந்த நேரத்தில் விநாயகமூர்த்தி சிவனுடைய முகத்திலிருந்து தோன்றி, ''தனது பெயர் கணேசர்'' என்று கூறினார். திரிபுரனை வதைத்தற்குத் தனது மந்திரத்தையும் அதன் பீஜ அட்சரத்தையும் சிவபெருமானுக்கு உபதேசித்தவரும் அவரே. இதனாற் செவிகுளிர்ந்த சிவபெருமான் சகல கணங்களுக்கும் தலைவராம் பதவியை விநாயகருக்கு அருளினார். இன்னும் ''கணானாந்துவா'' என்னும் மந்திரத்தைக் கிருச்சதம முனிவர் தனது மகன் திரிபுரனுக்கு உபதேசித்தாரென்றுங் கூறுவர்.

''தந்தை தானே மகனாகச் சாருமென்னு
முறையாலும்
எந்தை பெருமான் அருள்செய்த இயல்பி
னாலும் கிருச்சதமன்
மைந்தன் தனக்கு கணானாந்துவா
வென்மனுவை உபதேசித்
தந்தண் மறைநூல் விதியானே
அனுஷ்டிப்பதுவும், புகன்றொழிந்தான்.''

இச் செய்திகளையெல்லாம் எடுத்துரைப்பது விநாயக புராணமாகும்.

## நிவேதனப் பொருள்கள்:

இக்கவரை நற்கனிகள் சர்க்கரை
பருப்புடனெய்
எள்பொரி யவல்துவரை –
இளநீர்வண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டெச்சில்பய றப்பவடை பச்சரிசி

பிட்டுவெள

ரிப்பழமி டிப்பல்வகை – தனிமூலம்

மிக்கஅடி சில்கடலை பட்சண

மெனக்கொளொடு

விக்கிநச மர்த்தனெனும் – அருளாழி

வெற்பகுடி லச்சடில வில்பரமர்

அப்பரருள்

வித்தகம ருப்புடைய – பெருமாளே.

கரும்பு, அவரை, கனிகள், சர்க்கரை, பருப்பு, நெய், எள், பொரி, அவல், துவரை, இளநீர், தேன், பயறு அப்பம், வடை, பச்சரிசி. பிட்டு, வெள்ளரிப்பழம், மா, கொழுக்கட்டை, கிழங்கு, அடிசில், கடலை முதலியனவாக அமைந்த நிவேதனப் பொருட்களைச் சிற்றுண்டியாகக் கொண்டருளுபவன் விநாயகன். உலகம் அனைத்தையும் தன் பருத்ததொந்தியில் வைத்துக் காக்கும் பெருமானுக்கு நாம் படைப்பவை அனைத்தும் சிற்றுண்டிகள் போன்றவையே. மலையத்தனை சுவாமிக்குக கடுகத்தனை கற்பூரம் என்று சொல்லுவார்கள். அதுபோல நம்மன்பிற்கு அறிகுறியாக இவற்றைப் படைக்கிறோம். ஆணவமலத்தை நீக்கி அறிவைப் பிரகாசிக்கச் செய்யவேண்டும் என்பதே தேங்காய் உடைப்பதன் கருத்தாகும். குடுமி, கண்கள் ஆகியவற்றைத் தேங்காய் உடையதாக இருப்பதால் அறிவுணர்ச்சிக்கு இருப்பிடமான நம் தலையை அது குறிக்கிறது. தேங்காயைச் சுற்றியுள்ள ஒடு அறிவைச் சூழ்ந்துள்ள ஆணவ மலத்தைக் காட்டுகிறது. வெற்றிலை நம்முடலைக் குறிக்கும். பாக்கு செல்வத்தைக் குறிக்கும் வாழைப்பழங்கள் நல்வினை தீவினைகளைக் குறிக்கும். எனவே, ஆரோக்கியம் செல்வம், பாவபுண்ணிய விடுதலை ஆகியவற்றை விரும்பி நிற்கின்றோம் என்பதையே தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம் வைத்து அருச்சனை செய்தல் குறிக்கிறது.

## பொல்லார் இணைமலர்

சைவத் திருமுறைகளைத் தொகுத்தளித்தவர் நம்பியாண்டார்நம்பிகளாவர். பத்தாவது நூற்றாண்டிலே வாழ்ந்த இவர் திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார் அருள் பெற்றவர். கலைஞானங்களைக் கல்லாமலே கற்பித்த பெருமை விநாயகனுக்கு உண்டு. தில்லையிலே திருமுறைகள் இருக்கும் இடத்தை நம்பிக்குக் காட்டி வைத்தவரும் அவரே. பெருமானின் அருட்கட்டளை ஏற்றுத் திருமுறைகளைக் கண்டெடுத்துப் பதினொன்றாக வகுத்தவர் நம்பி. இன்று நாமெல்லாம் திருமுறைகளை அறிய வைத்த பெருமான் விநாயகனே என்றால் அதில் மிகையொன்றுமில்லை. சைவசித்தாந்த சாத்திரங்களுக்குள் முடிமணிபோல் விளங்குவது சிவஞானபோதம். பன்னிரண்டு சூத்திரங்களால் சைவசித்தாந்த சாத்திர உண்மைகளைத் தெளிவாக விளக்கிய ஒப்பற்ற நூல் சிவஞானபோதமே. இதனை ஆக்கித்தந்த மெய்கண்ட தேவர் திருவெண்ணெய்நல்லூர்ப் பொல்லாப்பிள்ளையார் அருள் பெற்றவர். பொல்லாப்பிள்ளையாரைவணங்கி நூலைத் தொடங்குமிடத்தில்,

'கல்லால் நிழல்மலை
வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர்
நல்லார் புனைவரே'

என்று போற்றுகிறார்.

எனவே சராசரங்களைச் சார்ந்து நிற்பவரும் எல்லாக் கணங்களுக்கும் இறைவராக விளங்குபவரும் பெரிய தோற்றத்தையுடையவருமாகிய விநாயகப் பெருமானை வணங்கி வருவினைகளைப் போக்குவோமாக.

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலில் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமானே'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# விநாயகரின் திருவுருவங்கள்

விநாயகருடைய திருவுருவங்கள் பக்தர்களுடைய மனத்தின் பரிபாகத்திற்கு ஏற்ப முப்பத்திரெண்டு வகைகளாகப் போற்றி வணக்கப்பட்டு வருகின்றது. இவற்றில் ''லட்சுமி கணபதி'' யின் தோற்றம் எமக்கு கிடைக்கவில்லை. திருவாவடுதுறை ஆதீன மகாவித்வான் திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்கள் வழங்கிய உருவ விளக்கங்களும் படங்களும் அடியார்களுக்காக இங்கே தரப்படுகின்றன.

## 01. பால கணபதி

நான்கு திருக்கரங்களும், யானை முக மும் உடையவர். உதிக்கின்ற செங்கதிர் போன்ற நிறம் உடையவர். குழந்தைத் திருமேனி கொண்டவர். வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு ஆகிய வற்றைக் கரங்களில் தாங்கி இருப்பவர். இவரது துதிக்கையில் மோதகம் இருக்கின் றது.

## 02. தருண கணபதி

எட்டுத் திருக்கரங்களையும் யானை முகத்தையும் உடையவர் கைகளில் பாசம் அங்குசம் பணியாரமாகிய மோதகம், விளாம்பழம், நாவற்பழம், ஒடிந்த தன் கொம்பு நெற்கதிர், கரும்பின் துண்டு ஆகியவற்றை உடையவர். நண்பகலில் தோன்றுகிற சூரியனைப்போன்ற நல்ல சிவந்தமேனி படைத்தவர்.

## 03. பக்தி கணபதி

சரத் காலத்து வெண்மதி போன்ற நிறம்கொண்டவர். தேங்காய், மாம்பழம் வாழைப்பழம், பாயச பாத்திரம் ஆகிய வற்றை நான்கு கரங்களில் ஏந்தியவர்.

## 04. வீரகணபதி

வேதாளம், வேல், அம்பு, வில், சக கரம், கத்தி, சேடகம், சம்மட்டி, கதை, அங்குசம், நாகம், சூலம், குந்தாலி, மழு, கொடி ஆகிய பதினாறையும் தாங்கிய பதினாறு திருக்கரங்கள் கொண்டவர். சிவந்த திருமேனியும், கோபம் சற்றே கொண்ட திருமுகத்தையும் உடையவர்.

## 05. சக்தி கணபதி

செவ்வந்தி வானம் போன்ற நிறம் கொண்டவர்; பச்சை மேனிகொண்ட தேவியைத் தழுவியவர். ஒருவருக்கொரு வர் இடுப்பில் கைகொடுத்துத் தழுவிக் கொண்டிருப்பது தனி அழகு. பாசம், பூமாலை ஆகியவற்றைத் தாங்கிய திருக் கரத்துடன், அஞ்சேல் என்ற அபய கர மும் கொண்டவர்.

## 06. துவிஜ கணபதி

நான்கு திருக்கரங்களிலும் முறையே புத்தகம், அட்சமாலை, தண்டம், கமண்டலம் ஆகியவற்றைத் தரித்தவர். மின்னற்கொடி போல விளங்குகின்ற கை வளையங்களை உடையவர். சந்திரன் போல வெண்மையானவர். நான்கு யானை முகங்களைக் கொண்டவர்.

## 07. சித்தி கணபதி

மாம்பழம், பூங்கொத்து, கரும்புத் துண்டு, எள்ளுருண்டை, பரசு இவற் றைத் துதிக்கை உட்பட ஐந்து கரங்களில் தரித்தவரும் பொன் போலப் பொலிவும் பசுமையும் கலந்த நிறமும் கொண்டவர்.

## 08. உச்சிஷ்ட கணபதி

நீலோற்பலம், மாதுளம்பழம், வீணை, நெற்கதிர், அட்சமாலை ஆகியவற்றைத் தரித்தவர். நீலத் திருமேனி கொண் டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பால கணபதி



தருண கணபதி



ஸ்ரீ பக்தி கணபதி



வீர கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சக்தி கணபதி



துவிஜ கணபதி



சித்தி கணபதி



உச்சிஷ்ட கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**விக்ன கணபதி**



**க்ஷிப்ர கணபதி**



**ஏரம்ப கணபதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லட்சுமி கணபதி

இவரது திருவுருவப் படம் எமக்குக் கிடைக்கவில்லை.

எட்டுக் கைகளிலும் கிளி, மாதுளம்பழம், கலசம், அங்குசம், பாசம், கற்பகக் கொடி, கட்கம், வரதம், இவற்றையுடையவர். அமுதப் பிரவாகம் போன்ற வெண்மை நிறத்தோடு நீலத் தாமரைப் பூவை ஏந்தி இருபெருந் தேவிமார்களோடு திகழுபவர்.



மஹா கணபதி



விஜய கணபதி



நிருத்த கணபதி



ஊர்த்துவ கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏகாட்சர கணபதி



வர கணபதி



திரயாக்ஷர கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



க்ஷிப்ரபிரசாத கணபதி



ஹரித்திரா கணபதி



ஏகதந்த கணபதி



சிருஷ்டி கணபதி



உத்தண்ட கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரணமோசன கணபதி



துண்டி விநாயகர்



துவிமுக கணபதி



மும்முகப் பிள்ளையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிங்க கணபதி



யோக கணபதி



துர்க்கா கணபதி



சங்கடஹர கணபதி

நன்றி, பிள்ளையார் வழிபாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09. விக்ன கணபதி

சங்கு, கரும்பு, வில், புஷ்ப பாணம், கோடரி, பாசம், சக்கரம், கொம்பு, மாலை பூங்கொத்து, பாணம் ஆகியவற்றோடு கூடிய திருக்கரங்களை உடையவர். ஆபரணங்களை நிறைய தரித்து, பொன் மேனியராக விளங்குபவர்.

## 10. க்ஷிப்ர கணபதி

தந்தம், கற்பகக்கொடி, பாசம் ரத்னகும்பம் அங்குசம் இவற்றை ஏந்தியவர், செவ்வரத்தம்பூ போன்ற அழகிய மேனியர். செந்நிறம் ஆனவர்.

## 11. ஏரம்ப கணபதி

அபயம், வரதம் ஆகிய திருக்கைகளை உடையவர். பாசம், தந்தம், அட்ச மாலை, பரசு, சம்மட்டி, மோதகம், பழம் ஆகியவற்றைத் தாங்கியவர். சிங்க வாகனத்தில் ஏறியவர். யானைமுகம். ஐந்து உடையவர், பசுமை கலந்த கருமை நிறம் உடையவர்,

## 12. லக்ஷ்மி கணபதி

எட்டுக் கைகளிலும் கிளி, மாதுளம் பழம், கலசம், அங்குசம், பாசம், கற்பகக் கொடி கட்கம், வரதம் ஆகியவற்றை உடையவர். அமுதப் பிரவாகம் போன்ற வெண்மை நிறத்தோடு நீலத்தாமரையை ஏந்திய இரண்டு பெருந்தேவியருடன் திகழுபவர்.

## 13. மகா கணபதி

மாதுளம்பழம், கதை, கரும்பு, வில் சக்கரம், தாமரை, பாசம், நீலோற்பலம் நெற்கதிர், தந்தம், ரத்ன கலசம் ஆகிய வற்றைத் திருக்கரங்களில் தாங்கியவர். செங்கதிர் போன்ற நிறம் உடையவர். முக்கண்ணர், பிறை முடி கொண்டவர், மடிமீது எழுந்தருளி இருக்கின்ற தாமரையை ஏந்திய தேவியாற் சுவையோடு தழுவப்படுபவர்,

## 14. விஜய கணபதி

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம், ஆகியவற்றைத் தரித்தவர். பெருச்சாளி வாகனத்தில் ஏறி இருப்பவர். செந்நிற மானவர்,

## 15. நிருத்த கணபதி

இவரைக் கூத்தாடும் பிள்ளையார் என்றும், நர்த்தன கணபதி என்றும் சொல்வார்கள். மோதிரங்களை அணிந்த விரல்களை உடைய கைகளால் பாசம், அங்குசம், அபூலம், கோடரி, தந்தம் ஆகிய வற்றைத் தரித்தவர். பொன் போன்ற நிறம் உடைய திருமேனி கொண்டவர். கற்பக விருட்சத்தின் அடியில் எழுந்தருளி இருப்பவர்.

## 16. ஊர்த்துவ கணபதி

நீலப்பூ, நெற்பயிர், தாமரை, கரும்பு வில், பாணம், தந்தம் ஆகியவற்றைத் தாங்கியவர். பொன் வண்ணப்பொலிவும் பச்சைநிற திருமேனியும் கொண்ட தேவியைத் தழுவி இருப்பவர்.

## 17. ஏகாட்சர கணபதி

செந்நிறமானவர், செம்பட்டு ஆடை அணிந்தவர். செம்மலர் மாலை கொண்டவர். பிறைமுடியர், முக்கண்ணர். குறுந்தாளர். குறுங்கையர். மாதுளம்பழம், பாசம், அங்குசம், வரதம் ஆகிய வற்றைத் தாங்கிய கைகளைக் கொண்டவர். யானை முகத்தவர், பதுமாசனத்தில் அமர்ந்தவர், பெருச்சாளி வாகனம் உடையவர்.

## 18. வர கணபதி

செவ்வண்ணம் கொண்டவர். யானை முகமும் முக்கண்களும் உடையவர். பாசம் அங்குசங்களைத் தரித்தவர். தேன் நிறைந்த கபாலத்தைக் கொண்டவர். பிறை முடி சூடியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. திரயாக்ஷர கணபதி

அசைகின்ற செவிகளாகிய சாமரை அணிந்தவர். பொன்னிறமானவர். நான்கு கரங்களை உடையவர். பாசம். அங்குசம் தந்தம், மாம்பழம் ஆகியவற்றைத் தாங்கியவர், துதிக்கை நுனியில் மோதகத்தை உடையவர்.

20 க்ஷிப்ரபிரசாத கணபதி

பாசம், அங்குசம், கல்பலதை. மாதுளம்பழம், தாமரை, தர்ப்பை, விஷ்ரம் ஆகியவற்றைத் தரித்தவர். திருவாபரணங்களை அணிந்தவர். பேழை வயிறு கொண்டவர்.

21. ஹரித்திரா கணபதி

மஞ்சள் நிறமானவர். நான்கு கரங்களை உடையவர். அவற்றில் பாசம், அங்குசம் தந்தம், மோதகம் இவற்றைத் தரித்திருப்பவர். பக்தர்களுக்கு அபயம் அளிப்பவர்.

22. ஏகதந்த கணபதி

பேழைவயிறு கொண்டவர். நீலமேனி உடையவர். கோடாரி, அட்சமாலை, லட்டு, தந்தம் ஆகியவற்றைத் தாங்கியவர்.

23 சிருஷ்டி கணபதி

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் ஆகியவற்றைத் திருங்கரங்களில் ஏந்தியவர். பெருச்சாளி வாகனத்தை உடையவர். சிவந்த திருமேனி கொண்டவர்.

24. உத்தண்ட கணபதி

நீலம், தாமரை, மாதுளம்பழம், கதை தந்தம், கரும்பு வில், ரத்தின கலசம், பாசம், நெற்கதிர், மாலை ஆகியவற்றை ஏந்திய பத்துக் கைகளை உடையவர். அழகிய தாமரைப் பூவை ஏந்திய பச்சை மேனி கொண்ட தேவியால் தழுவப்படுபவர். சிவந்த மேனி உடையவர்.

25. ரணமோசன கணபதி

பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம் ஆகியவற்றைத் தரித்தவர். வெண் பளிங்கு போன்ற மேனியர்; செந்நிறப் பட்டாடை உடுத்தியவர்.

26. துண்டி கணபதி

அட்சமாலை, கோடரி, ரத்தினகலசம், தந்தம் ஆகியவற்றை ஏந்தியவர்.

27 துவிமுக கணபதி

தந்தம், பாசம், அங்குசம், ரத்ன பாத்திரம் ஆகியவற்றைக் கையில் ஏந்தியவர். பசுநீல மேனியர், செம் பட்டாடையும், ரத்தின கிரீடமும் அணிந்தவர். இரு முகங்களைக் கொண்டவர்.

28. மும்முகக் கணபதி

வலது கைகளில் கூரிய அங்குசம், அட்சமாலை, வரதம் ஆகியவற்றை உடையவர். இடது கைகளில் பாசம், அமுத கலசம், அபயம் ஆகியவற்றை உடையவர். பொற்றாமரை ஆசனத்தின் நடுப் பொகுட்டில் மூன்று முகங்களுடன் எழுந்தருளி இருப்பவர். புரசம்பூ போன்ற சிவந்த நிறத்தை உடையவர்.

29 சிங்க கணபதி

வீணை, கற்பகக் கொடி, சிங்கம், வரதம் ஆகியவற்றை வலது கைகளில் தாங்கியவர். தாமரை, ரத்ன கலசம், பூங்கொத்து, அபயம் ஆகியவற்றை இடது கைகளில் உடையவர். வெண்ணிறமான மேனி கொண்டவர். யானை முகத்தோடு சிங்க வாகனத்தில் எழுந்தருளியவர்.

30. யோக கணபதி

யோக நிலையில், யோக பட்டம் தரித்துக கொண்டு, இளம் சூரியன் போன்ற நிறத்தோடு இந்திர நீலம் போன்ற ஆடையை உடுத்திக்கொண்டு பாசம், அட்சமாலை, யோக தண்டம், கரும்பு ஆகியவற்றையும் ஏந்தி இருப்பவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**31. துர்க்கா கணபதி**

சுட்ட பசும் பொன் நிறம் கொண்டவர். எட்டுக் கைகளும் பெரிய மேனியும் உடையவர். அங்குசம், பாசம், அட்சமாலை, தந்தம் இவற்றை வலது கைகளில் ஏந்தியவர். பாசம், வில், கொடி, நாவற் பழம் இவைகளை இடது கையில் கொண்டவர். செந்நிற ஆடை தரித்தவர்.

**32. சங்கடஹர கணபதி**

இளஞ் சூரியன் போன்ற நிறத்தோடு இடப்பாகத்தில் அம்மையை உடையவர். அம்மை பசிய மேனி கொண்டு, நீலப் பூவை ஏந்தி இருப்பவர், வலது கைகளில் அங்குசமும் வரதமும் கொண்டவர். இடது கைகளில் பாசம், பாயாச பாத்திரம் ஏந்தியவர். செந்தாமரைப் பீடத்தில் நிற்பவர். நீல நிறமான ஆடை அணிந்தவர்.

---

உ

# துணவியரசடிப் பதியிலெழுந்தருள் புரிகவே;

வினைகள் களைந்தெங்கள் வாழ்வுமலரப்
பெருவரங்கள் தருகின்ற நாயகனே;
துணையா யிருந் தெங்கள் பாவம் போக்கி
நிறைவாழ் வருள்கின்ற பெரியோனே;
கணநாத னெனு(ம்) பெயரோடு அருளாட்சி
புரிகின்ற விநாயகப் பெருமானே:
துணவி யரசடிப் பதியிலெழுந் தெங்கள்
அல்லல் போக்கி யருள் புரிகவே;

இந்திரத் தோட்டம் செழிக்கவன்று நற்
கங்கையைப் பாயவைத்தருளிய இறையோனே;
நித்தமும் தேடிவந்தும் பாதம் பணிவோர்க்கு
நற் பசுமையருளி வாழவைக்கும் பெம்மானே;
சித்தி புத்தியொடு கூடி யெமக்கு நல்
வாழ்வருளுஞ் செல்வ விநாயகப் பெருமானே;
நித்தமும் துணவி யரசடிப் பதியிலெழுந்து
அல்லல் போக்கி யருள் புரிகவே.

— துணவியூர்க் கேசவன்



250218

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கண் அரசு மகிழ் அத்திமுகத்தான்

— திருமதி கலாதேவி பொன்னம்பலம்
விரிவுரையாளர்
ஆசிரிய கலாசாலை, கோப்பாய்.

சைவசமயத்தின் பிரமாண நூல்களாவன வேதம், ஆகமம், பன்னிரு திருமுறை, பதின்னான்கு சித்தாந்த சாத்திரங்களுமாம். இவற்றில் வேதம், ஆகமம் இரண்டும் வடமொழியிலுள்ளவை. தமிழிலுள்ளவை பன்னிரு திருமுறைகளும், பதின்னான்கு சித்தாந்த சாத்திரங்களுமாம். இராஜராஜ சோழப் பெருமன்னனின் வேண்டுகோளுக்கமைய திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரிடம் விண்ணப்பித்து அவர் அருள் பெற்று திருமுறைகள் இருக்குமிடத்தை அறிந்து தில்லைத் திருச்சிற்றம்பலம் சென்று கூத்தப் பெருமானைப் போற்றி 'கோயில் திருப்பண்ணியர் விருத்தம்' பாடி அவர் அருள் பெற்று தேவார ஏடுகளை எடுத்து வகுத்துத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பியாவர். நம்பி சிறுவனாக இருக்கும் பொழுதே திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் அருள்பெற்று சகல கலைகளையும் உணர்ந்த விநாயகனை முதன் முதல் போற்றிப் பாடிய பாடல்களே விநாயகர் திருவிரட்டைமணிமாலை ஆகும். வெண்பா கட்டளைக் கலித்துறை ஆகிய இரு பாவகைகளால் அந்தாதித் தொடையில் இருபது பாடல்களை மாலையாகக் கோர்த்து விநாயகருக்குச் சாத்தி மகிழ்ந்தார். திருவிரட்டைமணி மாலையில் முதல் செய்யுள் வருமாறு.

''என்னை நினைந்து அடிமை கொண்டு
என் இடர் கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான்
— புன்னை
விரசு மகிழ் சோலை வியன்ற
நாரையூர் முக்கண்
அரசு மகிழ் அத்தி முகத்தான்''

திருநாரையூரில் உள்ள முக்கட்செல்வன் மகிழும் யானைமுகக் கடவுள், தன்னை அடிமையாகக் கொண்டருளி தன் இடர்களைக் களைந்து எப்பொழுதும் விநாயகனையே நினைக்கச் செய்கின்றான் எனப் போற்றுகின்றனர். சைவராகிய நாம் எக்கருமத்தையும் விநாயக வழிபாட்டுடன் தொடங்குவது மரபு. நம் சைவத் திருமுறைகளும் விநாயகன் அருள்பெற்ற நம்பி மூலம் கண்டெடுக்கப்பட்டு வகுத்துத் தொகுக்கப்பெற்று வழங்கி வருகின்றமை அறிந்து போற்றி இன்புறத்தக்கதாம்.

சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கையும் மெய்கண்ட சாத்திரங்கள் எனவும் வழங்குவர். மெய்கண்ட சாத்திரங்களுள் முதனூலாகிய சிவஞான போதத்தை அருளிச் செய்த மெய்கண்ட தேவர் திருக்கைலாய ஞான பரம்பரையைச் சேர்ந்த பரஞ்சோதி முனிவரிடம் உபதேசமும், மெய்கண்டார் என்ற தீட்சாநாமமும் பெற்று திருவெண்ணெய் நல்லூர்ப் பொல்லாப்பிள்ளையார் திருமுனையில் நிட்டை கூடி அருள்பெற்றே உலகோருக்கு உபதேசிக்கத் தொடங்கினார் என்பது வரலாறு. ஆக தமிழ் கூறும் நல்லுலகில் சைவத் திருமுறைகளும் சைவசித்தாந்த சாத்திரங்களும் பரவ முதல்வராக இருந்து அருள்புரிந்தவர் விநாயகப் பெருமானே.

ஒப்புயர்வில்லாத விநாயகப் பெருமான் அவதாரம் பற்றி கந்தபுராணத்தில் விபரிக்கப்படுகின்றது. சிவனும், சக்தியும் களிறும், பிடியுமாக திருவிளையாடல் புரிந்தே பிள்ளையார் அவதரித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக அங்கு கூறப்படுகின்றது. பார்வதி பரமேஸ்வர மூத்த புதல்வராகையால் பிள்ளையார் மூத்த விநாயகர், மூத்த நாயனார் எனப் போற்றப்படுகின்றார். அவர் திருமுகம் ஓங்கார வடிவில் அமைந்திருப்பதால் ஓங்காரப் பெருமான் பிரணவன், பிரணவசொரூபி எல்லாம் போற்றப்படுகிறார். வேத மந்திரங்கள் எல்லாம் பிரணவகோசமாகிய ''ஓம்'' ஒலியை முதலாகக் கொண்டே ஓதப்பெறுகின்றன. ஓங்கார ஒலிக்குரிய வரிவடிவமான ஓம் என்ற உருவ அமைப்புடன் விநாயகன் திருமுகம் அமைந்திருக்கின்றது. நாத தத்துவத்திற்கே மூல ஒலி "ஓம்,' என்பதாம் உலக சிருஷ்டியில் முதலில் தோன்றியது நாதம். இவ்வகையில் விக்கிரகங்களின் திருவுருவ அமைப்பில் பிள்ளையார் முதலிடம் பெறுவதும் மூத்த பிள்ளையாராக மதித்துத் துதிக்கப் பெறுவதும் வியந்து போற்றத்தக்கதே.

''பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவர்இடர்
கடி கணபதி வர அருளினன்.......
.............. இறையே''

என திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் தேவாரத்தில் களிறும், பிடியுமாக வடிவெடுத்து தனது திருவடிகளை வணங்கும் அடியார்களின் இடர்களைக் களைந்து அருள்புரிவதற்காக கணபதி அவதரிக்க அருள்புரிந்தார் இறைவன் எனக் குறிப்பிடுகின்றார். தம்மை உணர்ந்து வழிபடுவோருக்கு இடையூறுகளை நீக்கியும் அல்லாதவர்க்கு ஆக்கியும் அருள் சுரப்பவர் ஆதலால் விக்னேஸ்வரன் எனப்படுகிறார். சகல கணங்கட்கும் தலைவனாய் விளங்கும் உண்மையை உணர்த்த கணபதி, கணேசன், கணநாதன் முதலிய திருப்பெயர்களைத் தாங்கி அருளுகின்றார்.

தம்மை வழிபடுவோரின் இடர்களைக் களைவதுடன் அவர்கள் எடுக்கும் காரியங்களையும் கைகூட வைப்பவரும் விநாயகப் பெருமானே. கபிலதேவ நாயனார் தாம் அருளிச் செய்த மூத்த நாயனார் திருவிரட்டைமணிமாலை முதற் செய்யுளில் பின்வருமாறு பாடுகிறார்.

"திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும்
செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்
— உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை
முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை''

மேலும் இவர் ஐந்தாம் செய்யுளில் ''விநாய்கனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்'' எனவும் கூறுகின்றார். உயிர்களின் பிறவித் துன்பம் நீங்குவதற்கு ''பாச நீக்கம்'' அவசியம் உயிரின் சஞ்சித வினையை இறைவனே குருவாக வந்து நீக்கியருள்வான் என்பது சைவசித்தாந்த முடிபு. பாச வினையை பற்றறுக்க வல்லவன் சிவன் ஒருவனே. சிவ அம்சம் பொருந்திய விநாயகப் பெருமானும் வினையை வேரறுக்க வல்லான் என்பதனால் சிவனின் வேறாகாதவர் விநாயகன் என்பது பெறப்படுகிறது.

நெற்றிக்கண், கங்கை, சடைமுடி, இளம்பிறை, இண்டை முதலான சிவனுக்குரிய அங்கங்கள் பிள்ளையாருக்கும் உரியனவாகக் பேசுதல் தொன்றுதொட்ட மரபு, வலக்கண் சூரியனாகவும், இடக்கண் சந்திரனாகவும், நெற்றிக்கண் அக்கினியாகவும் விளங்குபவர். சிவன் சித்திரை வருடப்பிறப்பு (மேட சங்கிராந்தி) தைப்பொங்கல் (மகர சங்கிராந்தி) ஆவணி, ஞாயிறு ஆகிய காலங்களில் முற்றத்தில் பொங்கலிட்டு சூரியனை வணங்கும் போது சிவசூரியனாகவே வணங்கின்றோம். பௌர்ணமித் திதியில் பூரண சந்திரனை அம்பிகையாகவே தொழுகின்றோம்.

சௌர மதக் கடவுளாகச் சூரியனையும் சாக்த மதக் கடவுளாக அம்பிகையையும் நினைப்பது கூடக்கிடையாது. சூரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரர்களைச் சிவமாகவும் சக்தியாகவுமே வழிபடுகிறோம். சைவ சமயிகள் கல்லை வைத்து வணங்கினாலும் சிவமாகவே வழிபடுவர். மரத்தை வணங்கினாலும் சிவமாகவோ அன்றிச் சக்தியாகவோ வழிபடுவர். முருகனை ஆறுமுகச் சிவனாகவும் பஞ்சமுக விநாயகரை ஐம்முகச் சிவனாகவும் வழிபடும் மரபுடைய சைவச் சிறார்களுக்கு சைவநெறி கற்பிக்கும் பொழுது காணபத்திய வழிபாட்டின் மூலம் விநாயகனையும், கௌமார வழிபாட்டின் மூலம் முருகனையும் அறிமுகப்படுத்திக் கற்பிப்பது தவிர்க்கப்படவேண்டியதொன்றாகும்.

மஹாகவி சுப்பிரமணியபாரதியாரும் விநாயகர் நான்மணி மாலையில் பின்வருமாறு போற்றிப்பாடுவது கவனித்தற்குரியது.

"இறைவி இறைவன் இரண்டும்
ஒன்றாகித்
தாயாய்த் தந்தையாய் சக்தியும்
சிவனுமாய்
உள்ளொளியாகி உலகெலாந் திகழும்
பரம்பொருளேயோ! பரம்
பொருளேயோ!
ஆதிமூலமே! அனைத்தையும் காக்கும்
தேவ தேவா! சிவனே! கண்ணா!
வேலா! சாத்தா! விநாயகா! ........"

அம்மை அப்பராய், சக்தியாய் சிவனுமாய் விளங்கும் பரம்பொருளே விநாயகராகவும் விளங்குவதாகக் கூறுகின்றார். மேலும் அவர்,

"..அங்குச பாசமும் கொம்பும் தரித்தாய்
எங்குல தேவா போற்றி!
சங்கரன் மகனே! தாளிணை
போற்றி." என்றும்

"கவலைப் படுதலே கரு நரகம்மா!
கவலையற் றிருத்தலே முக்தி,
சிவனொரு மகனிதை நினக்கருள்
செய்கவே" என்று

சிவனாரின் மைந்தனாகவும் விநாயகரைப் போற்றுகின்றார்.

எல்லோராலும் எளிமையாகவும் ஆழ்ந்த பக்தி வைராக்கியத்துடன் நம் பிக்கையுடனும் வழிபடப் பெறுபவர் விநாயகப் பெருமான்.

"யாதொரு தெய்வங் கொண்டீர்
அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார் தாம் வருவார்"

என அருணந்திசிவாச்சாரியார் சிவஞானசித்தியாரில் அறிவுறுத்தியது போல விநாயக வணக்கம் நம்மவரைப் பொறுத்த வரையில் சிவ வணக்கமேயாம்.

---

உ

## "இணையிலா இன்பமெமக்கருள்"

குணபதியே நல்லோங்காரக் கணபதியே
துணவிப் பதியுறை அரசடி விநாயகனே — நினை
கணப்பொழுதும் மறவாது தொழுதோம்
இணையிலா இன்பமெமக்கருள்.

அரசடிப் பதியுறையும் ஆனைமுகனே
கரவாது தினம் நின்பதம் தொழுதோம் — பணிந்
திரவாது நாமென்றும் சிறந்து வாழ
வரம் எமக்கு நீ அருள்.

பால்பழம் நற்பலகாரமோடு உவந்து
நூல்சொல் பூசை எல்லாம் செய்தோம் — நவ
கோள் செய் தீமைகளெல்லாம் நீங்கி
ஆல்போல் நாம்வாழ அருள்.

— சங்கரத்தையூர் சபாநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகாகும்பங்களின் திருவீதியுலா.



தூபி அபிஷேகம் நிகழும் அருட்காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" கலைநிறை கணபதி சரணம் சரணம்
கஜமுக குணபதி சரணம் சரணம் "

அழகுக்கு அழகு செய்யும். நவீன அழகிய கலை நயமிக்க
தங்க வைர நகைகளுக்குச் சிறந்த ஸ்தாபனம்

# ஆசைப்பிள்ளை அன் சன்
# நகைத் தொழிலகம்

திருமகள் வாசா, நிகரை வீதி, சங்கானை.

உள்நாட்டு வெளிநாட்டுத் தொலைத்தொடர்புகளை
உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்,

# ஆசைப்பிள்ளை அன் சன்
# தொலைத் தொடர்பு சேவை

உள்நாடு: 070-21 2399 வெளிநாடு: 0094-70-21 2399

இல. 10, பஸ்நிலையம் முன்பாக சங்கானை.

---

- வீடியோப் படப்பிடிப்பிற்கும்
- கறுப்பு வெள்ளை, கலர் புகைப்படங்களை எடுக்கவும்
- மணவறை, வில்லுப்பந்தல், மசாக்கட்டான் பந்தல், கதிரைகள் சிங்கப்பூர் சோடனைகள், சரமாலைகள், தண்ணீர்ப்பரல், பாய்கள் போன்ற பல பொருட்களை வாடகைக்குப் பெறவும்

நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

# குரு போட்டோ & வீடியோ
# KURU PHOTO & VIDEO

(நவீன கொம்பியூட்டர் முறையில் படம், வீடியோ எடுக்கப்படும்)

உரிமையாளர் ; சிதம்பரநாதன் குருபரன்

சங்கரத்தை, : : வட்டுக்கோட்டை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ. ச. பேரம்பலம் சக நிறுவனம்

**50, 52 & 54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**

தொலைபேசி : 2988
பக்ஸ் : 2368

மிதிவண்டி, உதிரிப்பாக இறக்குமதியாளர்கள், லோட்டஸ் மிதிவண்டி ரயர், ரியூப்களிற்கான ஏகவிநியோகஸ்தர்கள். மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள், நீர் இறைக்கும் யந்திரங்கள், கலர் பிலிம் றோல்ஸ், வீடியோ ஓடியோ கசற்கள்

மற்றும்

பல்பொருள் விற்பனையாளர்கள்

**உங்கள் தேவைகளுக்கு இன்றே நாடுங்கள்**

## இ. .ச. பேரம்பலம் சக நிறுவனம்

---

"கருணை வள்ளல் கணபதியைத் தொழ
அருமைப் பொருட்கள் அனைத்தும் வருமே"

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட

● ஸ்பெஷல் ஐஸ் கிறீம் ● சொக்லெட் ஐஸ்கிறீம்

மற்றும்

● வெனிலா ● புரூட்சலட் ● நட்ஸ் ● ஜெலி

**ஐஸ்கிறீம் வகைகளுக்கு**

நாடவேண்டிய இடம்

# வரதாஸ் கிறீம் ஹவுஸ்

பிரதான வீதி, : : சங்கானை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# எளிதாய் வந்து இனிதாய் அருளும் விநாயகர்

— பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்

சுலபமாக அருள் செய்பவராகவும் அருட்பெருமையும் பல முதன்மையும் உடையவராகவும் விநாயகப் பெருமான் விளங்குகின்றார்.

சிவபெருமான், உமாதேவியார், விநாயகர், முருகன் முதலிய கடவுளர் மட்டுமன்றி சூரியன் சந்திரன் முதலிய தேவர்களும் கூட அருமையுடையவர்களாய் அறியவும் அருள் பெறவும் இயலாத தன்மை உடையவர்களாய் உள்ளனர். இப்படி இருக்க விநாயகப் பெருமான் சுலபமாக அருள்செய்பவர் என்று சொல்வதெப்படி?

எவரும் தன்னை வணங்கத் தக்கதாக இருப்பது விநாயகரின் தனிச் சிறப்பாகும். ஒவ்வொரு சிறு கிராமத்திலும் விநாயகர் கோயில் இருக்கும். அத்துடன் ஒவ்வொரு சைவ ஆலயத்திலும் அவர் எழுந்தருளியிருப்பார். இப்படி வணங்க வாய்ப்பாக இருப்பது விநாயகப் பெருமானின் சுலபமாக அருள் செய்யும் முறைகளுள் ஒன்றாகும்.

குட்டிக் கும்பிடுதல், தோப்புக்கரணம் போடுதல் அறுகு, நாவற்பழம், விளாம்பழம் முதலிய எளிதில் கிடைக்கும் பொருட்களைக் காணிக்கையாக ஏற்று அருள்புரிதலும் விநாயகப் பெருமானின் சுலபமாக அருள்புரியும் முறைகளில் ஒன்றேயாகும்.

யானைமுகம், பெரிய குழந்தைச் சரீரம், சிறிய கைகால்கள் என்பன பொருந்திய திருமேனி உடையவராய் இருந்து எல்லோராலும் சிரமமின்றி நினைத்து வழிபட வாய்ப்பான தோற்றமுடையவராய் விளங்குவதும் விநாயகப் பெருமானின் எளிதில் அருளும் இயல்பில் ஒன்றாகும்.

மோதகம் முதலிய பலகாரவகைகள் விளாம்பழம் முதலிய பழவகைகளைத் தனக்கு உகந்த நிவேதனப் பொருள்களாக, காணிக்கைப் பொருள்களாக விநாயகப் பெருமான் அங்கீகரித்தருளியுள்ளார். இதனால் விநாயக வழிபாடு இனிமையும் மகிழ்ச்சியும் உடைய வழிபாடாக உள்ளது. சிறுவர்களையும் பெரியவர்களையும் மகிழ்விக்கும் முறையில் விநாயகர் வழிபாடு அமைந்திருப்பதற்கும் விநாயகரின் சுலபமாக அருளும் இயல்பே காரணம் எனலாம்.

ஒவ்வொரு கருமநிமித்தம் ஆங்காங்கு வழிபடும் சந்தர்ப்பங்களில் சாணம், சந்தனம், மஞ்சள் முதலிய பொருட்களையே தனக்குரிய திருமேனியாகக் கொள்வது விநாயகரின் சுலபமாக வழிபாட்டை ஏற்கும் கருணையின் அடையாளம் எனலாம். வில்வம், மருக்கொழுந்து முதலிய தளிர்களையும் தாமரை செவ்வந்தி முதலிய மலர்களையும் பத்திர புஷ்பங்களாக ஏற்றருளும் விநாயகர் அதிகமாக விரும்புவது அறுகம்புல்லையாகும்.

விடம் தீர்த்தல், வயிற்றுப் புண்ணைப் போக்குதல் முதலிய பல மருத்துவ குணங்களை உடையதாயிருத்தல் மட்டுமன்றி எளிதில்கிடைத்தல், சுலபமாக உண்டாக்கி வளர்த்தல் என்பனவும் அறுகின் இயல்பாகும். தினமும் விநாயக வழிபாடு செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை என்ற பெரியார் தன் வீட்டு முற்றத்தில் ஒரு அறுகம்பாத்தி அமைத்திருந்தார் றோசா, முல்லை முதலிய மலர்ச் செடிகளை உண்டாக்கிப் பயன்பெறுவதுடன் ஒப்பிடும்போது அறுகை உண்டாக்கி வளர்த்தல் மிக மிகச் சுலபம் என்பதை அறிந்துகொள்ளலாம். அறுகைப் போலவே உண்டாகி விட்டால் அழியாமல் நின்று பயன் தரும் மரம் வன்னியாகும், வன்னி இலையிலும் விஷத்தைப் போக்கும் மருத்துவகுணம் உண்டு. வன்னி மரத்தின் கீழ் செபம், தியானம் செய்தால் பல மடங்கு பயன் விளையும் என்பர், விநாயகப் பெருமான் விரும்பி உறையும் இடங்களில் வன்னி மரத்தடியும் ஒன்றாகும்.

"வலிய ஆட்கொளும் வள்ளல்" என்று விநாயகப் பெருமானைப் புகழ்ந்து வணங்கத்தக்க விதத்தில் விநாயகப் பெருமானின் இத்தகைய பண்புகள் விளங்கினாலும் விநாயகரின் தத்துவம் மிகவும் பெரியதாகும்.

உலகம் பிரணவத்தில் இருந்து தோன்றியது என்றும், பிரணவம் இயற்கையாக விளங்குவது என்றும் கூறுவர். உலகத்தைத் தோற்றுவிக்க விரும்பிய சிவபெருமான் முதலில் பிரணவத்தைத் தோற்றுவித்து அதிலிருந்து உலகைப் படைத்தார் என்பர். எனவே உலகத் தோற்றத்திற்குக் காரணமான பிரணவம் விநாயகரின் வடிவம் என்றும் கூறுவர். இதிலிருந்து விநாயகப் பெருமானின் முதன்மையையும், தலைமையையும் உணரலாம்.

சிவபெருமானுக்கும் உமையம்மைக்கும் பிள்ளையாக விநாயகப் பெருமான் தோன்றினார். உடனே "உன்னை வணங்குபவர் செயல்களுக்கு இடையூறுகளைப் போக்கி, வணங்காதவர் செயல்களுக்கு இடையூறுகளை உண்டுபண்ணுக என்று சிவபெருமான் அருள் புரிந்தார். இவ்வாறு அருளிய சிவபெருமானே திரிபுர தகனம் செய்யச் சென்றபோது விநாயகப் பெருமானைத் துதிக்காமல் சென்றமையால் அவர்சென்ற தேரின் அச்சினை விநாயகர் முறித்துவிட்டார். இவ்வாறு தன் வணக்கத்தின் அவசியத்தை எல்லோரும் அறியச்செய்த விநாயகர், உலகில் ஒவ்வொருவரும் தாய் தந்தையரை வணங்குவது மிக அவசியம் என்பதை உணர்த்த தானே அம்மை அப்பராகி சிவபெருமானையும், உமாதேவியையும் வலம் வந்து வணங்கினார். இவ்வாறு பெற்றோரை வணங்குவது உலகை வலம் வருவதற்குச் சமனானது என்பதையும் உணர்த்தியிருக்கின்றார்.

ஔவைப் பிராட்டிக்கு முத்தமிழறிவை வழங்கியது. பின் தனது துதிக்கையால் ஔவையாரை கைலாயத்தில் விட்டது; நம்பியாண்டார் நம்பிக்கு வேதசிவாகமங்களையும், திருமுறைகளையும் கண்டறிய உதவியது இந்திரனின் சிவபூசையின் பொருட்டு அகத்தியரின் கமண்டலத்தில் காவிரி நதியைப் பெருகச் செய்தது. அதன் பின்னர் அகத்தியர் தனக்கும் ஆறு வேண்டும் எனக்கேட்க வழங்கியது! வள்ளி முருகனை அறியாது திருமணத்திற்கு உடன்படாதபோது வள்ளிக்கு நல்லறிவு உண்டாகச் செய்தது வள்ளி திருமணம் நிகழக்காரணமாக இருந்தருளியது. தன்னைவிர தமிருந்துவழிபட்ட இலக்கண சுந்தரி என்பாள் விரத நியமத்தை விட்டபோது பல வித இடையூறுகளால் திரும்பவும் தொடர்ந்து விரதமிருக்கச் செய்து தன் அருளைப் பூரணமாக இலக்கண சுந்தரிக்குக் கிடைக்கச் செய்தது முதலிய பல அருட்செயல்கள் பற்றி புராணங்கள் கூறுவதால் அவரின் அருளைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

இவை மட்டுமன்றித் தொடர்ந்து கிரமமாக விநாயகப் பெருமானை வழிபடுபவரும் அவர் அருட்செயல்கள் பற்றி அறிய வேண்டும். ஒவ்வொரு விநாயகர் ஆலயத்தின் உண்மை வரலாறுகளும், விநாயகப் பெருமான் புராணகாலத்தைப் போல இக்காலத்திலும் அருள்புரியும் அற்புதங்களும் தன்னடியவர்க்குத் தோன்றாத்துணையாய் விளங்குவதும் பகிரங்க இரகசியங்களாக உள்ளன. எனவே நியமமாகவும், அன்பாகவும், சிரத்தையுடனும். விநாயகப் பெருமானை வழிபட்டால் ஒவ்வொருவரும் விநாயகப் பெருமானின் பெருமையையும் எளிதாக அருள் புரியும் இயல்பையும் நன்கு உணரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துணவி அரசடிப் பிள்ளையாரின் எழுந்தருளி விக்கிரகம்



துணவி அரசடிப் பிள்ளையார் கும்பாபிஷேக தினத்தில் வீதியுலா வருங்காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



# விநாயகரும் அகத்தியரும்

— பண்டிதர் த. இராசரத்தினம்
*விரிவுரையாளர்*
*ஆசிரிய கலாசாலை, கோப்பாய்.*

விநாயகருக்கு மேல் தெய்வமில்லை. என்பதும் அகத்தியருக்கு மேற்பட்ட முனிவரில்லை என்பதும் மறுக்கமுடியாத உண்மை. விநாயகரே முழுமுதற் கடவுள் எனவும் அவர் சிவனின் பிறிதொரு தோற்றமே எனவும் அறிஞர் கூறுவர். சிவனே பூசிக்கத்தக்க தெய்வமாக விநாயகர் விளங்குகின்றார். திரிபுர மெரித்த விரிசடைக் கடவுள் விநாயகரை வழுத்தாமல் இரதத்தில் இருந்தபோது இரதத்தின் அச்சை விநாயகர் பொடி செய்தாரெனத் திருப்புகழ் எடுத்தியம்புகிறது. விநாயகர் துதியாக வரும் அப்பாடலில் "அச்சிவனுறைரதம் அச்சது பொடிசெய்த அதிதீரா" என அருணகிரிநாதர் குறிப்பிடுகின்றார். வசிட்டர் முதலியோரை எல்லாம் முனிசிரேஷ்டர் என நூல்கள் வர்ணிப்பது உபசாரமேயாகும். உண்மையில் முனிவர்க்கெல்லாம் முனிவராக விளங்குபவர் அகத்தியர் என்பதில் ஐயமில்லை. விநாயகருக்கும் அகத்தியருக்குமுள்ள பல்வேறு தொடர்புகளையும் வடநூல்கள் மட்டுமல்லாமல் செந்தமிழ் நூல்களும் எடுத்தியம்புகின்றன.

விநாயகரும் அகத்தியரும் தோற்றத்தாலும் ஓரளவுக்கு ஒப்புமையுடையவர்கள். விநாயகரை விகட சக்கர விநாயகரெனக் கந்தபுராணம் பேசுகின்றது. அகத்தியரைக் குறுமுனிவர் என நூல்கள் இயம்புகின்றன. விநாயகர் விஷ்ணுவின் சக்கராயுதத்தை விழுங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியவர். அகத்தியர் கடல் நீர் வற்றச் செய்தவர். செயற்கருஞ் செய்கையாலும் விநாயகரும் அகத்தியரும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர்கள். அடைந் தாரைக் காப்பதிலும் அகத்தியருக்கும் விநாயகருக்கும் ஒப்பானவர் பிறிது யாரு மில்லை எனலாம். அடியவர் பழங்குடில் தோறும் எழுந்தருளிய பெருமை சிவ னுக்கு உண்டெனப் பெரியபுராணங் கூறுகின்றது. பழங்குடில் தோறும் அல் லாமல் குளக்கரையிலும் மர நிழலிலும் மாட்டுத் தொழுவத்திலும் வீட்டு முற் றத்திலும் வானளாவிய ஆலயங்களிலும் விநாயகர் எழுந்தருளுகிறார். பெரிய இடம் சிறிய இடமென்றில்லாமல் பெரு மனம் படைத்த மக்கள் வாழுமிடமெல்லாம் விநாயகரை நாம் காணலாம் "கைவினை தேர்ந்த நுண்வினையாளர் அமைத்த சிலைகளில்" மட்டும் அல்லாமல் புதிய தொழிலை ஆரம்பிக்கும் தொழிலாளி சாணமும் அறுகம்புல்லுங் கொண்ட மைந்த உருவத்திலும் விநாயகர் குடி கொண்டு அருள்புரிகின்றார். தெருத் தேங்காய் கூட வழிப் பிள்ளையாருக்குப் போதுமானது. கைத்தலம் நிறைகனி அப்பமொடவல் பொரியலையும் மோத கத்தையும் மட்டும் அவர் வேண்டுவ தில்லை. அன்பால் உதவும் அனைத்தும் விநாயகருக்கு நிவேதிக்கத்தக்கனவாகும். அகத்தியரும் தேவர், முனிவர் இருக்கு மிடத்திலும் இருப்பார். இராவணன் இயங்கிய மலைப்பகுதியிலும் இருப்பார். பொதிய மலையில் இராவணனைக் காந் தருவத்தாற் பிணித்து அவனை ஆண்டி யங்காமல் விலக்கியவர் அகத்தியர் என நூல்கள் கூறுகின்றன.

உமையம்மையாரை மணஞ் செய்ய இறைவன் மலையரையன் ஊருக்குச் சென்றபோது தேவர் முனிவர்களும் ஆண்டுச் சென்றிருந்தனர். அதனால் மேரு தாழ்ந்து தென்றிசை உயர்ந்தது. இருபாலையும் சமமாக்குமாறு தேவர் அனைவரும் இறைவனிடம் வேண்டினர். இறைவன் தாழ்ந்த தென்திசையை மேம் படுத்த அகத்திய முனிவரையே தேர்ந் தெடுத்தாரென்றால் முனிவருள் பெரிய வர் அகத்தியரே என்பதில் ஆட்சேபனை யும் உண்டோ? அகத்தியரும் தென் திசையேகி இசையின் வன்மையால் இரா வணனை அடக்கி அவனை ஆண்டு வாரா மல் விலக்கிக் காடுகெடுத்து நாடாக்கி குளம் தொட்டு வளம் பெருக்கி ஆங்குள் ளோரைக் கல்விக் கேள்விகளில் மேம் பாடடையச் செய்ததினால் வடபாலும் தென்பாலும் சமமாயின வென்பர்.

சாபம் பெற்று தமிழ்நாடுபுக்க இந் திரன் தான் உண்டாக்கிய பூஞ்சோலை மழையின்றி வாடக்கண்டு தன் குறையை விநாயகப்பெருமானிடம் முறையிட்டான். அப்போது கங்கை ஆற்றுக்குச் சென்று காவிரியாறைக் கமண்டலத்தில் வாங்கிக் கொண்டு அகத்தியர் தென்திசை வந்து கொண்டிருப்பவர், வழியில் காவிரியாறை வைத்துவிட்டு நீராடச்சென்று விட்டார் விநாயகர் காகவடிவெடுத்து கமண்டலத் தைத் தட்டிவிட்டார். காவிரி பெருக் கெடுத்தது இந்திரன் குறை தீர்ந்தான். அகத்தியர் காகத்தை துரத்திக் கொண்டு வந்தார், காகம் மறைந்தது. அங்கு சிறுவன் ஒருவன் தோன்றினான். சிறு வனுக்குக் குட்டப்போனார் அகத்தியர். அப்போது அவ்விடத்தில் விநாயகப் பெரு மான் காட்சி கொடுத்தார். குட்டப் போன அகத்தியர் குட்டப் போன கையோடு ஒடி விநாயகரை வழிபட்டார். குட்டிக் கும்பிடும் வழக்கத்தை அகத்தி யரே விநாயகர் வழிபாட்டிற் புகுத்திய வராவார். அகத்தியரும் விநாயகரும் சைவ உலகின் இருகண்களாக காட்சி யளிக்கின்றனர்.

குறுமுனிவர் எனப்படும் அகத்தியர் பெருமுனிவு கொண்டவர். தாமிட்ட கட் டளையைச் சந்தர்ப்பவசத்தால் காப் பாற்ற முடியாத திரணதுமாக்கினியா ரெனப்படும் தொல்காப்பியரையும் தமது மனைவி உலோபமுத்திரையையும் சுவர்க் கம் புகாப்பீர் எனச் சபித்துத் தாமும் அத்தகைய சாபம் பெற்றவர். தமிழ் நாட்டில் பொதிய மலையில் அகத்தியர் இன்றும் வாழ்கின்றார். அவர் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழவேண்டுமென்று நல்லெண்ணத்நோடு இக்கதை சிருஷ்டிக்கப்பட்டிருக்கலாம். விநாயகர் தம்மை இகழ்ந்த சந்திரனைச் சபித்தவர். குறுமுனிவரும் விகட விநாயகரும் அடைந்தார்க்கு அருள் செய்வதிலும் தமது மனங்கோண நடப்பவரைச் சபிப்பதிலும் ஒரே தன்மையுடையவராகவே காணப்படுகின்றனர்.

அகத்தியர் வடநாட்டிருந்து தென்னாட்டுக்கு வந்தவர். விநாயகரும் வாதாபி என்னும் இடத்திலிருந்தே தமிழ் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டவரென நவீன ஆய்வாளர் கருதுவர். இருவரும் தமிழ் நாடுள்ளளவும் தமிழ் நாட்டில் வாழ்வரென்பதில் ஐயமில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பர் தேவாரத்தில் விநாயகர்

சைவத்தமிழ்மணி, புலவர்
திரு. இரா. செல்வகணபதி எம். ஏ. பி. எட்.

## கல்லார்கட் பட்ட திரு

செறிந்து வளர்ந்து நின்றது அந்தக் காடு. கதிரவனின் ஒளிவெள்ளம் ஊடே புகமுயன்று தளர்ச்சியுற்றது. அமைதி கொண்ட அக்காட்டிடையே கடுந்தவம் இயற்றி நிற்கின்றாள் ஓர் இளம்பெண். அவள் ஓர் அரக்கர்குலக்கொழுந்து. வசிட்டர் மரபில் வந்தவர் மகாதமுனிவர். அவர்பால் அருள்பெற விரும்புகிறாள். விபுதைஎன்ற பெயர்கொண்ட அந்நங்கை. தவமேற்கொண்ட முனிவர் ஒருநாள் கண் விழிக்கிறார். அவர் பார்வையில் காதல் மடப்பிடியொன்று களிற்றொடு மருவி நிற்கும் காட்சி படுகிறது முனிவர் காமக் குறிப்பில் ஆழ்கிறார். அவர் குறிப்புணர் கிறாள் விபுதை. முனிவர் அருகில் நெருங் குகிறாள். காமவயப்பட்ட முனிவர் விபு தையைப்பெண்யானையாக்கித் தானோர் ஆண் யானை வடிவில் அவளோடு கூடிக் கலக்கிறார். இக்கூட்டக் கலப்பில் யானை முகத்துடன் கயாசுரன்தோன்றி சிவபெரு மானை நோக்கிக் கடுந்தவம் இயற்று கிறான். பெருமான் அருளால் பெருவரம் பெற்று மதங்கபுரத்தில் அரசாள்கிறான் கயாசுரன். '' கல்லார் கட்பட்ட திரு '' வென்ன அவன் தவங்கள் தேவர்களை வருத்தப் பயன்படுகிறது.

## கணபதி தோற்றம்

தேவர்கள் சிவபெருமானைப் பரவு கின்றனர். பெருமான், உமையைப் ''பிடி யதன் உரு'' கொளச் செய்கிறார். ''கரியது வடிவு'' தான் கொள்கிறார். இக்கூட்டக் கலப்பில் வழிபடும் அவர் இடர்கடி கணபதி'' தோன்றுகிறார். தோன்றி தன் கொம்பினை ஏவி கயா சுரனை அழிக்கிறார். தேவர்கள் மகிழ் கின்றனர். கயாசுரன் பெருச்சாளி வாகன மாய் விநாயகரைத் தாங்குகிறான்.

இது கந்தபுராணம் விரிக்கும் கதை, இந்த விரிந்த கதைக்கு அடியிட்டவர் அப் பர்பெருமான், விநாயகக் கடவுள் தோற் றத்திற்கு அவர் கூறும் காரணம் இப்படி அமைகிறது. அடியார்களும், மறைவல்லா ரும் எதிர்கொள்ளத் திருவீழிமிழலை எய் திய ஆளுடைய அரசர் திருவீழிமிழலை யானைப் பணிந்துபாடுகிறார். ''போலும் போலும்'' என முடிவடையும் தொடர் களால் இறைவன் இயல்பை எடுத்தோதி வியக்கும் அரசர் விநாயகன் தோற்றத்தை விளங்க வரைகிறார்

*'' கைவேழ முகத்தவனைப்
படைத்தார் போலும்
கயாசுரனை அவனாற்கொல்
வித்தார் போலும்''*

என்றெடுத்து, தேவர் குலம்வாழ, அரக் கர் திறம் மாள வந்த விநாயகர் தோற் றத்தை விளைத்த பெருமானை வியந்து சிறக்கிறார்.

## முதற் குறிப்பு

விநாயகர் வழிபாடு தமிழர்க்குத் தொன்மையானது. தமிழ் மண்ணில் அவ் வழிபாடு வந்த வகைபற்றிய கருத்துவேற் றுமைகள் எத்தனையோ உண்டு. சங்க இலக்கியம் எனப் பேசப்பெறும் தொகை யும் பாட்டும் விநாயகர் வழிபாட்டை விளக்கவில்லை, முருகனும், உருத்திர னும், பலராமனும், திருமாலும் அங்கே திகழ்ந்து நிற்கிறார்கள். விநாயகர் விளங் கித் தோன்றவில்லை. சங்க இலக்கியத் திற்குப் பிற்பட்ட கீழ்க்கணக்கு நூல்களுள் தொன்மையானவற்றுள்ளுஞ் சரி சில காப்பியங்களுள்ளுஞ் சரி விநாயகரைக் காணோம். கல்லாடத்தில் விநாயகர் குறிப்பு உண்டு. தற்கால ஆய்வில் கல் லாடம் தேவாரத்திற்குக் காலத்தால் பிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. இக்கருத்து விநாயகரைப் பற்றிய முதற் குறிப்புக்களைத் தருவன மூவர் தேவாரங்களே என்பது வலிமை பெறும்.

## மூவர் நெறி:

மூவர் தேவாரத்துள்ளும் விநாயகர் பற்றிய குறியீடுகள் மிகச்சிலவே. திருஞானசம்பந்தப்பிள்ளையார் இரண்டிடங்களிலும் சுந்தரமூர்த்திகள் ஓர் இடத்திலும் விநாயகரைப்பற்றிக் குறித்தருளினர். சம்பந்தர் தேவாரம் விநாயகர் வந்த வரலாறு கூறி, அவர் தோற்றம் விளக்குகின்றது. சுந்தரர்தேவாரமும் இவரைப் பேசுகிறது. அப்பரடிகள் மட்டுமே விநாயகர் பற்றிய பல குறிப்புக்களை ஆங்காங்கே விளக்கிச் சொல்கிறார். ஐந்து திருப்பாடல்களுள் அவர் ஐங்கரனின் திறன் பேசுகிறார். அவற்றுள்ளும் நான்கு திருப்பாடல்கள் தாண்டகத்துள் அமைகின்றன.

கண்ணுதற் பெருமானையன்றிச் சிறு தெய்வம் எவற்றையும் பாடுதல் செய்யாமதுகையுடையவர்கள் தேவார மூவர். அப்பரடிகள் தேவாரத்துள் விநாயகர் பற்றிய குறிப்புக்கள் யாவும் சிவபெருமானின் பேரருளை வியக்கும் முகத்தான் அமைந்தனவேயன்றி விநாகருக்குரிய தோத்திரங்கள் எவையுமில்லை. பிற தெய்வங்கள் பற்றியகுறிப்புக்களும் இந்த அடிப்படையில் அமையக் காண்கிறோம். உமையப்மையார்க்குக் கூடத் தனியே வாழ்த்துரைக்காத வன்மையினைத் தேவார மூவரிடம் காணமுடிகிறது.

## அடிகள் காட்டும் ஐங்கரன்:

ஐந்து கரத்தினனாய அப்பெருமானுக்கு அப்பரடிகள் வழங்கும் பெயர்கள் பல. கணபதி விநாயகன், விக்கின விநாயகன், கைவேழமுகத்தவன், தன் கடமா முகத்தினன் என ஐந்து திருநாமங்களைக் குறிப்பிடுகிறார். இவற்றுள் ''கணபதி'' என்ற திருநாமம் மட்டும் ஏனைய இரு தேவார ஆசிரியர்களாலும் அங்ஙனமே எடுத்தாளப்பெறக் காண்கிறோம். அப்பரடிகள் இங்ஙனம் பல திருநாமங்களைச் சூட்டுவதோடு மட்டும் அமையாது விநாயகரது தோற்றம், அருள் தன்மை போன்ற சில குறிப்புக்களையும் இணைத்துப் பேசிச் செல்கிறார்.

## கணபதி என்னும் களிறு:

அமணர்கள் வஞ்சனை யுணரமாட்டாத பல்லவ வேந்தன் சைவம் மீண்ட அப்பர் பெருமானுக்கு இழைத்த தீமைகள் எண்ணில. பல்லவன் ஏவலில்தன்னை இடற ஏவப்பெற்ற பட்டத்து யானைக்கு அஞ்சாத திண்மையராய் அப்பரடிகள் அருளிய பதிகம் ''சுண்ணவெண் சந்தனச் சாந்தும்'' என்று தொடங்கும் அற்புதப் பதிகமாகும். இப்பதிகத்தேதான் விநாயகரைப் பற்றிய முதற் குறிப்பினை அப்பரடிகள் அருள்கிறார். கடற்களிற்றினையும் கண்டஞ்சா உள்ள உறுதிக் காரணங்களைக் காட்டிவரும் அடிகள் விநாயகனின் விளக்கத்தைக் குறிக்கின்றார். கணபதி என்னும் களிற்றையும், இரு சுடரையும், கயிலாய மலையையும்' கெடிலத்தையும் உடைய வீரட்டானத்துப் பெருமானின் தமர்யாம் என்ற பெருமித உணர்வைப் பேசிச் சிறக்கிறார். கணபதி என்னும் களிற்றையுடைய பெருமான் என, சிவபெருமானைக் குறிப்பித் தருளுதலாலே அப்பரடிகள் ஓர் சிறப்பினை உணர்த்த விரும்பியிருத்தல் திண்ணமாகிறது. கணபதி என்னும் களிறு என்று மட்டும் கூறியதூ.

> *பலபலகா மத்த ராகிப்*
> *பதைத்தெழுவார் மனத்துள்ளே*
> *கலமலக் கிட்டுத் திரியும்*
> *கணபதி யென்னும் களிறு''*

என அக்களிற்றின் இயல்பினையும் உடன் விளக்கிப் பேசுகிறார். இக்கருத்தினையே, ''தனதடி வழிபடு மவரிடர் கடி கணபதி'' என ஞானப்பிள்ளையார் குறிப்பிக்கக் காண்கின்றோம். வேண்டுவோர்க்கு வேண்டுவனவற்றை எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றோடு ஒன்று கலந்து, பெற்ற முறை யன்றிப் பிறழ்ந்து பயன்தரும் பேரரு ளாளனாக விநாயகரை குறித்தருளும் சிறப்பு அப்பரடிகளின் அப்போதைய மன நிலையை மதிப்பிட உதவுதலைக் காண் கின்றோம். தடைகளைத் தகர்த்து அருள் பாலிக்கும் விநாயகரையும் உடைய திரு வதிகை வீரட்டத்து இறைவனின் தமர் யாகம் என்ற குறிப்பில் விநாயகனது அருளிப்பாட்டையும் சிவபெருமானை வணங்குதல் ஒன்றாலேயே பெறுதல் கூடு மென எண்ணும் அப்பரடிகளின் கருத்து விளங்கித் தோன்றக் காண்கின்றோம். அத்தொடரால் "கணபதி" என அவ் விறைவன் திருநாமமும் "களிறு" என வடிவமும் குறிப்பிக்கப்பெறும் சிறப்பை யும் அறியமுடிகிறது.

## வரலாற்றுப் போக்கில்

இங்கே குறிப்பிடப்பெற்ற விநாயகர் பற்றியவேறொன்றையும் எண்ணிப்பார்த் தல் வேண்டத்தக்கதாகும். அப்பரடிகள் சமணம் விட்டு சைவத்துக்கு மாறியவுடன் பல்லவ மன்னன் இழைத்த தீமைகள் பல வற்றுள் யானையை ஏவியதும் ஒன்று. அக்காலைஎழுந்த திருப்பதிகமே "சுண்ண வெண் சந்தனச் சாந்தும்" என்ற திருப் பதிகம் என்பது பெரிய புராணத்தால் நன்கு விளக்கமுறுதல் கண்கூடு. எனவே அப்பரடிகள் சைவம் சார்ந்த ஆரம்ப காலத்தில் அருளப்பெற்றது இத்திருப்பதி கம் என்பது உறுதியாகின்றது. இத்திருப் பதிகத்துள் விநாயகர் பற்றிய குறிப்பிருத் தலை மேலே கண்டோம்.

பெரிய புராணத் துணைகொண்டும் பிற சான்றுகளாலும் நுண்ணிதின் ஆராய்ந்த தற்கால வரலாற்றாசிரியர்கள் பலரும் அப்பரடிகள் சமணம் விட்டுச் சைவம் சார்ந்தது கி. பி. 630 க்கு ஒன் றிரண்டாண்டு முன்பின்னாதல் வேண்டு மென வரையறுக்கின்றனர். எனின், திரு ஞானசம்பந்தர் திருவவதாரஞ் செய்த காலமே கி. பி. 638 ஆம் ஆண்டை ஒட் டியதாதல் வரலாற்றாராய்ச்சியால் உறு திப்படுகிறது. இவ்விருமுடிவும் உறுதிசெய் யப்படுமானால் திருஞானசம்பந்தரின் "பிடியதன் உரு" என்று தொடங்கும் விநாயகர் பற்றிய குறிப்பினைத் தரும் தேவாரம் எழுந்ததற்கு ஏறத்தாழ பதி னைந்து ஆண்டுகட்கு முன்னரே அப்பரடி களின் "சுண்ண வெண் சந்தனச் சாந்தும்" என்று தொடங்கும் விநாயகர் பற்றிய குறிப்புடைய பதிகம் எழுந்த தாதல் உறுதிப்படும். எனவே விநாயகர் பற்றிய முதற் குறிப்பினைக் குறிப்பித் தருளிய பெருமை அப்பரடிகட்கே உரிய தாதல் பெறப்படும். தொகுப்பு முறை யால் இத் திருப்பதிகம் நான்காம் திருமுறையதாயின் கால ஆய்வால் தமி ழிலக்கியத்துள்ளேயே விநாயகர் பற்றிய முதற் குறிப்பினைத் தருவதான பெரு மையைப் பெறுகிறது. நாலாந் திருமுறை யுள் இத்திருப்பாட்டு ஒன்றே விநாயகர் குறிப்புடையது.

## ஒரு சிற்றாராய்ச்சி

ஐந்தாம் திருமுறையில் விநாயகர் பற்றிய குறிப்புக்கள் ஏதுமில்லை. எனினும் சிலர் திருப்பேரெயில் குறுந்தொகையுள் அமைந்துள்ள.

"முன்னை யார்மயி லூர்தி முருகவேள்
தன்னை யாரெனிற் றானோர் தலைமகன்
என்னை யாளு மிறைவ னெம்பிரான்
பின்னை யாரவர் பேரெயி லாளரே"

என்ற திருப்பாடலை எடுத்துக்காட்டி, இதன் கண் வரும் முன்னையார் என்ற சொல் விநாயகரைக் குறிப்பித்ததென் கின்றனர். இரண்டாவது வரியில் "தம்" எனப் பன்மை பேசாது "தன்" என ஒருமை பேசியமைகொண்டே அங்கு முரு கனைப் பற்றிய குறிப்பு மட்டுமேயுண்டு என்பது பெறப்படும். மேலும் "முன் னையார்" என்பது நான்காம் வரியில் உள்ள "பின்னையார்" என்பதினோடு கருத்து வகையால் இணைந்து பேரெயில் இறைவன் "முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளாகவும், பின் னைப் புதுமைக்கும் பெயர்த்துமப் பெற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிய' னாகவும் திகழும் பெருமான் எனவே சுட்டி நின்றது எனக் கொள் வதே ஏற்புடைக் கருத்தாகும். இங்ஙனம் இயைத்தலே இணக்கமாவதை நுண்ணி தின் உணர்தல் கூடும்.

### விக்கின விநாயகர்

இனி, ஆறாந் திருமுறையில் அப்ப ரடிகள் திருப்புறம்பய இறைவனைப் போற்றிலசக்கும் அடியார் கூட்டத்துள் ஒருவராக விநாயகரை 'விக்கின விநாய கன்' எனப் பொதுப்படக் குறித்தமை யான், தம்மை வழிபடுவார்க்கு இடை யூற்றைப் போக்குதலும், வழிபடாதார்க்கு இடையூற்றையாக்குதலும் உடையன் என்ற கருத்துப்பெறப்படுதலை அறியமுடிகிறது. பிற்காலத்து எழுந்த விநாயகர் பற்றிய கதைகள் பலவும் இவ்விரு வகைப் பொரு ளையும் விளக்க முயல்வதை அறியமுடி கிறது.

### வேழமுகத்தவன்

திருவீழிமிழலைத் திருத்தாண்டகத் துள் கைவேழமுகத்தவன், துதிக்கையோடு கூடிய திருமுகத்தினன் என விநாயகர் வடிவுரைத்த செய்தியையும். கயமுகா சுரனை, விநாயகரைப் படைத்து அழிப் பித்த செய்தியையும் முன்னரே விளங்கக் கண்டோம்.

இனித் திருவேகம்பத் தாண்டகத்துள் தண்கடமா முகத்தினார்க்குத் தாதை காண்' எனக் குறிப்பிட்டுச் செல்லும் அப்பரடிகள் மதநீரொழுகும் விநாயகர் திருமுகச் செவ்வியுரைத்து, அவர் சிவ பெருமான் மகனார் என்ற கருத்தை நினைப்பித்துச் செல்வதைக் காண முடி கிறது.

### எங்கும் விநாயகர்

இறுதியாக வாய்மூரடிகளைத் தாம் கண்ட அனுபவம் உரைக்க வந்த அடிகள் 'மெல்லியலும் விநாயகனும் தோன்றக் கண்டேன்' என உமையோடு விநாயகரின் ஒருங்கிணைந்த காட்சியைச் சுட்டி உமை மைந்தனாக அவரை உணர்த்தியருளுகின் றார். இங்ஙனமாக விநாயகர் பற்றிய பல்வேறு குறிப்புக்களை ஒன்றுபடுத்தி நோக்குதல் பல சமய உண்மைகளை நெறி நின்று காணுதற்குப் பயன்படுதல்கூடும். விநாயகர் பற்றிய அடிப்படைக் குறிப் புக்களை அப்பரடிகள் முதன் முதல்வழங்க இன்றோ விநாயகர் பற்றிய குறிப்பில் லாத சைவ-சமய இலக்கியங்களே இல்லை என்ற நிலைமைக்கு வளர்ந்துவிட்டிருப் பதைக் காணமுடிகிறது-

நன்றி : காரைநகர் ஸ்ரீ வீரகத்தி விநாயகர்
ஆலய கும்பாபிஷேக மலர் ( 1982 )

---

மருப்பை ஒரு கைக்கொண்டு நாரையூர் மன்னும்
பொருப்பையடி போற்றத் துணிந்தால் — தெருப்பை
அருந்த எண்ணுகின்ற எறும்பன்றே அவரை
வருத்த எண்ணுகின்ற மலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஓங்கார கணபதி

பண்டிதவித்வான் ச. தண்டபாணிதேசிகர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் — உருவாக்கும்
ஆதலால் வானோரும் யானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை. — கபிலதேவநாயனார்

உலகில் எதனையும் இயற்ற உறுதி வேண்டும். உறுதி எண்ணத்திலிருந்து செயலாக மாறிக் கருவிகள் வழியாகக் காரியமாக உருக்கொண்டு நமக்கும் பிறர்க்கும் பயனளிக்கிற வகையில் நிலைக்கவேண்டும். இதனையே வள்ளுவர் நினைத்ததை நினைத்தபடி நிறைவேற்றிக் கொள்ளலாம், நினைத்தவன் உறுதியுடன் இருந்தால் என்று கூறுவார்.

உதாரணமாக, இளமையின் துடிப்பு இதயத்தின் எழுச்சி, உடம்பின் வலிவு தேவைக்கு இன்றியமையாத பொருள்களின் வாய்ப்புக்கள் அனைத்தும் வாய்க்கப்பெற்ற ஒருவன் உறுதியுடன் நீளப்பயணம் தொடங்கினான் என்று வைத்துக் கொள்வோம். அவனுக்கும் நடுவழியில் ஒரொரு காலத்து ஊன்றுகோலும் உசாத்துணையும் தேவைப்படத்தான் செய்கிறது. அதுபோல உறுதியுடன் ஒன்றைத் தொடங்கினாலும், நமக்கு உதவியும் தேவைப்படுகிறது.

அவ்வுதவியோ, ஒப்புக்காகவோ — பிறர் மெச்சவோ உதவமுன்வராததாக உண்மைக்கே உதவுவதாக அமைதல் வேண்டும். அதுபோலவே உதவி பெறுபவனும் உண்மையாக உதவுபவனை நம்ப வேண்டும். இப்படி, உறுதியும், உதவியும், உண்மையும் ஒன்று கூடினால் ஆகாத காரியம் எதுவுமே இல்லை. எண்ணிய எண்ணியாங்கு எய்தலாம்.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப
எண்ணியார்
திண்ணியராகப் பெறின்
— திருக்குறள்

ஆனால் உண்மையாக உதவி செய்பவர் யார் என்று தேடிக்கண்டு துணிவதிலேயே சிரமம் இருக்கிறது. மனித அறிவு மயங்கிப் போகிறது; துணையில்லாதவரைத் துணையெனத் துணிகிறது. களைத்துப் போகிறது. தம் சமுதாயத்தை இத்தகைய அவல நிலைக்கு விட்டுவிடாமல், நம் தாய் தந்தையர்கள் தாத்தாக்கள் தம் மக்களுக்கும், பேரன் பேத்திகளுக்கும் உண்மையான துணையை உணர்த்திவிட வேண்டும். அதனை உறுதியாகப் பற்றி நடக்க உபதேசிக்க வேண்டும் என்ற உணர்வு வேகத்தால் தம் குழந்தைகளை விடியற்காலையிலேயே எழுப்பி உட்கார வைத்துக் கொண்டு,

வெள்ளைக் கொம்பன் விநாயகனைத்
தொழ
துள்ளி ஓடும் தொடர் வினைகளே!
குள்ளக் குள்ளனைக் குண்டு வயிறனை
வெள்ளைக் கொம்பனை விநாயகனைத்
தொழு
வேழமுகத்து விநாயகனைத் தொழு
வாழ்வு மிகுந்து வரும்.

என்பன போன்ற எளிமையான — இனிமையான ஆனால், வாழ்விற்குத் தேவையான கருத்தமைந்த பாடல்களைச் சொல்லிக் கொடுப்பார்கள். குழந்தைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் தெரியாமலே பாட்டின் இசை யமைப்பிலே – தாளக் கட்டிலே மயங்கிப் பாடிக்கொண்டே துள்ளி ஓடும். அதைக் கண்டு தாத்தா பேரானந்தம் பெறுவர். இந்தப் பழக்கம் குழந்தைகளே! உங்க ளுக்கு இடையூறு வந்தபோது உற்ற துணை கணபதியை நினையுங்கள்; குட்டிக் கொண்டு கும்பிடுங்கள். அவர் உங் களுக்குத் துணையாவார் என்ற எண்ணத் தைக் குழந்தைகளிடம். பதிய வைக்கிறது. ஆதலால் குழந்தைகள் தமக்குத் துணை உண்மையான துணை கணபதியே என்று கருதுகின்றன. அதனால் கணபதியைக கைதொழுது வாழ்க்கைப் பயணத்தில் உல்லாச நடைபோட்டு உயர்கின்றன. இதனால் நாமும் உயர்கின்றோம். உற்ற துணை – உண்மைத்துணை ஓங்கார கண பதியே என்று.

கச்சியப்ப முனிவர் திருவானைக்காப் புராணம் செய்தவர், கவிராட்சதர் எனக் கவிஞருலகத்தில் போற்றப் பெறுபவர். அவா நம் ஓங்கார விநாயகரைப் பற்றி உரைப்பதைக கேளுங்கள்.

'ஓங்கார விநாயகர்' தன்னை உள் ளன்புடன் வழிபடுகின்ற உண்மை அடி யாாகளுக்கு அறம பொருள் இன்பம் வீடு என்னும நால்வகைப் பயனையும் அளித்து அறக்கருணை செய்கின்றார்.

அங்ஙனமே, வழிபடாதவர்கட்கு அவர்களால் எவ்வகையிலும் நீக்கிக் கொள்ள இயலாதவாறு இடர் விளைதது மறக்கருணையும் புரிகின்றார். அடித்த லும் அணைத்தலும் இரண்டுமே அன் பர்களை ஆட்கொள்கின்ற முறைகளே. தந்தை தீமை செய்யும் பிள்ளையையே அடித்துத் திருத்துகிறார். நல்லனவே செய்யும பிள்ளையைக கொடுத்தே உயர்த்துகிறார். அதுபோலத்தான் உல கத் தந்தையாகிய பிரணவப் பொருளா கிய பிள்ளையாரும்.

பிள்ளையார் உருவமோ அறிவே உருவம்; உலகம் எங்கும் வியாபித்திருக் கும் உருவம். எழுத்துக்கள் எல்லாவற்றி லும் கலந்து நின்று எழுத்துக்களை இயக்கும் அகரம்போலச் சடமாகிய உல கம் எங்கும் கடந்து நின்றும் சித்தாகிய உலகெங்கும் கலந்து நின்றும் இயங்குவ நிற்பவான எல்லாவற்றையும் அடக் கித் தாம் அவற்றில் வியாபித்துள்ள ஞான உருவம்.

அம்மட்டோ! 'ஓம்' எனக் (சமஷ்டி) கூட்டுருவாயும், அ–உ–ம் என்னும் மூன் றெழுத்துக்களாய் (வியஷ்டி) வேற்று வடி வாயும் விளங்குகிறார். இதுவே ஓங்கார விநாயகரும், அவரை வழிபாடு செய்வார் எய்தும் பயனும், வழிபடாதார் எய்தும் தீமையும் ஆம் எனச் சுருக்கமாகவும் விளக்கமாகவும சொல்லுகிறார்கள். அந் தப் பாடலைப் பாருஙகள்; படியுங்கள்; பாராயணம செய்யுங்கள்;

அகரமென அறிவாகி உலகமெங்கும்
அமர்ந்தகர உகரமக ரங்கள் தம்மால்
பகருமொரு முதலாகி வேறுமாகிப்
பல்வேறு திருமேனி தரித்துக்கொண்டு
புகரில்பொருள் நான்கினையும் இடர்தீரந் தெய்தப்
போற்றுநருக் கறக்கருணை புரிந்தல் லார்க்கு
நிகரின்மறக் கருணைபுரிந் தாண்டு கொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைத்து வாழ்வாம

ஒலி உலகில் முதலாவதாக ஓங்கார வடிவமாக விளங்கும் பிள்ளையார் பொருள் உலகிலும இல்லாத இடமில்லை.

பிள்ளையாரின் திருவுருவம் தமிழ் ஓங்காரத்தின் வடிவமாகவே அமைந்திருப பது பிள்ளையாருக்கும தமிழ்நாட்டிறகும் உள்ள பழமையான தொடர்பைக் காட் டுகிறது. பிள்ளையாருக்குப் பிடித்த நிவே தனம மோதகம் என்ற பணியாரம செய் யும வகை தமிழ் நாட்டினருக்கு அன்றி வேறுயாருக்கும் இன்றைககும தெரியாது. பழந்தமிழ இலக்கியங்களில் மோதகம் கவவு என்ற பெயரால் குறிக்கப் பெறு கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமம், அல்லது சிவம் ஒன்றே உயர்ந்த குடிமக்களால் வணங்கப்படுவன. கணபதி சூத்திரர் தெய்வம் என்று மனு கூறுவதாக 'மிஸ் கெட்டி' என்பவர் கூறுகிறார். பழங்கால இந்தியப் போர்முறை என்ற நூல் விநாயகரை வெற்றிக்காகவும், இடையூறு விலகவும் இந்துக்கள் வணங்குகிறார்கள் என்று கூறுகிறது.

''ஒரு நாமம் ஒருவரும் ஒன்றுமில்லார்க்கு
ஆயிரம் திருநாமம் பாடிநாம்
தெள்ளேணம் கொட்டாமோ''

என்றாற் போல விநாயகருக்கும் பல பெயர்கள் உண்டு. அவை ஒவ்வொன்றும் அவர் அடியார்களுக்கு அருள் செய்த சிறப்பினால் உண்டானவை. ஆகமத்தை ஒட்டியும் புராண வரலாறுகளை ஒட்டியும் பிள்ளையாரின் 32 வகைகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் அவர் அடியார்களுக்காக எடுத்த திருமேனியின் வேறுபாட்டை விளக்குவன.

பிள்ளையார் நமது நாட்டில் மட்டுமா இடம் பிடித்துக் கொண்டிருக்கிறார். ஜாவாவில், ஜப்பானில், சைனாவில் நேபாளத்தில் எங்கும் அவரைக் காணலாம். அந்தந்த நாட்டு மக்களுடைய மன அமைதிக்கு ஏற்றவாறு பிள்ளையாருடைய திருவுருவங்கள் அமைந்திருக்கும் அழகைப் பார்க்கலாம். ஜப்பான் பிள்ளையார் அன்பனை இரண்டு கைகளாலும் தழுவிக் கொண்டிருப்பார். சைனா விநாயகர் தலையில் மகுடம் அணியாமல் வெயிலில் வாடிவதங்கியவர் காற்றுக்காக உல்லாசமாக உட்கார்ந்திருப்பதைப் போல இருப்பார்.

நம்முடைய நாட்டிலே எந்த விழா எடுத்தாலும் பசுஞ் சாணியால் பிள்ளையாரைப் பிடித்து வைத்து வழிபடுகின்ற வழக்கம் உண்டு. அதனாலேயே ''பிடிச்சு வைத்தால் பிள்ளையார்'' என்ற பழமொழி வழங்குவதாயிற்று பிள்ளையாருக்கு அறுகு வன்னிப்பத்திரம் மந்தாரைப்பூ அவைகளில் விருப்பம் அதிகம். இவைகளைக் கொண்டு பூசித்தால் மிக மகிழ்வார். தாழம்பூவும் துளசியும் அவருக்கு அறவே பிடிக்காது.

### விரதங்கள்

நம்முடைய மனம் இருக்கிறதே அது ஒரு பொல்லாத குரங்கு. எப்போதும் ஒன்றைப்பற்றி இராது. அங்கும் இங்கும் தாவிக் கொண்டே இருக்கும். அந்த மனத்தைக் கட்டுப்படுத்தி ஏதோ ஒரு பொருளை நிலைக்கச் செய்து விட்டோமானால் நாம் உயரலாம். மனம் உயர மனிதன் உயருகிறான் என்பது பழமொழி இல்லறத்தில் வாழ்கின்ற நமக்கு மனம் ஒருமைப்பட ஒரே ஒரு வழிதான் உண்டு. அதுதான் விரதம் இருத்தல். விரதம் என்பது என்ன? நம்மை நாமே உணவாலும் ஒழுக்கத்தாலும் கட்டுப்படுத்திக் கொள்ளுதல், ஆகவே பிள்ளையார் கருணையைப் பெறுதற்குரிய விரதங்கள் வெள்ளிக் கிழமை விரதமும், சதுர்த்தி விரதங்களும், குமார சஷ்டி விரதமும் ஆகும். வெள்ளிக்கிழமை விரதம் வைகாசி மாதத்துச் சுக்ல பட்சத்து முதல் சுக்ரவாரம் தொடங்கி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் தவறாது அனுஷ்டிக்கப்படுவது. அன்று விடியற்காலையில் நீராடி விநாயகரை அறுகும் பூவும் இட்டு வழிபட்டுப் பகல் முழுவதும் உண்ணாமல் இருந்து மாலையில் மறுபடியும் நீராடி விநாயகரை வழிபட்டு ஏதாவதொரு பழங்களை உண்ணுதலாம். இந்த விரதத்தை அனுஷ்டித்ததாலேயே குபேரன் சங்கநிதி பதுமநிதிகளைப் பெற்று பணக்காரனானான். ஆவணி மாதத்து சுக்ல பட்சத்து சதுர்த்தியிலே பகலில் ஒரு வேளை மட்டும் உண்டு இரவில் பழம் அல்லது பால் மட்டும் உண்டு விநாயகரை எண்ணிக் கொண்டேயிருக்க வேண்டும். இரவில் சந்திரனைப் பார்க்கக்கூடாது. இவ்விரத காலத்தில் விநாயகருக்கு மாசிப் பச்சை, வில்வம், ஊமத்தை, அறுகு முதலான இருபத்தொரு பத்திரங்களைக் களைக் கொண்டு அர்ச்சிக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயக மந்திரத்தை எண்ணவேண்டும். இப்படி ஒவ்வொரு சதுர்த்தியும் செய்து வந்தால் இடையூறுகள் விலகும். இன்பம் உண்டாகும்.

## குமார சஷ்டி

கார்த்திகை மாதம் கிருஷ்ண பட்சம் பிரதமை முதல் மார்கழி மாதம் சுக்ல பட்சம் சஷ்டி வரை இருபத்தொரு நாட்கள் நிகழ்த்தப்பெறும் விரதம். இதனைப் பிள்ளையார் நோன்பு என்பார்கள். 'சஷ்டி தொட்டு சதயம் விட்டு' என்ற பழமொழியும் இந்த விரத காலத்தை வரையறுக்கிறது. இந்த நோன்பை மேற்கொள்பவர்கள் இருபத்தொரு இழைகளாலான காப்பைக் கட்டிக்கொள்ளவேண்டும் முன் கூறியபடி விநாயகருக்கு நீராட்டி விதவிதமாக நிவேதித்தல் வேண்டும். ஒருவேளை உண்டு எப்போதும் தியானத்தில் இருக்கவேண்டும்.

## சங்கட ஹர சதுர்த்தி

மாசி மாதம் தேய்பிறையில் செவ்வாய்க் கிழமையோடு சேர்ந்துவரும் சதுர்த்தியில் தொடங்கி ஓராண்டு காலம் விதிப்படி அனுஷ்டித்து வந்தால் துன்பங்கள் நீங்கி செல்வம், செல்வாக்கு, கல்வி முதலான எல்லா இன்பங்களையும் எய்தலாம்.

இவ்வண்ணம் ஆண்களும், பெண்களும் அனுஷ்டிக்கும் விரதங்களேயன்றிப் பெண்கள் மட்டும் நோற்கும் நோன்புகளும் உண்டு. அவை வெள்ளிப் பிள்ளையார், செவ்வாய்ப் பிள்ளையார் நோன்புகள். அவற்றை நோற்கும்வகை, பயன், அதைப் பற்றிய வரலாறு இவைகளைப் பெண்கள் தங்களுக்குள் இரகசியமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆடி, தை மாதங்களில் இவைகளை விடாமல் நோற்பதால் ஏதோ பயனை அடைகிறார்கள் என்பது மட்டுந் துணியலாம்.

இப்படிப் பிள்ளையார் வழிபாடு பல வகைகளில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நம் வாழ்க்கையில் கலந்திருக்கிறது. பிள்ளையாரையே முதற் கடவுளாக வழிபடும் மதம் ஒன்று உண்டு. அதுதான் காணாபத்தியம். அவர்களுக்கு கணபதியே முதல் தெய்வம். அவரே உலகத்தைப் படைக்கிறார், காக்கிறார், அழிக்கிறார். அவர் வாழும் உலகத்திலே அவரைப்போல உருவந் தாங்கி அவரையே வழிபட்டுக்கொண்டு அவருக்குப் பக்கத்தில் இருப்பதுதான் முக்தி என்பது அவர்களது கொள்கை.

இத்தகைய விநாயகரை எந்தக் காரியஞ் செய்தாலும் முதலில் வழிபடவேண்டும். வழிபடுவது தான் வழக்கம்.

"எப்போத கத்தும் நினைவார்கு
இடர்இல்லை
கைப்போதகத்தின் கழல்"

நன்றி : திருவானைக்கா ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத
ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் திருக்கோயில்
கும்பாபிஷேக மலர் (1970)

---

விரிதரு பசும்பொற் குன்றிற் பாரதம் விளங்கத் தீட்டி
வரிசெயு மருப்புத் துண்டம் வளர்சடைச் செருகி யாங்கு
தெரிதரக் குழவித் திங்கள் சென்னி சேர்த் தாலங்காட்டிற்
பரிவுசெய் மூலத் தானக் கரியினைப் பணிதல் செய்வாம்.
— திருவாலங்காட்டுப் புராணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிள்ளையாரின் ஆயுதங்கள்

பிள்ளையாரின் திருவுருவங்களில், பல வகையான ஆயுதங்களை அவர்தம் கரங்களில், ஏந்தியிருப்பதைக் காண்கிறோம். அவற்றில் இருபத்தொன்பது வகையைக் காணலாம். அவ்வாயுதங்கள் கீழே தரப்படுகின்றன.

1. பாசம் – இது கயிறு, பகைவர்களைக் கட்டப் பயன்பெறும், விநாயகருக்கு சிறப்பாக நாகமே கயிறாக அமைவதும் உண்டு. இதனை "நாகபாசம்" என்பார்கள்.
2. அங்குசம் – இது யானையை அடக்கப் பயன்படுவது.
3. தந்தம் – ஒடிந்த யானைக் கொம்பு
4. வேதாளம் – தசைநாரில்லாத, அச்சமும் அருவருப்புந் தரத்தக்க பூதவடிவாக இருப்பது. இதனை ஏவிப்பகைவர்களை விழுங்கச் செய்வது வழக்கம். இதனை வீரகணபதியின் கரத்தில் காணலாம்.
5. சக்தி – இது வேல். ஆறு கூரிய பகுதிகளையுடையது. தகட்டு வடிவானது. வீரகணபதி இதனை தாங்கியுள்ளார்,
6. அம்பு – இது வில்லை வளைத்து அதில் வைத்து எய்யப் பெறுங்கருவி,
7. வில் – இது அம்பு எய்யப் பயன்படுவது.
8. சக்கரம் – தேருருளை போன்றதாக அல்லது வளையம் போன்றதாக இருக்கும். இது விஷ்ணுவிற்குரிய சிறப்பான கருவி.
9. கத்தி – தலைப்பகுதி குண்டாகத் தடித்துள்ள நீளக்கழியிற் கோக்கப்பெற்றுள்ள கருவி. இதனைக் குத்துக்கத்தி ஆகிய 'பிச்சுவா' என்பாரும் உளர்.
10. கேடயம் – இது கத்திவெட்டைத் தடுப்பதற்காகப் பயன்படுவது.
11. சம்மட்டி – இது இரும்பாலான கனத்த தலைப்பகுதியை உடையது. சுத்தியலின் வடிவை ஒத்தது.
12. கதை குண்டாந்தடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. நாகபாசம் - இதுவும் பாசவகைகளுள் ஒன்று.

14. சூலம் - இது மூன்று நுனிகளையுடையது நீளமான மரக்கம்பிற் கோர்க்கப்பட்டிருக்கும்.

15. குந்தாலி - வன்மையான நிலப்பாறைகளை உடைக்கப் பயன்பெறும், தலை கனத்துக் கூரிய நுனியோடு இருக்கும் இரும்பாலான கருவி. ('பிக்கான் 'போன்றது)

16. மழு இன்று மரங்களை வெட்டப் பயன்பெறுவதாக எறியென்னும் பெயருடன் வழங்குகிறது.

17. கொடி இது வெற்றிக்கு அறிகுறியானது. அடையாளம் எழுதப்பெற்றது.

18. தண்டம் இது நீளமான கைத்தடி.

19. கமண்டலம் - நீர் வைத்துள்ள கலசம்.

20. பரசு - மழுவைப் போன்றதே. ஆனால் மழுவின் வாய் சதுரமாக இருக்கும். இதன்வாய் சற்று வளைந்து கூரியதாக இருக்கும்.

21. கரும்புவில் - கரும்பால் செய்யப்பட்ட வில்.

22. சங்கமம்(சங்கு) இது வெற்றியை அறிவிக்கும் கருவி.

23, புஷ்ப பாணம்- தாமரை, அசோகு. மா, முல்லை, நீலம் என்ற ஐந்து பூக்களாலியன்ற பாணம்

24. கோடரி - வாய் கூர்மையாகப் பின்பக்கம் கனமானதாக அமைந்துள்ள இரும்பாலான கருவி.

25. அக்ஷமாலை - உருத்திராக்ஷ மாலை.

26. சாமரம் - இது கவரிமான் வால்மயிரால் ஆனது. ஓர் ஆயுதமன்று. ஆனாலும் விநாயகப் பெருமானுடைய திருவுருவ அடையாளங்களில் ஒன்றாகையால் ஆயுதவரிசையில் இது இடம்பெற்றிருக்கிறது.

27. கட்டுவாங்கம் - இது நீளமான கத்தி

28. தீஅகல் - ஒரு தீப்பிழம்பு.

29. வீணை - இது ஓர் இசைக்கருவி. போர்க்காலங்களில் தளர்ந்த படைவீரர்களுக்கு உணர்ச்சி ஊட்டப் பயன்படுவது.

---

அகரமென அறிவாகி யுலக மெங்கும்
அமர்ந்தகர வுகரமக ரங்கள் தம்மாற்
பகருமொரு முதலாகி வேறு மாகிப்
பல்வேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில் பொருள் நான்கினையும் இடர் தீர்ந் தெய்தப்
போற்று நருக் கறக்கருணை புரிந்தல் லார்க்கு
நிகரில் மறக் கருணைபுரிந் தாண்டு கொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# கணபதிஹோமம்

'மந்திரத்ன மஞ்ரஜூஷை' என்னும் மந்திர நூலில் கணபதிக்கு ஹோமங்களில் உபயோகப்படுத்தும் தேங்காய், மோதகம், திறிமதுரம், கரும்பு முதலிய திரவியங்களால் ஏற்படும் காரிய சித்திகள் கூறப்பட்டுள்ளன.

விநாயகருக்கு,

நாரிகேளை: க்ருதோஹோம:
சதுர்த்யாம் ஸ்ரீப்ரதோ பவேத்

சதுர்த்தியில் தேங்காய்களால் ஹோமம் செய்வது ஐஸ்வரியத்தை அளிக்கும்.

ஸ்திலைஸ்தண்டுலைர் ஹோம:
லக்ஷ்மீவஸ்ய ப்ரதோபவேத்

எள்ளுடன் கூடிய அக்ஷதைகளை ஹோமம் செய்வதால் லக்ஷ்மியை வசமாகச் செய்யும்.

லாஜெ ஸ்திரி மதுரோ பேதை:
சதுஸ்ஸஹஸ்ர ஹோமம் கன்யாம் ப்ரயச்சேத்

தேன், பால், சர்க்கரை, இம் மூன்றையும் கலந்த பொரியினால் நான்காயிரம் ஹோமம் செய்ய நல்ல உத்தம கன்னி கிடைப்பாள்.

அனேனைவ விதானேன
கன்யாம் வரமவாப்னுயாத்

நல்ல பர்த்தாவை விரும்பும் கன்னிகை இவ்விதமாகவே ஹோமம் செய்வதால் சிறந்த பர்த்தாவை அடைவாள்.

தத்னாவிலோடி தைர்லோணை:
ஹோமோ நிசி சதுர்த்தினம்
ஸம்வாதம் குருதே வஸ்யம்
ததாந்யதபி மந்த்ரிண:
இத்யாதி சம்பவேத் ஸர்வம்

லவணம் (உப்பு) கலந்த தயிரை நான்கு தினம் இரவில் ஹோமம் செய்வதால் சபையில் நன்கு பேசுவான், இந்த மந்திரத்தை ஜபம், ஹோமம் செய்கின்றவனுக்கு இது போன்ற எல்லா சித்திகளும் ஏற்படும்.

மோதகைர் ஜுஹயாத் ஷஷ்ட்யாம்
சதுஸ்ஸஹஸ்ரம் சதுச்சதம் வா

சஷ்டித் திதியில் நான்காயிரம் அல்லது நானூறு மோதகங்களை ஹோமம் செய்தாலும்,

அஷ்டம்யாம் குமுதை:
சதுர்த்தச்யாம் அபூபெர்
ஜுஹுயாதிஷ்ட ஸித்தயெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டமியில் ஆம்பல் புஷ்பங்களை ஓமம் செய்வதாலும் சதுர்த்தசியன்று அப்பத்தை ஓமம் செய்வதாலும் இஷ்ட சித்திகள் ஏற்படும்.

ஏபிரேத்ரவ்யை: பர்வதினே ஓம
ஸர்வகாம ப்ரதோபவேத் யத்னேன

முன்சொன்ன திரவியங்களாலேயே பௌர்ணமி, அமாவாசைத் தினங்களில் ஓமம் செய்தால் சிரமமின்றியே எல்லாவித அபீஷ்டங்களும் கைகூடும்.

ஆஜ்யாந்நைர் ஜுஹுயாந் நித்யம்
அந்நவாந்வத் ஸராத்பவத்

ஒருவருட காலம் தினந்தோறும் நெய் கலந்த அன்னத்தை ஓமம் செய்தால் குறைவற்ற அன்னத்தை அடைவான்.

பாயசேனக்ருதோ ஓம:
ஸயக்ராம ஸ்ரிய மாவஹேத்

பாயாசத்தை ஹோமம செய்வதால் நிரமபிய ஐஸ்வர்யத்தை அடைவான்.

ஆஜ்ய ஹோமேந வஸயேத்
ப்ராணிநா: ஸகலான சுதீ

ஆஜ்ய ஹோமாம் வித்துவான எல்லாப் பிராணிகளையும் தனக்கு வசமாகச் செய்துகொள்வான்.

நாளிகேர பலம் பக்குவம்
லோஷ்டவர்ச ஸமந்விதம்
ஜுஹுயாத் ப்ரத்ய ஹுமந்த்ரீ
வாஞ்சிதம் மண்டலாத் பவேத்

நன்கு முற்றிய தேங்காயின கீறுகளையும்+ அதன்மட்டை கொட்டாங் கச்சிகளையும் தனித் தனியாக மந்திரததுடன் ஒருமண்டலம் ஹோமம் செய்யும் உபாசகன் விரும்பிய பொருள்களை அடைவான்.

ஜுஹுயாத் அண்டபிர்த்ரவ்யை:
மதுத்ரய ஸம்யுதை
வசயேத் பார்த்திவான் சர்வான்
தத்பத்னீ ரபி நிச்சயம்

பால், தேன், சர்க்கரை இவைகளுடன் சேர்ந்த அஷ்டதிரவ்யங்களை ஹோமம் செய்வதால் எல்லா அரசர்களுடையவும, அவர்கள் குடும்பத்தினர்களுடையவும் அன்புக்கு பாத்திரமானவன்

+ ஆன்மாக்களிடம் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள் உள்ளன. மேல்மட்டை மாயாமலம், நாகன்மமலம், ஓடு ஆணவமலம் இந்த மும்மலங்களும் அகலவ சித்தசுத்தி என்ற வெண்மையான பருப்பு கிடைக்கும்.

தினாதிஷு சதுச் சத்வாரிம்சத்
தவாரம் விக்நராஜ ஸ்யமஸ்தகே
சுபோதகை: தர்ப்பயேத் ஸ்ரீப்ரஸித்தாயே

நாற்பத்து நான்கு தினங்கள் காலை வேளையில் விக்னராஜனான ஸ்ரீ கணபதியி னுடைய தலையில் சுத்தஜலத்தால் அபிஷேகம் செய்தால் ஐஸ்வரியத்தின் அபிவிருத்தி ஏற்படுகிறது.

லக்ஷத்ரயம் ஜபேந் மந்த்ரம்
இக்ஷுகண்டைர் தசாம் சத:
அபூபை: ராஜ்ய யுக்தைர்வா
ஜுஹுயாத் மந்த்ர ஸித்தயே

ஸ்ரீ சக்திகணபதி மகாமந்ரத்தை மூன்றுலக்ஷம் ஆவர்த்தி ஜபம் செய்து அதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தில் ஒரு பாகம் கரும்புத் துண்டுகளால் அல்லது நெய்யோடு கூடிய வெல்லப்பத்தினால் ஹோமம் செய்வதால் மந்திரஸித்தி ஏற்படும்.

ஸ்வகுரும் தனதான் யாத்யை
ப்ரிணயேத் பிரீத மானஸ

இந்த மந்திரத்தையும் ஹோமவிதானத்தையும் உபதேசம் செய்த தனது குருவை அன்புடன் தனம் தான்யம் முதலியவைகளால் திருப்தி செய்து வைக்கவேண்டும்.

பூஜா பூர்வ வதாதிஸ்டா
தத: கார்யாணி ஸாதயேத்

ஹோமம் செய்வதற்கு கணபதி பூஜை செய்யவேண்டும். அதனால் எல்லாக் காரியங்களும் சித்திக்கும்.

ஹுத்வா பூர்வைச்ச மதுர
த்ரயாக்தை: வசயேந் ரூபான்
சதுர்த்யாம் நாளிகே ரேண
மஹதீம் ஸ்ரிய மஸ்னுதே
லவணைர் மதுஸம்யுக்தைர்
வசயேத் வநிதா ஜனம்

முன்பு கூறியதுபோல் கரும்புத் துண்டுகள் அல்லது வெல்ல அப்பம் இவற்றை மூன்று மதுரத்தில் தோய்த்து ஓமம் செய்தால் அரசர்கள் வசமாவார்கள். சதுர்த்தி தியன்று தேங்காயினால் ஓமம் செய்தால் மிகுந்த ஐஸ்வரியத்தை அநுபவிப்பான். தேன் கலந்த லவணங்களை ஹோமம் செய்தால் கோரிய கன்னியை அடைவான்.

இதிஸித்த மனுமந் த்ரீ
ப்ரபுல்லை: கமலை சுபை:
வசமா ஜாத்தி மனுஜா
தண்டுலை: திலமிச்ரிதை:
ஹுத்வா ச்ரிய மவாப்னோதி:
வசயத் யகிலான் லோகான்:
ப்ருதுகைச் சர்க்கராந் விதை:
வசம் நயதி ராஜாநம்:
ஸக்துபி: பிராம்மணான் சுபை:
க்ருத ஹோமேந தனவான்
ஜாயதே நாத்ர சஞ்சய:

கரும்புத் துண்டுகளின் ஹோமத்தினால் புத்திமானாக ஆகி, ராஜ்யஸ்ரீயை அடைவர்ன். தென்னம்பழம் வாழைப்பழம் ஆகிய இவைகளை ஓமம் செய்தால் எல்லா உலகங்களையும், சர்க்கரையோடு கூடிய அவலை ஓமம் செய்வதால் அரசர்களையும், சத்துமாவை ஹோமம் செய்வதால் ப்ராம்மணர்களையும் நெய்யை ஹோமம் செய்வதனால் நிரம்பப் பொருள் உள்ளவனாகவும் ஆவான்.

இவ்வாறு ஸ்ரீ மகா கணபதியின் ஹோமத்தைப் பற்றிய மந்திர சாஸ்திரங்களில் மகா பலன்களெல்லாம் கிட்டுமெனக் கூறியுள்ளன. இந்த மகா கணபதி மந்திரத்தை வேதங்களிற் கூறியுள்ள ஸ்ரீ சூக்தத்துடன் ஸம்புடிதமாய் (நடுவில் சேர்த்து) ஹோமம் செய்வதால் நிரம்பப் பொருள்களும், காரிய விருத்தியும் சத்ருஜயமும் ஏற்படும் என்பதை மந்திர சாஸ்திரங்களில் கூறியிருக்கிறது. இவ்விதமாக ஹோமத்துடன் பூஜை ஜபம் என்பன செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கணபதி பூஜை கைமேல் பலன்

'கணபதி பூசைகைமேல் பலன்' என்பது நாமறிந்த, நாம் அனுபவித்த உண்மை.

இந்துக்கள் சுபகாரியங்கள் செய்யுங்கால், தமது முயற்சிகள் தடையின்றி இடம் பெறவேண்டும் என்று வேண்டி விநாயகரை வழிபடுவர். இராமபிரான் சேது அணை கட்ட ஆரம்பிக்கும் போது விநாயகரை வழிபட்டார் என்பர். விக்கினம் வாராமல் காத்து துயர் களைவதால் அவர் விக்கின விநாயகர்.

விநாயகப் பெருமானின் உருவமைப்பு கவர்ச்சியானது. இவ்வுருவ அமைப்பில் உயர்திணை, அஃறிணை இரண்டும் கலந்து காணப்படுகின்றன. ஆனைமுகம் அஃறிணையையும், ஐந்து திருக்கைகள் தேவரையும், உடல் மனிதர்களையும், கால்கள் பூதங்களையும் குறிக்கின்றன.

படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களையும் திருவைந்தெழுத்தையும் விநாயகர் குறிப்பதாக அருளாளர்கள் விளக்குவர். இதனால் விநாயகர் ஐந்து கரத்தன்.

வானவர் தேயத்துக் கற்பகதரு வேண்டியவற்றை எல்லாம் தருவது போன்று விநாயகப் பெருமானும் அடியவர்கள் வேண்ட முழுதும் தருவதால் அவர் கற்பக விநாயகர்.

சித்திகள் பலவற்றை விநாயகர் தருவார் என்பதால் அவர் சித்தி விநாயகர். ஆபத்துக் காலத்தில் எம்மை ஓடோடி வந்து காப்பவர் கணேசர் என்பதால் அவர் ஆப்த்சகாய விநாயகர்.

நாம் சிந்தையில் நினைப்பதை அவர் செயலாற்றுவதால் அவர் சிந்தாமணிப் பிள்ளையார்.

தமிழ் மக்களின் அரும் பெருஞ் செல்வம் உயிர்நாடியாம் தேவாரத் திருப்பதி
கங்கள் சிதம்பரத்தில் புதையுண்டு கிடைத்தலை நம்பியாண்டார் நம்பி பொல்லாப்
பிள்ளையார் மூலம் அறிந்தார். செதுக்கப்படாது. பொள்ளுதல் இன்றி உருவாகிய
விநாயகர் என்பதால் அவர் - பொல்லாப் பிள்ளையார்.

வேதமருளிய வியாச பகவான் மகாபாரதத்தை நமக்கு அளித்தார். மகாபாரத
சிந்தனைகள் உள்ளத்தே கருவுற்றதும் உலகுக்கு அளிக்கத் தகுந்த நாடகம் ஒன்று
வேண்டுமென்று வியாசர் இறைவனைத் தொழுது வேண்டினார்.

"இறைவா மானிட சமுதாய உயர்வு வேண்டி இலக்கியம் படைக்க விரும்பு
கிறேன் அதனை எழுதியெடுக்க யாரும் இல்லையே'' இப்படி வியாசர் கவலைப்
பட்டார்.

''நற்குஞ்சரக் கன்றின் உதவியை நாடு. காரியஞ் சித்திக்கும்'' என்று கூறி
இறைவன் மறைந்தனன், ஈற்றில் வியாசர் வேண்டியதற்கு விநாயகர் இசைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாசர் கூற மேருமலையை ஏடாகவும், தமது தந்தத்தை எழுத்தாணியாகவும் கொண்டு மகாபாரதத்தை விநாயகப் பெருமான் எழுதினார் இதனாலே அவர்-ஐவர்சீர் வரைந்த பிள்ளை.

## வழிபாட்டின் தோற்றம்

கி. பி. ஆறாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட சங்க இலக்கியங்களில் பிள்ளையார் பற்றிய குறிப்புகள் இல்லை என்பதும், பிள்ளையார் வழிபாடு பற்றிய குறிப்பு தொல்காப்பியத்தில் உண்டென்பதும் இலக்கிய ஆசிரியர்களின் துணிபாகும்.

கி. பி. 680 – 668 ஆண்டுக் காலத்தில் நரசிம்மர்மவன் என்ற பல்லவன் சாளுக்கிய அரசர்களைப் போரிலே வென்று வாதாபி என்ற இடத்திலிருந்து பிள்ளையாரைக் கொண்டு வந்த பின்னரே விநாயகர் வழிபாடு தமிழ் நாட்டில் பரவியது என்பர்.

ஜனவரியை முதல் மாதமாகக் கொண்டு ஆண்டினைக் கணித்தனர் மேனாட்டினர் ஆவணித் திங்களை முதல் மாதமாகக் கருதி ஆண்டினைக் கணிக்கும் மரபு சுமார் ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நிலவியது. அப்போது மலர்ந்ததுதான் பிள்ளையார் சதுர்த்தி வழிபாடு,

உரோமர்களுக்கு ஜேனஸ் எப்படியோ அப்படித்தான் இந்துக்களுக்கு கணேஷ் தெய்வம், செழிப்புக்கும், உணவுப்பயிர் அறுவடைக்கும் உரிய கடவுளாக ஜேனஸ் கருதப்பட்டார். அவ்வாறே நமக்கு கணேசப்பெருமான்.

இரு முகங்களையுடைய ஜேனஸ் வாயில் காப்புத் தெய்வமாக உரோமர்களாற் கருதப்பட்டது. எந்தச் செயலையும் ஆரம்பிக்க முன்னர் ஜேனசை வழிபடுவது இத்தாலிய நாட்டு வழக்கம்.

அதேபோனறு நலல செயல்களை ஆரம்பிக்க முன்னர் விநாயகப் பெருமானை வழிபடுவது நமது வழக்கம்.

''யான'' ''எனது'' என்னும் செருக்கினை அழித்து, மன அமைதி தந்து செல்வச் சிறப்பினைத் தருவது விநாயகர் வழிபாடு, நேபாளம், திபெத் பர்மா, இந்தோசீனா, ஜப்பான் கிரேக்கம், மெக்சிக்கோ போன்ற நாடுகளிலும் விநாயகர் வழிபாடு பரவி யுள்ளது.

அசோகப் பேரரசனின் புதல்வி சாருமதி நேபாளத்தில் விநாயகருக்குக் கோயில் கட்டி வழிபாடு செய்துள்ளதாக வரலாறு கூறுகின்றது.

புத்தபிரான் தனது தலைமைச் சீடர் ஆனந்தருக்குக் கணபதி மந்திரத்தை உபதேசஞ் செய்து அருளினார் என்ற நம்பிக்கை இன்றும் நேபாள நாட்டில் நிலவி வருகிறது.

விநாயகருக்கோ பாரிய செவிகள், அவருக்கு ஏன் முறம் போன்ற செவிகள்? பிறவிப பெருங்கடலில உழலும பக்தர்குழாம கண்டு இரங்குகிறார் பிள்ளையார். பகதர்கள் அவரது திருவடிகளை சகெனப் பிடித்து இறைஞ்சுகிறார்கள். இவ்வடியார்களை முத்தி எனற கரைசேர்க்க விழைகின்றார் பிள்ளையார். அதனால் தனது பெரிய செவிகளை அசைத்து காறறை வீசி விரைவாக முத்திக்கரை அடைய வழி செய்கிறார். துணை நிற்கிறார்.

மாற்றரிய பிறவியெனும் மறிகடலின் வாய்ப்பட்டுப்
போறறரிய திருமலர்த்தாள் புணைபற்றிக் கிடற்தேற்குச்
சாற்றரிய முத்தியெனுந் தடக்கரையில் உய்ப்பதற்குக்
காற்றெறியுந தாள்செவியா கடாககளிற்றைப் பணிகுதுமே!

நன்றி — ஸ்ரீ அரசசேகரிப் பிள்ளையார்
தேவஸ்தான கும்பாபிஷேகதின வெளியீடு (1995)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வழிபாட்டு முதன்மை

பல்கலைப்புலவர் க. சி. குலரத்தினம்

''இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்'' என்பது ஆறுமுகநாவலர் அவர்களின் வாக்கு.

கடவுளை வணங்குவதற்கு வகுக்கப் பெற்ற வழியில், வழிபாட்டு முதன்மை விநாயகப்பெருமானுக்கே பாரம்பரியமாக வழங்கப்பெற்று நடைமுறையில் நிலவி வருகின்றது.

விநாயகப்பெருமான் சிவமூர்த்தத்தினின்றும் முதலில் தோன்றினவரானமையின் மூத்த பிள்ளையாராயினர். அவர் கொன்றையான் தந்தளித்த போதகம்.

விநாயகப்பெருமான் சிவபிரானின் வேறானவரல்லர். அவர் சிவபிரானின் அருள் மூர்த்தங்களில் ஒருவர். இவரே அவர், அவரே இவர். சிவபெருமானை வணங்கும்போது இவருக்கு வழிபாட்டு முதன்மை உரிமையாயிற்று.

ஆதிபகவன் என்று திருவள்ளுவர் குறிப்பிட்டது விநாயகப் பெருமானையே குறிக்கும் என்பர். சிலப்பதிகாரத்தில் வெள்ளானைக் கோட்டம் எனக் குறிக்கப் பெற்ற கோயில். விநாயகப்பெருமான் ஆலயமெனக் கருதுவாரும் உளர்.

உலகத்தின் தோற்றமும் இயக்கமும் ஓங்கார மயமானவை என்றும், ஒலியே முதன்மையானது என்றும், ஓங்காரத்துக்கு உருவ விளக்கமாக உள்ளது யானை வடிவம் என்றும் கூறுவர்.

மக்கள் முதல் முதலாகத் தோன்றிய கற்பிரதேசமாகிய குறிஞ்சி நிலத்தில் உலாவிய மிருகங்களில முதன்மையானது யானை என்றும் ஞானிகள் ஒற்றுமை கண்டுள்ளனர்.

விநாயகப் பெருமானுக்கு வழிபாட்டு முதன்மை பாரதநாடென்னும் இந்தியாவிலேயன்றி, அகன்ற இந்தியாவென முன்னாளில் பரந்திருந்த பிரதேசமெங்கும் நிலவி வந்துள்ளது.

அகன்ற இந்தியாவின் அகலிடங்கள் யாவும் இன்று அயல் நாடுகளாக மாறியமைந்துள்ள நிலையில் நேபாளம், தீபெத்து, பர்மா, தாய்லாந்து, இந்து சீனம், யாவா, பாலி முதலிய நாடுகள் பலவற்றை நோக்கலாம்.

இத்தகைய அயல் நாடுகளிலேயன்றி உலகநிலப்பரப்பில மேற்கில் மெக்சிக்கோ. பேரு முதலியநாடுகளிலும், கிழக்கில் சீனா, யப்பான் முதலிய பல நாடுகளிலும் விநாயக வழிபாடு நிலவி வந்துள்ளது. மத்திய கிழக்குப் பிரதேசங்களில் எகிப்து, கிறீஸ் முதலிய நாடுகளிலும் விநாயகர் வழிபாடு முன்னர் நிலவியது.

கௌதம புத்தர் தமது எண்பதாம் வயதில் இரண்யவதி என்னும நதிக்கு அப்பால் சாலாமரங்கள் அடர்ந்தசோலையில, ஒரு பாறைக்கல்லின் மீது படுத்திருந்தார்.

பரிபக்குவமுற்றுப் படுத்திருந்த புத்த பகவானுக்கு விநாயகப் பெருமான் சிங்க வாகனததில் தோன்றி உபதேசஞ் செய்தருளினார் என்று நம்பத்தக்க வரலாறென்று அண்மையில் வெளிவந்துள்ளது.

இலங்கையில் புத்தமதம் பரவுவதற்காக அரசமரக்கிளையைக் கொண்டு வந்தவள் சங்கமித்தை என்பர். அவள் புதத சங்கத்திற் சேருவதன் முன் அவளின் பூர்வசிரமப் பெயர் சாருமதி என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாருமதி அசோக சக்கரவத்தியின் செல்வப் புதல்வி. அவள் இளமையில் விநாயகப்பெருமானிடத்துப் பேரன்பு கொண்டு, நேபாளத்திலே அவருக்குப் பெரிய ஆலயம் அமைத்துள்ளாள்.

விநாயகப் பெருமானின் வழிபாட்டைக் கூறுவனவாக இன்று கிடைக்கக் கூடிய நூல்களின் வரிசையில் கணேச புராணம், முற்கல புராணம், பவிஷ்ய புராணம், கணபதியுபநிஷதம், கணேச கீதை முதலிய நூல்கள் குறிப்பிடத் தக்கவை.

விநாயகப் பெருமானை முறையாக வழிபட்டு முன்னேறிய முனிபுங்கவர்களுள் கணகர், முற்கலர், பார்க்கவர், மதங்கர், வியாசர் முதலானவர்கள் முன்னோடிகளாவர்.

தமிழ் நாட்டில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய தேவார முதலிகள் விநாயக மூர்த்தத்தை முற்றாக உணர்ந்து, அது மூல மூர்த்தமாய் சிவதத்துவத்திலிருந்து தோன்றியதைப் பாடியருளியுள்ளார்கள்.

வலிவலத் திருத்தலத்திலே பக்தர்களின் மிடியைப் பொடியாக்க வல்ல விநாயக மூர்த்தத்தைத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் கண்டார். கைவேழ முகத்தவனைப் படைத்துக் கயாமுகவசுரனைக் கொல்லுவித்தார் என்பதைத் திருநாவுக்கரசு நாயனார் உளங் கொண்டார்.

இங்ஙனமே சுந்தரமூர்த்தி நாயனார், நம்பியாண்டார்நம்பிகள், கபிலர், அதிரா வடிகள் முதலான திருமுறையாசிரியர்களும் கண்டு பாடியருளியுள்ளார்கள். அன்றி தேவாரத் திருமுறைகள் ஒருகாலத்தில் மறைக்கப்பட்டிருந்த போது, அவற்றை வெளிக் கொணர்வதற்குப் பேரரசன் இராசராச சோழன் முயன்ற போது, திருவருள் பாலித்தவர் விநாயகப் பெருமான்.

திருமுறைகளின் சாரமாக, தமிழரின், தலைசிறந்த சமயக்கோட்பாடாகச் சைவ சித்தாந்தம் என்னும் மெய்கண்ட சாத்திரங்கள் நூல் வடிவு பெறுவதற்கு முன்னின்று திருவருள் பாலித்தவர் விநாயகப் பெருமானேயாவர்.

விநாயகப் பெருமானின் அருள் மூர்த்தங்கள் பாலகணபதி, வீரகணபதி, தருணகணபதி, ஏரம்பகணபதி, மகாகணபதி, நிருத்தகணபதி, லட்சுமிகணபதி, வரகணபதி, துண்டிகணபதி, திரிமுககணபதி, பஞ்சமுககணபதி, யோககணபதி, முதலாக முப்பத்திரண்டு விதமாக வழிபடப் பெறுகின்றன.

விநாயகப் பெருமானின் திருவுருவம் பலதத்துவ நுட்பங்களைக் குறிப்பதாகும். அவரின் திருமுகம் திருமாலையும், முக்கண் சிவபெருமானையும், நாபிக்கமலம் நான்முகனையும், இடப்பாகம் சக்தியையும், வலப்பாகம் சூரியனையும் குறிப்பனவாகும் என்பர்.

விநாயகப் பெருமான் திருக்கரங்களில் தரித்தருளியுள்ளன பஞ்சகிருத்தியங்கள் என்னும் ஐந்தொழில்களைக் குறிப்பனவாகும், அவ்வாறமையும்போது பாசம் படைத்தலையும், ஒற்றைக் கொம்பு காத்தலையும், அங்குசம் அழித்தலையும், துதிக்கை மறைத்தலையும், மோதகம் அருளலையும், குறிப்பனவாகும்.

விநாயகப் பெருமானிடம் விலங்குத் தலையும் மனிதவுடம்பும், தேவர் பாதங்களும் அமைந்துள்ளமை அவர் எல்லோருக்கும் தெய்வமென்பதை உணர்த்தும். அவரின் ஒருபக்கக் கொம்பு ஒடிந்துள்ளமை அம்பிகையைக் குறிக்கவே, அவர் அம்மையப்பர் வடிவினராயினர் என்பர்.

விநாயகப் பெருமான் காட்சிக்கு எளியவர், கருணைக்கு இனியவர், விரைவாக அருள்செய்பவர். அவரின் தும்பிக்கை அருள் தருகையால் நீண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் திருவடிகள் கிரியையையும் கிரி யையின் வழிவந்த ஞானத்தையும் குறிப் பனவாகும்.

'ஆனை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்பது பழமொழி. ஓங்கார ஒலியின் வடிவமாக விநாயகப் பெருமான் ஆனை வடிவத்தோடு எழுந் தருளிவந்து அருள்பாலிக்கின்றார். ஆனை பெரியது, வலியது ஆனால் அடங்கி நின்று நன்றாக வேலைசெய்வது. விநாய கப் பெருமான் திருவருள்பாலிப்பதில் பெருமளவு சுரப்பவர்.

விநாயகப் பெருமானை உளங் கொண்டு அன்போடு ஆறுதலாகப் பூசை செய்த ஔவையார் ஆறுதலடைந்து அருளிய தோத்திரம் விநாயகரகவல் என்னும் பனுவலாகும். பக்தி சிரத்தை யோடு ஓதுவோர் பெறும்பயன் பெரி தாகும்.

விநாயக வழிபாட்டுக்கு அனுகூல மாகத் தமிழிலே புராணங்களும் பிரபந் தங்களும் காலத்துக்குக் காலம் செய்யப் பெற்றன. ஔவையார் செய்த விநாயக ரகவல் தமிழ் பேசும் நல்லுலகமெங்கும் பக்தியோடு பாராயணஞ் செய்யப்பெற்று வருகிறது.

வடமொழியிலெழுந்த பார்க்கவ புராணம் என்னும் விநாயக புராணத் தைத் திருக்கைலாய பரம்பரைத் திருவா வடுதுறையாதீனத்துக் கச்சியப்பமுனிவர் தமிழ் செய்துள்ளார். அதனை முத்துச் சாமி முதலியார் என்பார் வசனரூபமாக எழுதியுள்ளார்.

சுன்னாகத்தில் வாழ்ந்த வரதபண்டி தர் என்னும் அந்தணர் விநாயக வழி பாட்டில் ஈடுபட்டுப் பிள்ளையார் கதை என்னும் பக்திப் பனுவலை இனிய செய்யுள் நடையில் இயற்றியுள்ளார். இந்நூல் மார்கழி மாதத்தில் வரும் விநாயக விரத காலத்திற் பக்தியோடு படிக்கப்பெற்றுவருகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புல வர் பெருமக்கள் பலர் விநாயகப் பெரு மானை உபாசித்து ஊஞ்சல், மான்மியம், பிள்ளைத் தமிழ், பள்ளு, கலம்பகம் முதலிய பிரபந்தங்கள் பல இயற்றியுள் ளார்கள். இவற்றைப் படிக்கும்போது விநாயகப் பெருமான் மீது பக்தியுண் டாவது சிறந்த பண்பாயுள்ளது.

பதினொராந் திருமுறை வரிசையில் கபிலதேவர் என்பார் பாடியருளிய பிர பந்தமொன்று மூத்தநாயனார் திருவி ரட்டை மணிமாலை என வழங்குகின்றது. "திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல் பெருவாக்கும் பீடும் பெருக் கும்" என்று விநாயக வழிபாட்டின் பயனைக் கூறுகின்றார்.

விநாயகப் பெருமான் தன்னடியார் உள்ளத்தே வாழ்பவர். அவரை வாழ்த் தியே வாழ்தல் வேண்டும். "விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான் விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம்.

அதிராவடிகள் தாம் பாடியருளிய மூத்த பிள்ளையார் திரு மும்மணிக் கோவையில் விநாயகப் பெருமான் மொழி யின் மறைமுதல் என்பர். சக்தி தத்துவம் மிக்க விநாயகரை காமாரியீன்ற கருங்கைக் கடதடத்து மாமணி என்பர்.

நம்பியாண்டார் நம்பிகள் திருமுறை கள் மறைந்து கிடந்த இடத்தை உணர வும், அவற்றைத் தேடியெடுத்துத் திரட் டித் தொகுத்துத் திருமுறை வரிசை பண் ணவும் தோன்றாத் துணையாயிருந்தவர் விநாயகப் பெருமான்.

"என்னை நினைந்தடிமை கொண் டென் இடர்கொடுத்துத் தன்னை நினை யத் தருகின்றான்" விநாயகப் பெருமான் என்று பாடத் தொடங்கும் நம்பியாண் டார் நம்பிகள், விநாயகப் பெருமான் திருவருட் கடாட்சம் உள்ளவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்கொளியாய் அருள்ஞான மூர்த்தி யாகி
உலகமெலாம் அளித்தருளும் உமையம்மை காணத்
தெங்கமழும் மலரிதழி திங்கள் கங்கை
திகழரவம் வளர்சடைமேற் சேர வைத்த
நீங்கலரும் பவத்தொடர்ச்சி நீங்க மன்னுள்
நின்றிமையோர் துதிசெய்ய நிருத்தம் செய்யும்
பூங்கமல மலர்த்தாள்கள் சிரத்தின் மேலும்
புத்தியினும் உறவணங்கிப் போற்றல் செய்வாம்.

# "விநாயகர் [illegible] [illegible] கருத்தும்"

[illegible]

"ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே"

திருமூலர் திருமந்திரம்

எந்தச் செயலை ஆரம்பிக்கும்பொழுதும் விநாயகப் பெருமானை வணங்குதல் [illegible]

[illegible]

[illegible] பிரணவம் [illegible]

பெருவர்களும் [illegible]
ஆதலால் வானோரும் ஆனைமுகத் தானைக் காதலால் கூப்புவர்தம் கை.

சிவபெருமானே திரிபுரசம்காரத்தின்போது விநாயகரை நினைக்காது சென்றமையால் தேர் அச்சு முறிந்தது என்பதை மாணிக்க வாசகர், நச்சுவிருத்தத்திலும், தாமடியிட்டதும் அச்சு முறிந்தது என்று உந்தீபற' என்ற அடிகளால் குறித்திருக்கிறார். இதனாலேயே எதைத் தொடங்கினாலும் 'பிள்ளையார் குட்டியாச்சு' என்றும், எதை எழுதினாலும் 'பிள்ளையார் சுழி போட்டாயிற்று' என்றும் மக்கள் கூறுவதை நாம் கண்டும், கேட்டும் இருக்கிறோம்.

பிள்ளையார் சுழி என்பது எது? குழந்தைகள் வட்டம் வட்டமாக எழுதுகிறார்

அம்மை அப்பரின் மூத்த பிள்ளை பெருமான் விநாயகர் என மறைமலையடிகளும், உமாதேவியார் மணாளன் உருக்களமைந்து கொஞ்சிக் குலாவியதைக் கண்ட இறைவன் அம்மை புதல்வாய்ப் பேற்றை விரும்பினான் என அறிந்து அவர் விருப்பத்தைப் பூர்த்திசெய்து அப் புதல்வர் பேற்றைக் கொண்டாட எண்ணித் தேவர்கட்குத் தூதனுப்ப அவர்களுடன் சனி பகவானும் வந்தார் என்றும், அவன் பார்வை அக்குழந்தை மேற் பட்டதால் விநாயகரின் உருவம் (தலை) மாறுபட்டு அமைந்ததென சிவபுராணமுங் கூறுகின்றது. இதன் தத்துவக் கருத்து யாதெனின் (அகார உலகங்களாகிய சிவனும் சக்தியும் கூடியே நாதப் பிரணவமாயிற்றென்பதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி விநாயகரின் திருவுருவ தத்துவங்களை ஆராய்வாம். அவரது திருமுடி ஞானத்தைக் குறிக்கும். பெருவயிறு; ஆகாசம் போல எல்லா உலகங்களும், உயிர்களும் தம்முள் அடங்கியிருக்கின்றன என்பதைக் குறிக்கும். ஐங்கரம்; படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்கள் புரிவதை அறிவிப்பன, ஒடிந்த கொம்பு; அபர ஞானத்தையும் மற்றைக் கொம்பு; பர ஞானத்தையும் குறிப்பன.

தாழ் செவி: எல்லாம் அறியுந் தன்மையைக் குறிப்பது. உயிர்களுக்கு மலவாதனை தாக்காமல் காத்து வினை வெப்பம் போக்குவது. முக்கண்: சோமன், சூரியன், அக்கினி என்பவற்றைக் குறிப்பன. பிறைமுடி: உடல் தேய்ந்து போனாலும் களங்கம் அகன்றது பிறை. அதுபோலத் தவ விரதங்களால் அறியாமை தேய்ந்து உண்மைஞானம் பெற்ற உயிர்களே சிரத்தானம் எய்துதற்குரியன என்பதை உணர்த்தும். மும்மதம்: உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம், திருப்பெருகு சிவஞானம் என்பவற்றைக் குறிப்பன சர்ப்பாபரணம் — பாம்பு: குண்டலீசக்தியின் வடிவம், மூலாதாரத்தில் குண்டலியே விநாயகர் விளங்கும் இடம். அச்சக்தி சுருண்டநிலையிலிருந்து நிமிரின் பாம்பு படம்விரித்து எழுந்து நின்றாற்போல் மூலாதாரத்தினின்று சகஸ்திராரம் வரையில் வியாபித்து ஆன்மாவினிடமாகச் சிவம் பிரகாசிக்கச் செய்யும் என்பதைக் குறிக்கும். யானைமுகம்: விநாயகர் யானைமுகம் கொண்டதற்குப் பல காரணங்களைக் கூறுவர். யானை விலங்கினங்களில் மிகப் பெரியது. ஆற்றல் மிக்கது. எதனையும் வருத்தமின்றியே சுமப்பது. எத்தனைப்பெரிய படையையும் அழித்து வெற்றிகாணும் தன்மையது. காலம் வரும் வரை காத்திருந்து எதிரியை அழிப்பது. மும்மதம் உடையது. 7 முழம் உயர்ந்தது 5 உறுப்பு தாழ்ந்தது. வனசரம் கிரிசரம், நதிசரம் எனும் மூன்று பகுப்புடையது. தம்மைப் பாதுகாக்கும் பாகர் தன் காலில் அடி வைத்தால் அவர்களை முடிமேல் வைத்து உயர்த்துவது. அவர்கட்கு இடுக்கண் வாராது பாதுகாப்பது. அவர்கள் கட்ட விரும்பினால்விரும்பும் இடத்துக்குச் சங்கிலியைத் தானே இழுத்துப்போய் கொடுத்து அவர்கள் கட்டில் அகப்பட்டு நிற்கும். இசைக்கு வசப்படும், இத்தனை குணங்களும் விநாயகருக்கு உண்டு என்பது அதன் தத்துவமாகும். (1982)

---

அடியர்ந்து கொள்வாயே நெஞ்சமே அப்பம்
இடியவலோ டெள்ளுண்டை கன்னல் - வடிசுவையில்
தாழ்வானை ஆழ்வானைத் தன்னடியார் உள்ளத்தே
வாழ்வான வாழ்த்தியே வாழ்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# காணாபத்யம்

கவிதாமணி அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்

எழுதத் தொடங்கும்போது முதலில் எழுதுவது பிள்ளையார் சுழி. விநாயகர் திருக்கோயில் இல்லாத கிராமமே தமிழகத்தில் இருக்காது. நகரங்களிலும் புதிய குடியிருப்புப் பகுதிகள் அமைக்கப்படும் போதும் அங்கு விநாயகர் ஆலயம் முன்னரோ பின்னரோ அமைக்கப்படும்.

ஆற்றங்கரை படித்துறையிலும், அரசு வேம்பு மரத்தடிகளிலும் முச்சந்திகளிலும், ஏன் நீதிமன்ற எல்லைக்குள்ளும் அமைக்கப்படும் ஆலயம் விநாயகர் ஆலயம்தான்.

விநாயகர், கணபதி, பிள்ளையார் என்ற சிறப்புப் பெயர் பெறும் மூர்த்தம்பற்றி விநாயக புராணம், கந்த புராணம், காஞ்சி புராணம், சிவபுராணம் ஆகிய புராணங்கள் விவரித்தாலும் சைவ சமயக் குரவர்களிலே ஆளுடைய பிள்ளையாக, அம்மையின் அமுதப் பால் உண்ட பாலகராக, முருகப்பெருமானே மானிட வடிவம் தாங்கி வந்தவராகக் கருதப்பெறும் திருஞானசம்பந்தர் தமது அருள் வாக்கால்

*பிடியதன் உருஉமைகொள மிகுகரியது*
*வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்*
*கடி கணபதிவர அருளினன் மிகுகொடை*
*வடிவினர் பயில்வலி வலமுறை இறையே*

என்று விவரித்திருக்கிறார். ஓம் என்னும் பிரணவ வடிவமே கணபதி. சிவம் ஆண் யானையாகி சக்தி பெண் யானையாகி சங்கல்பிக்க விநாயக வடிவம் வெளிப்பட்டது.

சிவகுமாரராக, மால்மருகனாக விநாயகர் வணங்கப்பெற்றாலும், இவரே மூலம் தோற்றமும் முடிவும் இல்லாத பரப்பிரம்மமே விநாயகர். தனக்குமேல் நாயகர் இல்லாதவர்' எல்லா உயிரிடத்தும் தலைக்குக் காவலராக தான் இருந்து விளங்குபவர் என்பதை விவரிப்பதே காணாபத்தியம் ஆகும்.

பிள்ளை + யார்? என்பதை வினா வாக்கினால் விடையாக எங்கும் நிறைந்து, எல்லாம் அறிந்தும், எதுவும் வல்லவனாக விளங்கும் அந்த பரபிரமமே பிள்ளை வடிவமாக தோற்றம் தருகிறது என்பதை அந்தப் பதமே விடையாக நமக்கு விளக்குகின்றது.

ப்ரணவத்திலிருக்கும் "அ" சிவம், "உ" சக்தி இவ்விரண்டும் சேர்த்து "ய" கரமாக அதுவே இருக்குமிடம் குறிக்க கணங்களின் நாயகன் கணபதி என்றாகிறது என்பர் யோக மார்க்கம் அறிந்த நல்லறிஞர்கள்.

யானையை அடக்க பாகன் கரத்தில் இருப்பது அங்குசம். அந்த அங்குசத்தை தன் கரத்தில் வைத்து அருள்புரிபவர் கணபதி.

*"ஏர்கொண்ட தன்னைத் தளைப்பவரும் ஊருநரும்*
*இலரென்ப துலகுதேதற்கு எடுத்த வெம்பாசமோ*
*டங்கு சந்தன் கரத்தேந்தி"*

என்று கூறி இவரே, ஆதியும் அந்தமும் இல்லாத முழுமுதற்பொருள் என்பதனை கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ் செப்புகிறது.

பிள்ளையாரின் யானை முகத்தைக் கண்டு மிருகம் என்று நினைக்கலாமா? மனித உடலைக் கண்டு மனிதன் என்று சொல்லலாமா? பூத கணத்தின் காலைக் கண்டு பூத கணமென்று புகலலாமா? உலகின் படைப்பில் உள்ள அத்தனை உயிர்களின் சிருஷ்டித் சமஷ்டி வடிவமே இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை தோற்றமும் வடிவமும் விளக்கு கின்றது.

தாயின் கருக் குழியில் பூச்சகரவடி வில் அமைந்த நாதத்தில் வேல் வடிவு கொண்ட விந்து கலந்து ஒன்றுபடும்போது அமைவதும், தாயின் கருவில் முதன் முதலில் உருவாவதும் விநாயக வடிவமே என்ற தத்துவ நுட்பம் மிகவும் ரகசிய மானது.

விந்து - நாதமும் சர - அசர நிலை களின் வடிவமான பிள்ளையார் சுழி தியா னத்தில் மேலநோக்கி எழுவது அனுபவ மாக அமைகிறது. அறுத்து அடைக்கப் பட்ட ஆசாரவாயிலில், திட்டி வாசலரு கில சுழி முனையில தும்பிக்கையனாக, திருமேனியாக விளங்கும் தத்துவப் பொருள் கணபதி.

ஷண்மத ஸ்தாபகரான ஆதி சங்கர பகவத பாதாள் காணாபத்யம கருத்து நிறைநத தத்துவ விளக்கம என்பதை அனுபவித்து அறிவித்திருக்கிறார்.

உலகெலாம ஓதி உணாதலுக்கு எளியவ ராக விநாயகர் வளஙகுகின்றார். பள்ளிச் சிறுவா முதல்பாட்டி-தாத்தா வரை அனை வரும வணங்கும் ஆதிப்பொருளாக, ஏழை மககளுககு இரங்கி இன்னருள் சுரக்கும கற்பகமாகத் திகழ்பவர். காணாபத்தி யததன் கருத்து நிறைந்த கணபதியே யாவார்.

இந்திய மண்ணில் மட்டுமல்ல கடல்கடந்த நாடுகளிலும் கணபதியின் செல்வாக்கு உயாநது விளங்குகிறது. ஆங்கெல்லாம திருக்கோயிலும் வழிபாடும் நடைபெற்று வருகின்றன. ஜாவா, பாலி. சுமத்திரா போர்னியோ, பிலிப்பைன்ஸ், கமபோ டியா, சமபா, அன்னாம், சயாம், மலேயா பர்மா, இலங்கை முதலிய இடங்களில் விநாயக வழிபாடு தொன்மையான தாக விளஙகுகிறது. சமீப காலத்தில் அமெரிக்கா, லண்டன் ஆகிய இடங்களில் விநாயகர் வழிபாடும் திருக்கோயிலும் அமைக்கப்பட்டு வழிபடப்பட்டும் வருகின் றது.

காணாபத்திய மூர்த்தியை சைவர், சாக்தர், கௌமாரர், வைணவர், சமணர் ஜப்பானியர், உரோமானியர் ஆகியோ ரும் வணங்கி துதித்து வருவது அவரே முழுமுதற் கடவுள் என்பதற்குத் தக்க சான்றாகும்.

ருக்வேதம், கணாநாம், த்வாகணப திம் ஹவாமஹே கவிம்கவினாம் உபமச்ர வஸ்தமம் ஜ்யேஷ்டராஜம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மண ஸ்பதே ஆந; சருணவன ஊதியி ஸீதஸாதனம்' என்று முழங்குகிறது. ருக் வேதம் ஆறாம் அஷ்டகம ஐந்தாம் அத்தி யாயம் 37 – 38 பஞ்சாதிகள் கணபதி ஸூக்தமாக அமைநதிருக்கிறது. அதர்வண வேதத்தில் ஸ்ரீ கணபதி உபநிஷத் அளவில சிறியதாக அமைந்திருந்தாலும் பலன நலகுவதில சிறந்ததாக கணபதும் பரப்ரம்மம என்று விளக்குகிறது.

விநாயகப்பெருமான் திருவுருவம் 32 வகை என்றும் அவரது படைககலங்கள் 29 வகை என்றும் சைவ ஆகமங்கள் தெரிவிக்கின்றன.

தொலகாப்பிய காலத்தில் தமிழ் வரு டப் பிறப்பு ஆவணி மாதத்தை முதலில வைத்து ஆவணி சதுர்த்தியில் விநாயக வழிபாடு அமைக்கப்பட்டதாக நச்சினார்க் கினியர் விளக்குகின்றார்.

எந்த நூல எழுதத தொடங்கினா லும் வாக்கு தேவதையான சரஸ்வதிக்குக் காப்புச் செய்யுள் கூறாது விநாயகருக் குக் காப்புச் செய்யுள் அமைக்கும சம் பிரதாயம சிநதிக்கததக்கது அலலா?

எந்த பூஜை தொடங்கினாலும் "சுக்லாம பரதம விஷ்ணும சசிவர்ணம் சதுர்புஜம பிரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னம உபசாந்தயே" இந்த ஸ்த்தாததிரம இடமபெறுமே திரும்.

அரைதத மஞ்சளிலும பசுமசாணத் திலும அருகம புலலிலும் விநாயகர் விரும்பும் பக்தர்கள் விரும்பும் இடத்தில விரும்பும் நேரத்தில் ஆவாஹனமாகும் கணேசப் பெருமான் புகழை எழுதித் தீருமா?

ஞாயிற்றைச் சங்கிலியால் அளக்கப்
போமோ!
ஞானமய விநாயகன் புகழ்
வகுக்கலாமோ?
ஆயிர நூல் எழுதிடினும் முடியப்
போகுமோ?
அவன்புகலழச் சுருக்கமதாய் உரைத்தோம்
இங்கே.

நன்றி; ஸ்ரீ கணேச கதம்பம் (1980



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஆலய அமைப்பின் தத்துவம்

பண்டிதர் மு. கந்தையா, B. A அவர்கள்

மல்லாந்து படுத்திருக்கும் ஒரு ஞானியின் உடலின் தோற்றத்திற்கும் ஒரு ஆலய அமைவின் தோற்றத்திற்கும் இடையே ஒப்புமையுண்டு. மனித உடலில் சிரசு, கண்டம் மார்பு, தொப்பூழ், மூலாதாரம், பாதம் என்பன பிரதான பகுதிகள். ஒரு ஆலயத் தில் கர்ப்பக்கிருகம், அந்தராளம், மாகமண்டபம், நந்தி, கொடிமரபீடம், கோபுரம் என்பன பிரதான பகுதிகள். முதலாவதில் உள்ள ஒவ்வோர் அம்சமும் இரண்டாவ தில் உள்ள அம்சங்களுக்கு நேருக்கு நேர் பொருத்தமாக அமையுஞ் சிறப்பு அவதா னிக்கத்தகும். "எண்சாணுடம்புக்கும் சிரசே பிரதானம்." சிரசு உடலில் மிக ஒடுங்கிய உறுப்பாய் மனிதனுக்கு இன்றியமையாத பிரதான அம்சமான மூளையை உள்ளடக் கியதாய் இருக்கின்றது. உடலியக்கம் முழுவதற்கும் தேவையான உணர் நரம்பு மண் டலம் (Sensitive Nerves), செயல் நரமபு மண்டலம் (Motor Nerves) இரண்டும் மூளையையே ஆசிரயித்துள்ளன. தியானயோக சாதனையிற் செல்வோருக்குச் சதா சிவமூர்த்தி புலப்பாடாகுங் காட்சி புருவ நடுவாகிய ஆஞ்ஞா சக்கரத்திலிருந்து மேல் சிரப்பாகம் முழுவதிலும் வியாபித்துக் காண்கின்றது

ஆலயத்திற் கர்ப்பக்கிருகம் மிகச் செறிவாக சிக்கன பரமாக அமையும் ஒருபாகம். ஆலயத்தின் உயிர் நிலையம் அதுவே. அங்கிருக்கும் மூர்த்தியே ஆலயத்தின் உயிர். அதன் சக்தியும் பிரபாவமுமே ஆலயம் முழுவதிலும செறிந்திருக்கின்றது, அம்மூர்த்தி சீர்நிலையில இருந்தால் மட்டுமே ஆலயததில் உள்ள மற்ற மூர்த்திகளுக்கும் பிரபா வங் காணப்படுகின்றது. மூளைக்கு ஏதேனும் நேர்ந்தால் உடல் முழுவதும் செயலற் றுப் போவதுபோல மூல மூர்த்தி அசைககப்பட்டால் அல்லது பெயர்க்கப்பட்டால் சகல மூர்த்திகளும சக்தியறறனவாகி எல்லாவற்றையும் ஒருங்கே பாலஸ் தாபனம் பண்ணித் திரும்பப் பிரதிஷ்டை செய்யவேண்டியதாகிறது.

உடலில் கண்டம், சிரசையும் மார்புப் பகுதியையும் இணைக்கும் பாலம் போல் இருக்கிறது. ஆலயத்தில் கர்ப்பக்கிருகத்தையும் மாகாமண்டபத்தையும் இணைக்கும் அந்தராளம் என்ற பகுதியும் இத்தகையதே. கண்டத்திலேயே ஒருவருக்குத் தொனி நிகழ்கின்றது. மூலமூர்த்திக்குப் பூசையாகும் போது ஆசாரியர் நின்று அர்ச்சனை மந்திர ஒலி கிளப்புவதற்குரிய இடம் அந்தராளம் மட்டுமேயாம்.

உடலில் மார்புப் பிரதேசம் மிக மகத்தானது. மூளைபோல் மகா முக்கியமான இருதயம் இருந்தியங்கும் இடம் மார்பேயாகும். சிவாலயம் ஒன்றில் நடராசமூர்த்திக்கு உரிய இடம் மகா மண்டபமே, ஓய்வொழி விலலாமல் அடித்துக் கொண்டிருக்கும் உடல் உறுப்பு இருதயம். ஓய்வொழிவில்லாமல் நடித்துக் கொணடிருக்கும் சிவ மூர்த்தம் நடராஜா. இந்த ஒப்புமை மிக அபாரமானது. எல்லா மூர்த்திகளையும் பிரதிஷ்டை செய்யும் திட்டவட்டமான முன்னேற்பாட்டோடு அமைவுற்ற ஆலயங்களில் மகா மண்டபத்தில் நடேசர் இடம்பெறக் காணலாம். கொழும்பு கொச்சிக்கடை பொன் னம்பலவாணேசர் கோயில் பார்க்க. கந்தசுவாமியாரை மூலமூர்த்தியாகக் கொண்டி ருக்கும் ஆலயங்களில் மகா மண்டபம் ஆறுமுக சுவாமியாருக்குரிய இடமாக இருந்து வருதல் முன்னையதின் மாதிரியைப் பின்பற்றியே எழுந்ததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்நிலையம் என்பது பெருவழக்கம்.

இனி, உடலில் தொப்பூழ்ப் பிரதேசம் உயிர் இருக்கின்றதா என்பது பற்றிய ஆராய்ச்சி பிரக்ஞையற்றுக் கிடப்போரிடத்தில் உயிர் இருக்கின்றதா என்பது பற்றிய ஆராய்ச்சி தொப்பூழிலேயே செய்யப்படுகிறது. உறக்க நிலையுங் கடந்து கீழ்நோக்கி அப்பால் செல்லும் உயிர் தரிக்குமிடமாகிய துரிய அவஸ்தைத்தானம் எனப்படுகின்றது தொப் பூழ்ப் பிரதேசம். ஆலய அமைப்பில் இதற்குச் சமானமாக உள்ளது நந்தியிருக்குமிடம். நந்தி பரிசுத்த ஆன்மாவைக் குறிப்பதென்றே கூறுவர். பொதுவாக வழிபாட்டாளர்க் கும் சிறப்பாக அஷ்டாங்க நமஸ்காரம். பஞ்சாங்க நமஸ்காரம் பண்ணுவோர்க்கும் 'நந்திக்கு இப்பால் நின்று செய்க' என்பது விதி.

பூசை அர்ச்சனை செய்து பிரசாதம் பெறுவோர்க்கும் 'நந்தியைக் கடவாமல் நின்று பெறுக' என்பதே விதி.

"நந்தி" பரிசுத்த ஆன்மா. அதன் எல்லையை மீறிப் போவது ஆன்ம சுத்தி பெறவேண்டியவர்களின் அடக்கப் பண்புக்கு விரோதமாகும் என்ற குறிப்பினாலேயே இவ்விதிகள் ஏற்பட்டிருப்பதாகத் தோன்றுகின்றது. இஃது இங்ஙனமாக, கோயிலில் முண்டியடித்து முன்னேற முயல்வது தகுமோ என்பதும் சிந்திக்கவேண்டியதே.

இனி, உடலில் தொப்பூழ்ப் பிரதேசத்தையடுத்து அதன் கீழாக உள்ள ஈறக்கியஸ் தானம் மூலாதாரம் ஆகும். இதிலிருந்து மேல்நோக்கி எழுந்து சிரசுவரை செல்லுவது முள்ளந்தண்டு என்னும் முதுகெலும்பு. இன்னும் எம் பருவுடலின் உள்ளிருக்கும் அருவு டலில் அமையும் ஆதாரங்கள் ஆறில் முதலாதாரமாகிய இம் மூலாதாரத்தில் நாலிதழ்க் கமலத்தில் விநாயகர் வீற்றிருப்பார் என்பது யோகக் காட்சியில் ஓர் அந்தரங்க இரக சியமாகும். "வ, ச, ஷ, ஸ தளயுக்தே சம்யக் ஆதாரபத்மே தருணம், அருணகாத்ரம் வாரணாஸ்யம் கணேசம்" —(விநாயகர் தியான சுலோகம்). இதற்கு நேரொப்பாக ஆலயத்தில் உள்ள பகுதியில் கொடிமரம் விளங்குகின்றது. கொடியேற்ற நாளில் அதைச்சுற்றிச் சுற்றி மேலேறுஞ் சீலை முள்ளந்தண்டில் வளைந்து சுற்றி மேலேறும் குண்டலினி சக்தியின் அறிகுறியாகக் கருதப்படுகின்றது. கொடிமரபீடத்தின் கீழாக முன்புறம் ஒரு விநாயக மூர்த்தம் ஆலயங்களில் இருப்பது கண்கூடு. அதுவே 'ஆழத் துப்பிள்ளையார்' எனக் குறிக்கப்படுவது.

மல்லாந்து கிடக்குமுடலில் பாதங்கள் மேல் நோக்கி நிமிர்ந்திருக்குமாறு போல ஆலய முகப்பில் கோபுரம் உயர்ந்து விளங்குதலும் நாமறிவ தொன்றே.

இவ்வாறு உடலமைப்பைப் பிரதிபலிக்கும் பாங்கில் ஆலயம் இருப்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டுபவை அதிகாதிகம். உடலில் உயிர்க்குயிராயி நக்குஞ் சிவனை ஒவ்வொரு வரும் தன்னிலே தான் கண்டு அவனை அடைதலே முடிந்த முடியாகிய வாழ்க்கைப் பயன் எனின், அதற்காக வேண்டிய முன்னோடிச் சாதனையாயிருக்கும் சிவ வழிபாட் டிற்குரிய இடமாகிய ஆலயமும் அவ்வாறே அமைவதில் அபாரப் பொருத்தமுண்டு. ஆலய பூசகர்களும், சிவபூசகர்களும் (சிவபூசையாளர்) இந்தப் பொருத்த நிலையின் அடிப்படையிலேயே பூசையாற்றுகின்றனர். தம் அருவுடலில் மூலாதாரம் முதலாக உள்ள ஆறாதாரங்களிலும் பிராணாயாமத்தின் உதவியால் தம் மன உணர்வைப் படிப்படியாகச் செலுத்தி அங்கங்குள்ள தெய்வ மூர்த்தங்களைத் தியானித்துத் தியா னித்து மேற்சென்று புருவநடுவாகிய ஆஞ்ஞாசக்கரத்தில் மன உணர்வைத் தடுத்து நின்று மானசிகமான பாவனைகளால் அகப்பூசை செய்து முடித்த பின்பே, அந்தப் பக்குவத்தோடே அவர்கள் புறப்பூசை செய்கிறார்கள். அகப் பூசையே அந்தர்யாகம் எனவும் வழங்குகிறது. புறப்பூசை புரியும்போது ஒவ்வோர் கிரியையும் அகமுகப்பாடான

தியானத்தோடேயே நடைபெறுகின்றது. அதாவது பூசையில் முன்னாலிருக்கும் மூர்த்திக்கு அபிஷேகம் செய்யும்போதும், மலர், பட்டு, பணி ஆதியன சாத்தும்போதும், நைவேத்தியம் செய்யும்போதும் தமது அகத்தில் தம் நிலைக்கேற்ப நெஞ்சிலோ, புருவ நடுவிலோ இருக்கும் மூர்த்திக்குப் பாவனை வகையாற் செய்யும் நினைவுடனேயே செயற்படுகின்றது. கிரியை ஒவ்வொன்றன் முடிவிலும் மார்பைத் தொட்டு அதன் சாரம் உள்ளடக்கப்பட்டதாகவே மேலும் பாவிக்கப்படுகின்றது.

பூசகர்களுக்கு மட்டுமல்ல வழிபாட்டாளர்களுக்கு இதுவே நியதியாம். இந்தத் தன்மையில் பூசகருக்கும் வழிபாட்டாளர்க்கும் பேதமில்லை. வழிபடுவோரும் இத் தன்மையிற் பூசகர்களேதான். அந்நோக்கில் தான் வழிபடுவோர்க்கும் ஆசார நியம விதிகள் ஏற்பட்டன. என்பதை அறிதல் அவசியம். பூசிப்போர் வழிபடுவோர் என்ற இருதரப்பினரதும் ஏகப்பட்ட தியான பாவனை ஒருக்கமே பரார்த்த பூசையிற் பூசைச் செழிப்பும் பயன்பாடும் என அறிதல் வேண்டும். பூசையில் ஏற்படும் ஒழுங்கீனங்களை வழிபடுவோர் விசாரிக்கலாகாது எனப் பூசகரோ நிர்வாகமோ கருதுவது விஷமத்தனமானது. அந்தப் பழி அவர்களோடே என எண்ணி வழிபாட்டாளர் அமைதி கொள்வது அதைவிட மோசமானது.

மூலமூர்த்திக்கு அபிஷேகம் பூசையாதியன நடைபெறுகையில் தன் புருவ நடுவிலிருக்கும் சதாசிவ மூர்த்திக்கு நிகழ்வதாகப் பாவனா தியானம் பண்ணிக் கொண்டும் அவ்வாறே மகாமண்டபத்திலிருக்கும் நடராச மூர்த்திக்கு நிகழ்கையில் தன் இதயத்தில் இருக்கும் மூர்த்திக்கு நிகழ்வதாகக் கருதித் தியானித்துக் கொண்டும். நந்திக்கு ஆகும் போது தன் தொப்புளிலிருக்கும் தனது சுத்தாத்ம சைதன்யத்துக்கு நிகழ்வதாகக் கொண்டும், கொடிமரப் பீடத்தின் கீழ் உள்ள விநாயகருக்காகும் போது தனது மூலாதாரத்தின் ஆழத்தில் இருக்கும் பிள்ளையாருக்கு – பெருகும் ஆழத்துதுப் பிள்ளையாருக்கு நிகழ்வதாகக் கொண்டும் இவ்வாறே பொருந்தும் ஆற்றால் வழிபட வேண்டியவர் வழிபாட்டாளர்.

சைவர்க்குத் தியான வழிபாடுகள் ஆலய மட்டில் மாத்திரமல்ல ஆலயத்தில் தரிசித்து வழிபட்ட இக்கிரமத்தில் ஆலயத்திற்கு வெளியிலிருக்கும்போதும் தியான பாவனைகளால் வழிபட வேண்டியவர்கள் அவர்கள். இத்தகைய பயிற்சியானது உரிய பருவத்தில் அவர்கள் கிரியாமார்க்கத்திலும் – தாமாக பூஜித்தல் யோக மார்க்கத்திலும் அகத்திலுள்ள ஆறாதாரங்களிலேயே தம்முணர்வு அடங்கி நின்று வழிபடுதல் - முன்னேறும் வாய்ப்புக்கு இன்றியமையாத முற்பயிற்சி ஆகின்றது. முதலில் பூசிப்பாரோடு தரிசனம் மளவில் சேர்ந்து பூசித்து பிறகு தாமே பூசிப்பவராயிருந்து பூசித்து அதன் மேல் பூசைக் கிரியை ஒன்றுமில்லாமல் அகமுகத் தியானத்திலேயே அடங்கி நின்று செல்லும் படியாக அமைந்துள்ள இம் மூன்றன் தொடர்ச்சிப் பொருத்தம் உற்று நோக்கி உணரத்தக்கதாகும். இவை முறையே சரியை, கிரியை, யோகம் எனவுள்ள நிலைகளுக்கும் முறையே புறவழிபாடு, அகப்புறவழிபாடு, அகவழிபடு எனப்படும் நிலைகளுக்கும் பொருந்துமாற்றையும் சிந்திக்கவேண்டும்.

நன்றி: காரை மருதடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர்
ஆலய கும்பாபிஷேக மலர். (1982)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரியைகள் நிறைந்த கும்பாபிஷேகம்

க. சி. குலரத்தினம் அவர்கள்

## பிறவிப் பயன்

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்" என்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் அருமைத் திருவாக்கு. இது சைவாகமங்களின் சாரமாயுள்ள ஒரு வாசகம். சைவாகமங்கள் சைவசமயத்தவர்க்குரிய வாழ்க்கை, வழிபாட்டு முறைகளைக் கூறுவன. அவை சைவப் பண்பாட்டின் பண்டாரம்.

சிவபெருமான் தம்மைத் தாபித்து வழிபட்டு உய்தி பெறுவதற்கே நமக்குத் தனு கரண புவனபோகங்களைத் தந்தருளினார். எங்கும் நிறைந்துள்ள இறைவனை எல்லோருங் கூடி ஓரிடத்தே நின்று வழிபடுவதற்கு வாய்ப்பானது ஆலயம். ஆலயம், கோயில், கோட்டம், நகரம், தளி முதலியன இறைவனிருப்பிடங்களுக்கு வழங்கும் பெயர்கள். ஆலயம் தலக்கோயில், மலைக்கோயில், குடக்கோயில் என மூவகைப் படும் என்பர்.

தமிழர் வாழ்வில் சைவம் மலர்ந்த காலத்தில் உலகெங்கும் ஆயிரக்கணக்கான ஆலயங்கள் எழுந்தன. இன்றைய உலகில் ஐம்பெரும் கண்டங்களாக வகுக்கப்பட்ட பெருநிலப்பரப் பெங்கும் மிகப் பழைய காலத்தில் ஆலயங்கள் நிலவின. தென்னமெரிக்காவில் பழைய சைவாலயங்கள் மண்மூடுண்டு கிடக்கின்றன. தென்கிழக்காசிய நாடுகளில் பல்வேறிடங்களில் பாரிய அளவில் சைவாலயங்ககள் பழுதுபட்டுக் கிடக்கின்றன. ஆபிரிக்காக் கண்டம், மத்தியகிழக்கு நாடுகள் எங்கும் சைவாலயங்கள் பல மறைந்து கிடக்கின்றன. பாரததேசத்தின் பாகிஸ்தான் பகுதியின் வடபால் பஞ்சாப் மாநிலத்தில் பழைய சிவாலயங்கள் மண்மூடுண்டு கிடக்கின்றன. இவை 6000 ஆண்டுப் பழமை வாய்ந்தவை.

ஆன்மா லயப்படும் இடமாதலால் ஆலயம் எனப் பெயர் பெற்ற கோயில் வழிபாடு இன்றியமையாதது. பெரும் பயன் தருவது. எனவே பழந்தமிழர் கோயிலமைத்த இடங்களிலே குடியேறினர். கோயிலில்லாத இடங்களில் கோயிலமைத்தனர். ஆலயந் தொழுவது சாலவும் நன்று என்னும் கோட்பாட்டைக் கொண்டொழுகினர். நாற்பெரும் படைகள் புடைசூழ, ஊர்வலம் சென்ற முடியுடை மன்னர்களும் கோயில் வலம் வந்து வணங்கிச் சென்றனர். முற்றும் துறந்த முனிவர்களும் ஞானவொடுக்கம் பெறக் கோயில்களுக்கருகில் குடில்களிலுறைந்தனர். ஆலயங்கள் தோறும் சித்தர்கள் சமாதிகள் அமைந்தமையும் இவ்வாறே. இறைவன் ஆலயங்களில் உறையத் தொடங்கிய நாள் எந்நாளோ என்று நாயன்மார் இறைவனையே கேட்டுப் பாடியுள்ளார்கள். எனவே ஆலய வழிபாடு ஆரம்பித்த நாள் எவருக்கும் தெரியாது. அது ஆதி நாள். வழிபாடு வாழ்வளிக்கிறது. வாழ்வளிக்கும் வழிபாடு முத்தியின்பம் நல்குகிறது. முத்தி பெறுவதற்குப் பத்திநெறி யறிவிப்பது ஆலயம்.

## ஆலய அமைப்பு

ஆலய அமைப்பு, மூர்த்திகள் திருவுருவங்கள், அவற்றின் பிரதிட்டை, அவற்றுக்கான கும்பாபிடேகம், உற்சவங்கள், பிராயச்சித்தம் முதலியன யாவும் சைவாகமங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் விரிவாகவுள்ளன. ஆகமவழியில் நாம் ஒழுகினால் இறைவன் நமக்கு அண்மை
யில் வருகிறான் என்று மாணிக்கவாசகசுவாமிகள் அருளியுள்ளார். ஆலயம் பெரிய
அண்டத்தின் பிரதி அமைப்பு. அது எங்கள் உடம்பின் அமைப்பாகும். ஆலயம்
கர்ப்பக்கிரகத்தை மூலதனமாகக் கொண்டு, மூலவரைப் பிரதிட்டை செய்து, அவருக்குப்
பரிவார தெய்வங்களைச் சுற்றுப்பிரகாரங்களிற் பிரதிட்டை செய்து, அர்த்த மண்ட
பம், மகாமண்டபம் ஆகிய அமைப்புக்களில் அமைய வேண்டிய நந்தி, பலிபீடம்,
கொடிமரம் முதலியன அமைத்து, அப்பால் தேவசபை, வசந்தமண்டபம், யாகசாலை
முதலியன அமைத்துக் கோபுரவாசலின் மேலே தூலலிங்கம் எனத் தூரத்திலே கண்டு
வணங்கத்தக்கதாக வானளாவிய கோபுரம் எழுப்பி நாற்பெரு மதில்கள் அமைத்து,
அப்பால் பெருவீதிகள், தீரத்தக்குளங்கள், நந்தவனங்கள், பசுமடங்கள், திருத்தொண்
டர் உண்டுறங்கும் அம்பலங்கள் யாவும் அமைப்பர்.

## ஆலயம் அழைக்கிறது

நாம் சைவ நன்னெறியிலே பீடுநடை நடப்பதற்கு நம்மை அழைத்து அருள்
சுரப்பது ஆலயம். ஆலயம் தானும் அரனெனத் தொழுமே என்பது சைவசித்தாந்தத்
தின் முடிந்தமுடிபு. திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச் சிவனெனவே
நினைந்தவர்க்குச் சிவன் உறைவன் அங்கே. திருக்கோயில் பக்தி நிலையம், திருவரு
ளான மூலபண்டாரம் வழங்கும் பத்தாயம். அது பண்பாட்டு நிலையம்.

ஆலயத்துக்கு அருள்சுரக்கும் சாந்நித்யம் அளிப்பது கும்பாபிஷேகம். கும்பாபிஷே
கத்தைக் குடமுழுக்கு என்று தமிழில் வழங்குவர். கும்பாபிஷேகம் செய்யப்பெற்ற
திருக்கோயில் மக்களுக்குப் பெருவாழ்வளிக்கும் அருள்தேக்கம், மின்சாரத் தேக்கம்,
நீர்த்தேக்கம் போலத் திருக்கோயிலும் ஒரு தேக்கம்.

ஆன்மா திருக்கோயிலில் லயிக்கின்றமையால் அதை ஆலயம் என்பர். ஆலயம் ஒரு
பசு, அதன்மடி கருப்பக்கிருகம். பசுவின் மடி பால் சுரத்தல் போல் கருப்பக்கிருகம்
திருவருள் சுரக்கிறது. பால் உடலுக்கு ஆதாரமானாற்போல் திருவருள் உயிருக்கு
ஆதாரம். இந்த ஆதாரம் இம்மைக்கேயன்றி- மறுமைக்கும் பயன் தருமாதலால். அரு
ளில்லாதவர்க்கு அவ்வுலகம் இல்லை என்பர்.

கருப்பக்கிருகமாகிய மடியில் முலைக்காம்புபோல உள்ளது மூலமூர்த்தி. மூலமூர்த்தி
யைப் பிரதிட்டை செய்யும்போது முழு மூச்சளிப்பது கும்பாபிஷேகம். மூலத்தானம் ஒரு
ஞானவாபி. அதில் திருவருள் வெள்ளம் தேங்கிநிற்கும். அதைச் செழுநீர்த்திரள் என்று
தேவாரம் போற்றுகிறது. திருக்கோயில் திருவருள் சுரக்கிறது. மூலபண்டாரம் வழங்
குவதற்குத் திருக்கோயில் அழைக்கிறது. வாருங்கள் வாருங்கள் என்று மணி யோசை
கேட்கிறது.

## யந்திரஸ்தாபனம்

ஆலயத்தில் எவர் கண்ணிற்கும் புலப்படாமல், ஆதிமூலத்தில் மூலமூர்த்தியின்
பீடத்தின்கீழ் வைக்கப் பெற்றிருக்கும் ஒரு தகடு யந்திரம் ஆகும். அது பொன்,
வெள்ளி, செம்பு ஆகிய ஒரு உலோகத்தால் செய்யப்பெற்று, கோடுகள் வரையப்
பெற்று, மந்திர அட்சரங்கள் எழுதப் பெற்று, புனிதமாக்கப் பெற்று, மந்திரவுரு வேற்
றப் பெற்றுப் பீடத்தில் மறைத்து வைக்கப் பெற்று மருந்து சாத்தப் பெறுவதாகும்
இயந்திரத்தின் மேல் பிம்பம் தாபித்தலும், அது ஆடாமல் அசையாமல் இருப்பதற்
காக அஷ்டபந்தனம் என்னும் மருந்து சாத்துதலும், மந்திரங்கள் ஒலித்தலும், பல
விதநீர்த்தங்களால் அபிடேகஞ் செய்தலும் விதிகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேகம்

இறைவனை ஆலயத்தில் எழுந்தருளச் செய்து, அவரை அன்புடன் ஆராதனை செய்து, அருள்பாலித்தருளும் வண்ணம் நாம் வணங்குவதற்கு அவசியமான, ஆதாரமான, இயல்பான, ஈடுபடுத்துவனவாய், உடன்பாடான, ஊக்கமுள்ள, எடுப்பான, ஏதுவான, ஐயமில்லாத, ஒப்புரவான கிரியா கருமங்கள் உள்ளன. அவற்றுள் கும்பாபிஷேகம் என்னும் குடமுழுக்கும் ஒன்றாகும். ஆலயத்துக்கெனத் திரட்டப்பெற்ற பொருளில் மூன்றில் ஒருபாகம் கும்பாபிஷேகத்தின் பொருட்டுச் செலவிடல் வேண்டும் என்பது பொதுவிதி.

கும்பாபிஷேகம் என்பது குடத்தில் உள்ள புனித நீரைக் கொண்டு இறைவனை நீராட்டுதல் என்பது பொருள். சாதாரணமாக அவ்வாறே அபிடேகம் செய்வதும் வழக்கமும் விதியுமாகும். ஆனால் கும்பாபிஷேகம் என்னும் அபிடேகம் சிறப்பாக மந்திர பூர்வமாகப் பெருமளவில் கிரியைகள் மலியச் செய்வதொன்றாகும்.

கும்பாபிடேகம், ஆவர்த்தம், புனராவர்த்தம், அனாவர்த்தம், அந்தரிதம் என நால்வகைப் பிரதிஷ்டைகளின்போது நடைபெறும் பெருங்கிரியையாகும். ஆவர்த்தம் என்பது புதிதாக நிர்மாணிக்கப்பெற்ற திருக்கோயிலில் செய்வதாம். புனராவர்த்தம் என்பது பழுதுபட்டு சீர்குலைந்த ஆலயத்தைப் பழுது திருத்திப் புதுக்கியமைத்துப் பல பாகங்களையும் அழகுபடுத்திய வேளையில் செய்வதாம். இது செய்யும் வேளையிலே தான் ஆலயத்தின் மூலமூர்த்தி முதலான தெய்வத் திருவுருவங்கள் பாலஸ்தாபனஞ் செய்து நாளாந்த பூசைகளைச் செய்கிறார்கள். அனாவர்த்தம் என்பது திருக்கோயிலில் ஏதாவது தாறுமாறாப் பிறழ்வாக நடைபெற்றால் அக்குற்றங்கள் நீங்குவதற்குப்பிராயச்சித்த பூர்வமாகச்செய்யப்பெறுவது. அந்தரிதம் என்பது திருமேனிகளான பிம்பங்களில் ஏதாவது பிளவுகள், வெடிப்புக்கள், குறைவுகள் உண்டாதல் ஆலயத் திரவியங்கள் களவுபோய்க் குறைவுகள் உண்டாதல் முதலிய வேளைகளில் குறை நீக்கிச் செய்வதாம்.

இவ்வாறாக ஆவர்த்தம், புனராவர்த்தம் என்னும் இரண்டு வேளைகளிலும் செய்யும் கும்பாபிஷேகம் பெருமளவில் எவ்வித லோபமுமின்றிச் செய்வதாகும். புனராவர்த்தம் பன்னிரண்டாண்டுகளுக்கொரு முறை செய்தல் உத்தமோத்தமம். இத்தகைய கும்பாபிஷேகப் பெருவிழாவைக் கண்கொண்டு பார்த்தல் பிறவியெடுத்ததன் பெரும்பேறு என்பர்.

## கும்பம்

சாதாரணமாகச் சைவச் சடங்குகள் சமஸ்காரங்கள் நடைபெறும் போதெல்லாம் நடு நாயகமாக நிறைகுடம் வைக்கும் வழக்கத்தில் கும்பம் இடம்பெறுகிறது. புரட்டாதி மாதத்தில் நடைபெறும் நவராத்திரி விழாவுக்குக் கும்ப பூசை என்றே பெயர். திருக்கோயிலில் கொடியேறித் திருவிழா நடைபெறும்போது யாகசாலையில் கும்பம் இடம்பெறுகிறது. கும்பம்வைப்பதற்கு தங்கம், வெள்ளி, தாமிரம் முதலிய உலோகங் பயன்தருகின்றன. இவற்றுள் தாமிரமே பெருவழக்கில் உள்ளது. தாமிரம் மின்சாரத் தையீர்ப்பது போல மந்திரவொலியையும் ஈர்க்கும் தன்மை வாய்ந்தது.

செப்புக்குடத்தில் உள்ள நீர், யாகசாலையில் வேதமந்திரங்கள் ஓதும் ஒலியை ஈர்த்து, ஓசை ஒலியெலாமான இறைவனை மூலத்தானத்து மூர்த்தியில் லயிக்கச் செய்கிறது மந்திரவொலி பாய்ச்சப்பெற்ற மூல மூர்த்தி சாந்நித்தம் பெற்று அருள் சுரக்கிறது. அதற்கு ஆதாரமாக அடிப்பாகத்திலே தங்கத்தகடு அல்லது வெள்ளி, தாம்பரத்தகடு மந்திரம் பாய்ச்சப்பெற்று வைக்கப்பெறுகிறது. அது ஒரு பரம இரகசியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பத்தில் வருணபகவான், கண்கண்ட தெய்வ நதிகளான கங்கை முதலிய நீர்களில் நிரம்புகிறார்' கங்கைநீர் கிடையாவிட்டால் எந்த நீரையும் பாவனையால் கங்கையாகக் கொள்வது சம்பிரதாயமும் சடங்குமாகும். சாதாரணமாகத் தீபாவளி நாளில் நீராடுதல் கங்கா ஸ்நானமாகும்.

## கும்பலட்சணம்

கும்பலட்சணம் கூறுங்கால் அதிலே போர்த்த புடைவை தோலாகவும் கும்பம் சிவப்பேறப் பூசிய மண் இரத்தமாகவும், குடத்துமண் மாமிசமாகவும், கும்பத்துநீர் மேதஸாகவும், தர்ப்பையினாற் செய்த கூர்ச்சம் எலும்பாகவும் நன்றாக நாற்புறமும் சுற்றிய நூல் நரம்பாகவும், கும்பத்துள் இடம்பெற்ற இரத்தினம் பொன் பூ சுக்கிலமாகவும், நியசிககப்பெற்ற மந்திரம் உயிராகவும், கீழே பரப்பிய நெல், அரிசி எள், பயறு உளுந்து, துவரை, கோதுமை, என்பன ஆசனமாகவும் கொள்ளப்பெறும். இஃது பாவனையின் உச்சம், பயனளிப்பதிலும் உச்சம். பக்தி வயப்படுத்துதலிலும் உச்சம் எனவேதான் இவ்வித கிரியா கிரமகாலங்களில் மக்கள் ஆயிரவராக ஆலயத்தை மொய்க்கிறார்கள். இது சைவப்பண்பாண்டின் உச்சம்.

## கும்பாபிஷேக கிரியை

ஆலயத்தை எவ்வாறமைத்தல் அதிலே மூர்த்தியை எவ்வாறு பிரதிட்டை செய்தல் என்பன வாதிய கிரியைகளைக் கூறும் ஆகமம், கும்பாபிஷேகத்துக்குச் சிறப்பிடம் கொடுத்துள்ளது. கும்பாபிஷேகம் கிரமமாகச் செய்யும் நெறியில் ஆசாரியவரணம், விப்ராநுக்ஞை, தேவாநுக்ஞை, விக்னேசஸம் பூஜநம், வாஸ்துசாந்தி, ரட்சோக்ன ஹோமம், பிரவேசபலி, தேனுவாசம் என்னும் கோபூசை, புண்ணியாக வாசனம், விப்ரயோஜனம், நவக்கிரகமகம், ஸம்ஹிதா ஹோமம், காஷ்டாஹோமம், சாந்தி ஹோமம், மூர்த்தி ஹோமம், மிருத்ஸங்கிரஹணம், அங்குரார்ப்பணம், ஆசார்யரட்சாபந்தனம், பிரசன்னபூஜை, யாக அலங்காரம், கும்பாலங்காரம், கலாகர்ஷணம், யாத்ராஹோமம், யாத்திராதானம், கடம் உலா, யாகசாலைப் பிரவேசம், யாக பூசை ஹோமம், யந்திரஸ்தாபனம், இரத்தினநியாஸம், பிம்பஸ்தாபனம், அஷ்ட பந்தனம், பிம்பசுத்தி. ரட்சாபந்தனம், தத்துவதிரயோசனம், யாஹாவஸாநகம், யாத்திராதானம், கிரஹப்பிரத்தானம், கும்பஉத்தாபனம், கும்பலிங்கசம்யோஜனம், மஹாகும்பாபிஷேகம், சாங்கோபாங்க பூஜை, மஹாபிஷேகம், திருக்கல்யாண உற்சவம், எஜமான உற்சவம், அவபிருதஸ்நானம், ரட்சாவிஸர்ஜனம், மண்டலாபிடேகம் பூசை, சகஸ்ரசங்காபிடேகம், சண்டயாகம் என்பனவாகும். இவற்றில் குற்றங்குறைகள் இன்றிச்செய்தல் நாட்டின் சுபீட்சத்துககு ஏதுவாகும், பிழைகள் உண்டானால் பீடை உண்டாகும். பீடை உண்டாகாதிருப்பதற்காக மூலமந்திரத்தாலும் அஸ்திரமந்திரங்களாலும் ஹோமம்செய்து நிறைவுசெய்தல் பூரணாகுதியாகும்.

## கும்பத்தை எழுந்தருளச் செய்தல்

யாகசாலையில் உருவேற்றப் பெற்ற கும்பங்களை மூர்த்திகளுக்கு அபிடேகிப்பதற்கு எடுத்துச் செல்லும் காட்சி அற்புதமானது, பக்திமயமானது. கண்ணீர்மல்கச் செய்வது. பல்லியங்கள் ஒலிப்ப, வேதமந்திரங்கள் ஒலிப்ப திருமுறைகள் ஒலிப்ப பக்தர்களின் பஜனை கோஷங்கள் ஒலிப்ப அடியார்கள் மலர்மாரி பொழிய, இராஜ கெம்பீரத்தோடு கொடி குடை ஆலவட்டம் சாமரையாகிய உபசாரங்கள் மலிய சிவப்பிராமணர் சிரசின் மேல் பயபக்தியுடன் கும்பங்களைச் சுமந்து செல்வதைப் பார்ப்பது ஒரு பேறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகா கும்பாபிஷேகம்**

நல்ல நேரம் முகூர்த்தம் பார்த்துக் குடத்துநீரை மூலமூர்த்தி, பரிவாரமூர்த்திகள்
விமானத்துக்கலசம் முதலிய இடங்களில் அபிடேகம் செய்வதைக் கண்ணாற் காணும்
பேறு மனிதப் பிறப்பெடுத்த பயனாகும்.

**எஜமானர் அபிஷேகம்**

கும்பாபிஷேகத்துக்குப் பெரும்பொருள் செலவிட்டு முன்னின்று சங்கற்பஞ்செய்து
கிரியையாதியன செய்தவர் எஜமான் என வழங்கப்பெறுதலோடு; நிலம், நீர், தீ, வளி
ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதங்களோடும்; சூரியன், சந்திரன் ஆகிய சுடர்களோ
டும் சேர்த்து எட்டாம் இடத்தில் எண்ணப்பெற்று நிலவும் பேறுபெற்வருமாவர்.
இறைவனுறையும் இயமானன் அவர் எனவே அவருக்கும் அபிடேகம் செய்யப்பெறு
கிறது. (1984)



UNIVERSITY OF JAFFNA LIBRARY
University of Jaffna
250218
Library
UNIVERSITY OF JAFFNA LIBRARY PERIODICAL DIVISION
ARCHIVES
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
250218

"வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுந்து வரும்"

★ மணங்கவர் டிசைன்களில் முகூர்த்தப்பட்டுப் புடவைகள்
★ உள்நாட்டு வெளிநாட்டு சாறிவகைகள்
★ பெண்களுக்கான ஸ்கேட் அன் பிளவுஸ் பஞ்சாபிவகைகள்
★ ஆண்களுக்கான சேட்டிங், சூட்டிங் ஆடைவகைகள்
★ எவர்சில்வர்; பான்சிகுட்ஸ்; றேடியோ, மணிக்கூட்டு வகைகள்

அனைத்தையும் மலிவாகவும் தரமாகவும் பெற

# ★ சந்திரன் பான்சி பலஸ் ★

நவாலிறோட், -- ஆனைக்கோட்டை.

(போட்டோஸ்ரட் பிரதிகளும் எடுத்துக் கொடுக்கப்படும்.)

"வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்கிற்பாம்"

— சேக்கிழார் புராணம்.

UNIVERSITY OF JAFFNA LIBRARY FEB PERIODICAL DIVISION

# கோகுலன் குளிர்சோலை
&
# கேசன் எலக்ரோனிக்ஸ்

பிரதான வீதி, : : சங்கானை.

"அல்லல் போம் வல்வினை போம்
அன்னை வயிற்றில் பிறந்த தொல்லைபோம்
போகாத் துயர் போம் - நல்ல
குணமதிக மாமதுரைக் கோபுரத்தில் வீற்றிருக்கும்
கணபதியைக் கைதொழுதக் கால்"

★

★ 'பாண்' வகைகள் ★ 'பணிஸ்' வகைகள்

★ 'பிஸ்கற்' வகைகள் ★ 'கேக்' வகைகள்

என்பவற்றை

தரமாகவும் நிறைவாகவும்

பெற்றுக்கொள்ள

★

# முருகன் பேக் ஹவுஸ்

துணவிச்சந்தி, சங்கரத்தை.

noolaham.org | aavanaham.org

ஏழாலை மஹாத்மா அச்சகம், கந்தர்மடம்.

PILLAIYAR OFFSET PRINTERS NALLUR